1 அக்டோபர் 1994 □ ரூ. 3.00
www.padippakam.com

அயோத்தி: சாமியாரை வைத்து அரசியல் ஆதாயம்

# புதிய ஜனநாயகம்




## விவசாயத்தை விழுங்கும் இறால் முதலாளிகள்

படிப்பகம்

www.padippakam.com

# கொதிகலன் வெடித்துப் பலியான பெண் தொழிலாளர்கள்

திருச்சி தில்லைநகரில் குளுக்கோஸ் திரவம் (Saline Water) தயாரித்து வரும் நிறுவனம் ''டியாரெக்ஸ் லேபரட்டரீஸ்'' இத்தொழிற்சாலையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் பெண்கள். கடந்த 7.8.94 ''ஸ்டெரிலைசர் டாங்க்'' எனப்படும் கொதிகலன் வெடித்ததில் 14 பெண்களுக்கு உடலெங்கும் அபாயகரமான முறையில் காயமேற்பட்டது. பொது மருத்துவமனையில் உரிய சிகிச்சை உடனடியாகத் தராததால் மகேசுவரி, ரேவதி, பாமா என்ற மூன்று பெண்களும் இறந்து போயினர். மீதிப் பெண்களும் அடுத்தடுத்து இறந்து போகும் அபாய நிலையில் தான் உள்ளனர். இந்நிலையில் அந்நிறுவனத்தின் முதலாளிகளோடு போலீசும் — அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு ''இப்பெண்களின் கவனக் குறைவினால்தான் விபத்து நேர்ந்தது'' என மிரட்டி எழுதி வாங்கிக் கொண்டு சம்பவத்தை மூடி மறைக்க முயற்சித்து வருகின்றனர்.



இம் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தி திருச்சி - பெண்கள் விடுதலை முன்னணியின் துண்டறிக்கை வெளியிட்டுள்ளதுடன், 19/08/94 அன்று நாற்பது பெண்களை அணி திரட்டி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன் கொலையாளிகளைத் தண்டிக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். காயமடைந்த பெண்களுக்கு முறையான சிகிச்சையளிக்கவும் இறந்து போனவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கவும் பாதுகாப்பற்ற நிறுவனத்தை நடத்தி வந்த முதலாளியையும் அனுமதி வழங்கிய கொதிகலன் ஆய்வாளர், தொழிற்துறை ஆய்வாளர், தொழிலாளர் நல அலுவலர் ஆகிய அதிகாரிகளைத் தண்டிக்கவும் நீதி மன்ற விசாரணைக்கு உத்திரவிடக் கோரியும் மனு ஒன்றை கொடுத்தனர். ''நியாயம் கிடைக்கும் வரையில் நாங்கள் போராட்டத்தைத் தொடர்வோம்'' என எச்சரித்து உள்ளனர்.

# ஆலையை அரசு ஏற்கக் கோரி தொ.பி.கு. எழுப்பிய போர்க்குரல்!

கோவை சிங்கநல்லூர் பகுதியிலுள்ள வசந்தா மில் கடந்த 11 வருடங்களாக இயங்காமல் மூடிக் கிடக்கிறது. இப்பஞ்சாலையில் வேலை பார்த்து வந்த 1500 தொழிலாளர்கள் நடுவீதிக்குத் துரத்தப்பட்டதுடன் கடந்த 11 வருடங்களாக அனுபவித்த துயரங்கள் சொல்லிமாளாது. இதனிடையே பத்து மாதங்களுக்கு முன்பாக கோவை — சேரன் டவர்ஸ் குரூப் முதலாளி K.C. பழனிச்சாமி இப்பஞ்சாலையை தான் ஏற்று நடத்துவதாக அனுமதி பெற்றார். ஆனால், அவர் மில்லை மீண்டும் இயக்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கை எடுக்காததுடன், ஆலையினுள்ள இயந்திர சாதனங்களையும் காலி மனைகளையும் கள்ளத்தனமாக விற்பதிலேயே குறியாகச் செயல்பட்டு வருகிறார்.

இதற்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக மில் வளாகத்தினுள் இருந்த 100 தொழிலாளர் குடும்பங்கள் உடனே காலி பண்ணச் சொல்லி நிர்ப்பந்திக்கப்பட்டனர். தொழிலாளர்கள் இதை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவே K.C. பழனிச்சாமி, ''தொழிலாளர்கள் வீடுகளைக் காலி செய்யாததால்தான் மில்லைத் திறக்க முடியவில்லை'' என அவதூறு பரப்பி தொழிலாளர் ஒற்றுமையைக் குலைக்க சதி செய்தார்.

ஏ.ஐ.டி.யு.சி. உள்ளிட்ட துரோக தொழிற்சங்க தலைவர்கள் முதலாளிக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்ததோடு, செங்காளியப்பன் உள்பட பல தலைவர்கள் தாங்களே தொழிலாளர்களிடம் வீடுகளை காலி செய்வதற்குக் கையெழுத்துப் பெற்றனர். 'மார்க்சிஸ்டு'களோ கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கைப் பார்த்ததை தவிர துரும்பைக் கூட அசைக்கவில்லை. தற்பொழுது மில் வளாகத்தினுள் செவிலியர் கல்லூரியொன்றைத் திறந்திருக்கிறது மில் நிர்வாகம்.

மில் நிர்வாகத்தின் மோசடித் தனத்தையும், தொழிற்சங்க தலைவர்களின் துரோகத்தையும் அம்பலப்படுத்தி தொழிலாளர்கள் மத்தியில் கோவை தொ.பி.கு. வீச்சாக பிரச்சாரம் செய்தது. போராட்டத்தின் முதற் கட்டமாக 17/8/95 அன்று மில்லின் முன்பாக பஞ்சாலையை அரசே ஏற்கக் கோரி முழக்கம் எழுப்பும் (தர்ணா) போராட்டத்தினை தொ.பி.கு. நடத்தியது. போராட்டத்தில் 15-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ''இதில் ம.க.இ.க.வினர் உள்ளனர்; அவர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்புள்ளது. எனவே புகைப்படம் எடுப்போம்'' என சட்டம் பேசியது, காவல் துறை. தொ.பி.கு. பொறுப்பாளர் சந்திரசேகர், ''ம.க.இ.க.வினரை வெளியே போகச் சொல்லுகிறோம்; ஆனால் புகைப்படம் எடுப்பதை அனுமதிக்க முடியாது'' என போலீசின் குதர்க்க புத்தியை முறியடித்தார். ம.க.இ.க. தோழர்கள் பந்தலுக்கு வெளியே இருந்து போராட்டம் முடியும்வரை ஆதரவளித்தனர். சட்ட ரீதியாக அனுமதிப்பெற்ற இப்போராட்டத்தை எந்த தொழிற்சங்கமும் ஆதரிக்க முன் வரவில்லை.

பாதிப்புக்குள்ளாகும் தொழிலாளர்கள் நிதியுதவி செய்து தார்மீக ஆதரவைத் தெரிவித்தனர். ''ஒப்பந்தப்படி தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை கூட வாங்கித் தராத வக்கற்ற தலைவர்கள்'' என துரோக தொழிற்சங்க தலைமையை காறி உமிழ்ந்தனர். மில் தொழிலாளி ஒருவர் மிகுந்த ஆர்வத்தோடு தானே சுவரொட்டிகள் எழுத்திக் கொடுத்தார். சோமசுந்தரம் பஞ்சாலையைச் சேர்ந்த கணேசன் போராட்டத்தை வாழ்த்திப் பேசினார். இப்போராட்டத்தின் பின் மில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகையினை அளித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் எங்கும் தனியார்மய மாக்கமும் நவீன மயமாக்கல் என்ற பெயரில் தொழிலாளர்களை வெளியேற்றுவதும் நட்ட கணக்கு காட்டி ஆலைகளை இழுத்து மூடுவதுமாக தொழிலாளர்கள் மீதான தாக்குதலை அரசும் முதலாளிகளும் கூட்டு சேர்ந்து அதிகரித்திருக்கும் சூழலில், தொழிலாளர்கள் துரோக தொழிற்சங்கங்களைக் கண்டு மனம் வெதும்பினால் மட்டும் போதாது. ஆலை வேறுபாடின்றி தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு புரட்சிகர தொழிற்சங்க தலைமையின் கீழ் ஒரே அமைப்பில் அணி திரள்வதும், தங்களின் வாழ்க்கை நலனுக்கான கோரிக்கைகளோடு, அரசியல் உரிமைகளுக்காக போராடுவதும்தான் பிரச்சினைகளின் நிரந்தர தீர்வுக்கான வழியில் தொழிலாளர்களை இட்டுச் செல்லும்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு*

ஒன்பதாம் ஆண்டு

**20-21**

1-31 செப்டம்பர் '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

முகப்போவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4. சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ''தடா'' சட்டம் ரத்தாகுமா?
# முஸ்லீம்களின் ஓட்டுக்காக ஜனநாயக மாய்மாலம்

பயங்கரவாத பாசிச கருப்புச் சட்டமான "தடா" (TADA) இன்று நாடு தழுவிய அளவில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மக்கள் ஜனநாயக உரிமைக்கான இயக்கங்களின் விடாப்பிடியான போராட்டம், சர்வதேச பொது மன்னிப்புக் கழகத்தின் (Amnesty) பகிரங்க விமர்சனம், அரசே நிறுவியுள்ள தேசிய மனித உரிமைக் கமிஷனின் நேரடியான குற்றச்சாட்டு ஆகியவற்றால் ''தடா'' சட்டம் இப்போது அம்பலப்பட்டுப் போயுள்ளது. மத்திய அமைச்சர்களான சவாண், ராஜேஷ்பைலட், ஜாபர் ஷெரீப் முதலானோர் இச்சட்டம் தவறாகப் பிரயோகிக்கப்பட்டு, நிரபராதிகள் வதைக்கப்பட்டுள்ளதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இப்பயங்கரவாத ''தடா'' சட்டப்படி ஒருவரை வெறும் சந்தேகத்தின் அடிப்படையில், முதல் தகவல் அறிக்கை (F.I.R.) கூடத் தராமல் விசாரணையின்றி ஈராண்டுகளுக்குச் சிறையில் அடைக்க முடியும். ''தடா'' கைதிகள் பிணையில் வெளிவர முடியாது. விசாரணை ரகசியமாகவே நடக்கும். ''தடா'' கைதியிடமிருந்து உண்மையை வரவழைக்க போலீசார் எத்தகைய காட்டுமிராண்டித்தனமான சித்திரவதையும் செய்யலாம். ''தடா'' கைதி தான் குற்றமற்றவர் என்பதை தானே நிரூபித்துக் கொள்ள வேண்டும். இத்தகைய கடும் விதிமுறைகள் காலனிய கால ரௌலட் சட்டத்தில் கூட இருந்ததில்லை.

அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் உயிர் வாழும் உரிமையையும் பறிக்கும் இக்கொடிய கருப்புச் சட்டத்தைக் கொண்டு பஞ்சாப் போலீசார் அப்பாவி மக்களைப் பீதியூட்டிப் பணம் பறிக்கவும், தங்களின் பழிவாங்கும் வெறிக்காகவும் கேடாகப் பயன்படுத்தினர். குஜராத்தில் கைது செய்யப்பட்ட 19,000 ''தடா'' கைதிகளில், தங்களது உரிமைக்காகப் போராடிய தொழிலாளர்கள், மாணவர்களோடு அப்பாவிப் பெண்களும் ஏதுமறியாத குழந்தைகளும் கூட அடங்குவர். பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பிறகு, நிரபராதிகளான முஸ்லீம்கள் மீது இக்கொடிய சட்டத்தை ஏவி காங்கிரசு அரசு வதைத்தது. தமிழகத்தில் புலிகளை ஒடுக்குவது என்ற பெயரில் ''தமிழன்'' என்று சொன்னாலே பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி புரட்சியாளர்களையும், ஈழ விடுதலை ஆதரவாளர்களையும் பார்ப்பன - பாசிச ஜெயா அரசு சிறையிலடைத்தது.

நாடு முழுவதுமுள்ள 69,000 தடா கைதிகளில் மூன்றிலொரு பங்கினர் பயங்கரவாத பிரச்சினையற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். ஜனநாயக உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் (PUDR) ஓர் ஆய்வின்படி பஞ்சாபில் தடாவின் கீழ் கைது செய்யப்பட்ட 15,000 பேரில் 112 பேர் மீதுதான் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் காரணமின்றி இன்னமும் சிறையில் வதைபடுகின்றனர். தமிழகத்தில் மூன்றாண்டுகளாக சிறைக் கொடுமையை அனுபவித்த கோவை இராமகிருட்டிணன், ஆறுச்சாமி உள்ளிட்ட 9 பேர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ''தடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று இப்போது நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1985-லிருந்து 9 ஆண்டு காலமாக நீட்டிக்கப்பட்ட இப்பயங்கரவாதச் சட்டம், பலமுனைகளிலும் அம்பலப்பட்டு எதிர்ப்புகள் பெருகத் தொடங்கியதும் காங்கிரசு பாசிஸ்டுகள் இப்போது ஜனநாயக மாய்மாலங்களை அவிழ்த்து விடுகின்றனர். ''தடா'' சட்டத்தை மறுபரிசீலனை செய்வோம்; மீண்டும் நீட்டிக்க மாட்டோம்; அவசியமானால் ரத்து செய்வோம் என்று சவடால் அடிக்கின்றனர். இச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதாக மாநில அரசுகள் மீது பழிபோட்டு விட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றனர். குறிப்பாக, குஜராத்திலும் மகாராஷ்டிராவிலும் இவ்வாண்டு இறுதிக்குள் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற உள்ளதால் ''தடா'' சட்டத்தால் வதைக்கப்பட்டு காங்கிரசு ஆட்சி மீது வெறுப்படைந்துள்ள சிறுபான்மை முஸ்லீம்களிடம் மீண்டும் நம்பிக்கையைப் பெறவும் ஓட்டுப் பொறுக்கவும்தான் காங்கிரசுப் பெருச்சாளிகள் மனித உரிமை பற்றி கூச்சல் போடுகின்றனர்.

இத்தனைக்கும் பிறகும், போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக் கட்சியும் மிகக் கொடிய பாசிச கருப்புச் சட்டமான ''தடா''வை முற்றாக ரத்து செய்வதைப் பற்றி வாய் திறக்கவில்லை. முறை கேடாகப் பயன்படுத்துவதைத்தான் அவை எதிர்க்கின்றன. ஆளும் வர்க்கப் பத்திரிகைகளும் இதே கருத்தையே எதிரொலிக்கின்றன. காங்கிரசுக் கட்சியிலும் கூட சில மந்திரிகள் சவடால் அடிக்கின்றனரே தவிர, மத்திய அரசோ அமைச்சகமோ வாய் திறக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், கடந்த ஆண்டில் ''தடா'' சட்டத்தை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 400-க்கும் மேற்பட்ட மனுக்களை ஒரே நாளில் தள்ளுபடி செய்து, அரசியல் சாசனப்படி இச்சட்டம் நியாயமானதுதான் என்று ராவ் அரசின் நிலையை ஆதரித்து உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது.

பயங்கரவாத ''தடா'' சட்டம் மட்டுமல்ல. ''மிசா'', தேசிய பாதுகாப்புச் சட்டம், கலவரப் பகுதிச் சட்டம், குண்டர்கள் தடுப்புச் சட்டம் முதலான அடக்குமுறைச் சட்டங்கள் மட்டுமல்ல, சாதாரண விவகாரங்களுக்குக் கூட கருப்புச் சட்டங்கள் போடப்படுகின்றன. எம்.எல்.ஏ.க்களின் நடத்தையைப் பற்றி விமர்சிக்க தடைச் சட்டம், சுவரொட்டி தடைச் சட்டம், ஆழ்கிணறு வெட்ட அனுமதி பெறாவிட்டால் தண்டனை என்று அதிகார வர்க்க - போலீசு கும்பலிடம் வரம்பற்ற அதிகாரங்கள் குவிக்கப்படுகின்றன. இப்படி எப்போதும் எதாவதொரு கொடிய கருப்புச் சட்டம் மக்களின் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கிறது. ''தடா''வை ரத்து செய்வதாக காங்கிரசு பாசிஸ்டுகள் இப்போது பதுங்கினாலும் மீண்டும் இன்னொடு பாசிச சட்டத்துடன் பாயவே செய்வர். எனவே காங்கிரசுப் பெருச்சாளிகளின் ஜனநாயக மாய்மாலங்களைக் கண்டு உழைக்கும் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. படர்ந்து வரும் பாசிச அபாயத்துக்கு எதிராகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவுமான தமது போராட்டத்தைக் கைவிடவும் கூடாது.

படிப்பகம்

www.padippakam.com

# விவசாயத்தை விழுங்கும் இறால் முதலாளிகள்

சீர்காழி தாலுகாவில் காவிரி நதியின் கடைமடைப் பகுதியில் அமைந்துள்ள பெருந்தோட்டம், தென்னாம்பட்டினம், வனகிரி, காட்டூர் கிராமங்கள் முப்போகம் விளையக்கூடிய மிகுந்த வளமான பூமியுடையவை. இன்று பெருந்தோட்டத்தில் மட்டும் 1200 ஏக்கர் பரப்பளவுள்ள விளைநிலத்தை ஸ்ரீராம், மேக்னா போன்ற மிகப் பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் இறால் வளர்ப்புக்காக விலைக்கு வாங்கிவிட்டன. இக்கிராமத்தின் மொத்த விளைச்சல் நிலப் பரப்பளவே 2,080 ஏக்கர்தான். மேலும், நாகை - காயிதே மில்லத் மாவட்டத்தில் மட்டும் இறால் வளர்ப்புக்காக வளைத்துப் போடப்பட்டுள்ள விளை நிலங்களின் மொத்த பரப்பளவில் இது நாலில் ஒரு பகுதியாகும்.

இப்படி தங்கள் வாழ்வு இறால் பண்ணைகளால் சிதைந்து போவதை எதிர்த்து அப்பகுதி கூலி விவசாயிகள் — இந்தியாவிலேயே நிலமற்ற கூலி விவசாயிகள் அதிகம் வாழும் பகுதி சீர்காழிதான் — ''லாஃப்டி'' மற்றும் கிராம சுயாட்சி இயக்கம் என்ற அரசு சார்பு மற்றும் தன்னார்வக் குழு அமைப்புகளில் திரண்டு போராடி வருகிறார்கள். தங்கள் வாழ்வுக்காக மட்டுமின்றி, நமது மாநிலத்தின் நெற்களஞ்சியமான அப்பூமி பாலையாக மாறிவிடக் கூடாது என்ற வாஞ்சையோடும் போராடி வரும் அவர்களை, கைது, பொய்வழக்கு, அவதூறு, சாதியைக் கொண்டு பேராட்டக்காரர்களிடையே பிளவுண்டாக்குவது, அவர்களின் அற்ப சொற்ப உடமைகளையும் அடியாட்களைக் கொண்டு தீயிட்டுக் கொளுத்துவது என இறால் பண்ணை முதலாளிகளோடு கை கோர்த்துக் கொண்டு ஜெயா அரசும் அடக்குமுறையை ஏவிவிட்டு வருகிறது. இந்த அடக்குமுறையையும் அதை எதிர்த்த கூலி விவசாயிகளின் போராட்டத்தையும் தென்னாம்பட்டினம் சம்பவம் தமிழகத்தில் மட்டுமின்றி நாடு முழுவதற்கும் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

''சொர்ணம் மச்சுவா'' என்ற நிறுவனம் இறால் பண்ணை அமைப்பதற்காக தென்னாம்பட்டினம் கிராமத்தில் 12 ஏக்கர் நிலத்தை கடந்த நான்கு மாதங்களுக்கு முன் விலைக்கு வாங்கியது. நிலத்தை வாங்கிய பொழுதே இறால் பண்ணை தொடங்குவதை எதிர்த்து எச்சரித்திருந்தனர் கூலி விவசாயிகள். இடைப்பட்ட காலத்தில் இறால் பண்ணை எதிர்ப்பாளர்களிடையே சாதியைக் கொண்டு பிளவை ஏற்படுத்தியது அந்நிறுவனம். பின் கடந்த ஜூலை இறுதியில் ''புல்டோசர்''களைக் கொண்டு கட்டுமானப் பணிகளைத் தொடங்கியது. முதற்கட்டமாக, நிலத்தைச் சீர்படுத்துவதற்கு வந்த புல்டோசர் முன் பெண்களும் குழந்தைகளும் அமர்ந்து மறியல் செய்தனர். மறியல் செய்த பெண்களை மண் கட்டிகளைக் கொண்டு தாக்கியும் அவர்களின் மீது படுத்தும் ஆபாசமாகத் திட்டியும் அப்புறப்படுத்த முயன்றனர் நிறுவனத்தின் அடியாட்கள். ஆனாலும் கூலி விவசாயிகள் அத் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்து கட்டுமானப் பணிகளை முடக்கினர்.

பின் மீண்டும் கிராம சுயாட்சி இயக்கத்தினர் ஆகஸ்ட் முதல் நாளன்று மயிலாடுதுறையில் இறால் பண்ணை முதலாளிகளுக்கும் - ஆதரவாளர்களுக்கும் எதிராக பேரணியினையும் பொதுக் கூட்டமொன்றையும் நடத்தியதுடன், 500-க்கும் அதிகமானோரை திரட்டி வந்து ''சொர்ணம் மச்சுவா'' நிறுவனம் கட்டுமானப் பணிகளைத் தொடர்வதைத் தடுத்து நிறுத்தினர். இம்முறை இறால் பண்ணை முதலாளிகள், தென்னாம்பட்டினத்திலுள்ள இறால் பண்ணை ஆதரவாளர்களுடன், கிராம சுயாட்சி இயக்கத்தினர் டிராக்டர்களில் வெளியேற முடியாதபடி சாலைகளைத் தடுத்தனர். பின் காவல்துறை உதவியுடன் வேறு வழியாக வெளியேறிச் சென்றனர்.

மறுபடியும் ஆகஸ்ட் 4-ந் தேதியன்று பண்ணை வேலைகள் தடுக்கப்பட்ட பொழுது, புல்டோசரைத் தாக்கி சேதப்படுத்தியதாக 18 கூலி விவசாயிகள் மீது போலீசு வழக்குத் தொடர்ந்தது. மேலும், பண்ணை ஆதரவாளர் ஒருவரது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தியதாகவும் வழக்குகள் ஜோடிக்கப்பட்டன. கைதானவர்களில் பெண்களும் 200 கி.மீட்டருக்கு அப்பாலுள்ள திருச்சி மத்திய சிறையில் கிரிமினல் குற்றவாளிகளோடு சேர்த்து அடைக்கப்பட்டனர்.

இதனையடுத்து ஆகஸ்ட் 10-ந் தேதி 1000-த்துக்கும் அதிகமான இறால் பண்ணை எதிர்ப்பாளர்கள் திரண்டு தென்னாம்பட்டினத்தில் மறியலில் ஈடுபட வந்தனர். இதனை முன்பே அறிந்திருந்த இறால் பண்ணை முதலாளிகள் அன்று தாங்களே வேலையை நிறுத்தி விட்டதோடு, தங்களது ஆதரவாளர்களையும் கிராமத்தை விட்டு வெளியேறச் சொல்லியுள்ளனர். இதனால் எதிர்ப்பாளர்கள் மறியலில் ஈடுபடாது தங்கள் கிராமங்களுக்குத் திரும்பும் பொழுது பாதுகாப்பிற்கு நின்ற போலீசாருடன் தகராறு ஏற்பட்டது. துப்பாக்கிகளோடு இருந்த போலீசாரின் மீது விவசாயிகள் கற்களைக் கொண்டு தாக்க, போலீசார் வானில் சுட்டு பீதியுறச் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

பின் போலீசின் துணையோடு இறால் பண்ணை முதலாளிகளும் ஆதரவாளர்களும், எதிர்ப்பில் முன்னணியில் இருந்த தென்னாம்பட்டினத்தைச் சேர்ந்த 36 கூலி விவசாயிகளின் வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தியதோடு, 20 பேரின் மீது கிரிமினல் வழக்கும் பதிவு செய்தனர். பண்ணை முதலாளிகள், ''எதிர்ப்பாளர்கள் காசுக்கு ஆசைப்பட்டு தங்கள் குடிசைகளுக்குத் தாங்களே தீயிட்டுக் கொண்டனர்'' என்றும் அவர்கள் விடுதலைப் புலிகளின் மற்றும் கடத்தல்காரர்களின் ஆதரவாளர்கள் என்றும் அவதூறு பரப்பி வருகின்றனர். பத்திரிகைகளோ ''கூலி விவசாயிகள் இறால் பண்ணை ஆதரவாளர்கள் வீட்டைக் கொளுத்தி விட்டதாக'' உண்மைக்குப் புறம்பாக திரித்து எழுதின.

இச்சம்பவம் பற்றி விசாரிக்க வந்த மனித உரிமை கழகத்தினரை போலீசார் கிராமத்தினுள் நுழைய அனுமதிக்கவில்லை. அவர்கள் தங்களது அறிக்கையில் ''கொளுத்தப்பட்ட வீடுகள் தாழ்த்தப்பட்டோருக்குச் சொந்தமானவை'' எனத் தெரிவித்துள்ளனர். பொய் வழக்கு, போலீசின் தேடுதல் வேட்டை காரணமாக இக் கிராமப்புறத்தைச் சேர்ந்த ஆடவர்கள் பெரும்பாலோர் கிராமத்தினுள் நுழைய முடியாது தலைமறைவாக இருந்து வருகின்றனர்.

இன்று தஞ்சை மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் மட்டும் 10,000-க்கும் அதிகமான பரப்பளவில் இறால் பண்ணைகள் அமைந்துள்ளன.

**இறால் பண்ணை கட்டுமான பணிக்கு எதிராக தென்னாம்பட்டினம் மக்கள் நடத்தும் முற்றுகைப் போராட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

இந்நிலங்களில் பெரும் பகுதி கடனில் மூழ்கிப் போன சிறு - நடுத்தர விவசாயிகள், பண்ணைகளுக்கு விற்பனை செய்தவையாகும். எனவே இறால் பண்ணை எதிர்ப்பியக்கம் கூலி விவசாயிகளோடு சிறு - நடுத்தர விவசாயிகளையும் இணைத்துச் செயல்பட வேண்டியிருப்பதோடு, அப்பகுதி விவசாயிகளின் குறிப்பான தேவைகளையும் - தஞ்சைப் பகுதியைப் பொறுத்தவரை காவிரி நதிநீர் பிரச்னையைத் தீர்க்கக்கோருவது; பாசன - வாய்க்கால் வழிகளை மராமத்து செய்யக் கோருவது போன்றவை — கோரிக்கைகளாக முன் வைக்க வேண்டும். மேலும் இறால் வளர்ப்பு விவசாயத்தைப் புறக்கணிக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையின் அங்கமாக அமைவதால், அரசையும் அம்பலப்படுத்துவதாக அமைய வேண்டும். இவ்வாறான கோரிக்கைகளை முன் வைத்துப் போராடும் பொழுதுதான் இறால் பண்ணை அதிபர்கள் இயக்கத்தை சாதி ரீதியாகவோ வர்க்கரீதியாகவோ பிளக்க இயலாது போகும்.

இறால் பண்ணை அதிபர்கள் எதிர்ப்பாளர்களை போலீசைக் கொண்டும் அடியாட்களைக் கொண்டும் தாக்கும் பொழுது எதிர்த்து முறியடிப்பதோடு, மக்கள் ஆதரவு பெருகும் பகுதிகளில் தானே முன்கையெடுத்து இறால் பண்ணைகளைத் தாக்கி சேதப்படுத்தும் வண்ணம் போர்க்குணமிக்கதாகவும் எதிர்ப்பியக்கம் அமைய வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு அடுத்து இறால் பண்ணைகளால் பாதிக்கப்படும் மீனவர்களை அமைப்பாக்கியும், நிலத்தடி நீர் - சுற்றுப்புற சூழல் மாசு படுவதைப் பிரச்சாரம் செய்து நகர்ப்புறங்களில் உள்ள சமூக அக்கறை கொண்ட பிரிவினரையும் எதிர்ப்பியக்கத்திற்கு ஆதரவாகச் செயல்பட வைக்க வேண்டும்.

கிராம சுயாட்சி இயக்கத் தலைமை கூலி விவசாயிகளை மட்டுமே அணி திரட்டுவதோடு, குறிப்பிட்ட பகுதிக்குள்ளேயே போராட்டத்தைச் சுருக்கிவிடுகிறது. மேலும் மறியல், ஊர்வலம், பொதுக் கூட்டம் என்ற காந்திய வழி போராட்டங்களை மட்டுமே கையிலெடுத்து விவசாயிகளைப் பலிகடா ஆக்குவதுடன் அவர்களின் முன் முயற்சியினையும் தடை செய்து போர்க்குணத்தை மழுங்கடித்து வருகிறது. 'மார்க்சிஸ்ட்' கட்சி உண்ணாவிரதமிருந்தும், இந்திய மக்கள் முன்னணியினர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியதுடன் தங்கள் கடமை முடிந்து விட்டதாகத் திருப்தி கொண்டு விட்டனர். பிற ஓட்டுக்கட்சிகளோ ஒப்புக்குக்கூட இன்னும் ஒப்பாரி வைக்கவில்லை. சீர்காழி பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தீ வைப்பைக் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டினர். அப்பகுதி விவசாயிகளின் குறிப்பான கோரிக்கைகளோடு இறால் பண்ணை எதிர்ப்பை இணைந்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ●

# அயோத்தி: சாமியாரை வைத்து ஆதாயம் தேடும் காங்., பா.ஜ.க.

அரசியல் தேவைகளையொட்டி உத்தமனாக பகல் வேடங்கட்டி நடிப்பதும் சூழல் மாறிய பின் நம்பிய அப்பாவி மக்களின் முதுகில் நயவஞ்சமாகக் குத்துவதும் காங்கிரசின் வரலாற்று பாரம்பரியம். பிரதமர் ராவ் கடந்த ஜூலை மாதம் டெல்லியில் நடந்த மூன்றாண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் ''எந்தவித அரசியல் கட்சிகளின் தலையீடின்றி (அதாவது பா.ஜ.க.-வின் தலையீடின்றி) சங்கராச்சாரிகள் - மடாதிபதிகள் தலைமையில் பாபர் மசூதி வளாகத்தில் இராமர் கோயில் கட்டப்படும்'' என அறிவித்ததன் மூலம் அப்பாரம்பரியத்தின் முடிசூடா மன்னனாக மாறிவிட்டிருக்கிறார்.

பாபர் மசூதியினை இந்து மத வெறியர்கள் தகர்த்த பின், ''இராமர் கோயிலோடு, இடிக்கப்பட்ட மசூதியும் கட்டித் தரப்படும்'' என முழங்கினார் ராவ். சென்ற ஆண்டு 'சுதந்திர' தின உரையின் பொழுதுகூட முஸ்லீம் மக்களுக்கு இந்த 'உறுதியினை' மீண்டும் கூறினார். ஆனாலும் இந்து மதவெறியர்களுக்குப் பணிந்து எந்த இடத்தில் மசூதி கட்டப்படும் எனத் தெளிவாக அவர் கூறவில்லை. தற்பொழுதோ அயோத்தி வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறும் முன்பே, கோயில் கட்டுவதை மட்டும் அறிவித்து மசூதி பற்றி மௌனம் சாதிப்பதன் மூலம், கிணற்றில் தள்ளிவிட்டு தலையிலும் கல்லைத் தூக்கிப் போட்ட கதையாக முஸ்லீம் மக்களின் வரலாற்று உரிமையை அப்பட்டமாகவே பறித்தும் கொண்டுவிட்டார்.

அறிவித்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை ராவ் அரசு. சிருங்கேரி சங்கராச்சாரியர் சுவாமி பாரதி தீர்த்தா ''சதுர்மாஸ்யா'' எனும் பார்ப்பன நோன்புக்காக தொடர்ந்து நான்கு மாதங்கள் தலைநகரில் தங்க வந்திருப்பது ''ராம ஜென்மபூமி பிரதிஸ்தான்'' எனும் டிரஸ்டை அமைப்பதை நோக்கிய முதல் நடவடிக்கையாக எதிர்பார்க்கப்படுகிறது. பாரதி தீர்த்தாவும் தான் வந்திறங்கியவுடனேயே, ''இராமர் கோயில் அரசியல் தலையீடின்றி மடாதிபதிகள் - சாமியார்கள் மூலம்தான் கட்டப்பட வேண்டும்'' என அறிவித்தது இந்த எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

> காங்கிரசு, பாரதீய ஜனதா மற்றும் சைவ - வைணவ சாமியார்களிடையே வரலாற்று உண்மைக்கு மாறாக பாபர் மசூதி வளாகத்தினுள் இராமர் கோயிலைக் கட்ட வேண்டும் என்பதில் கருத்து வேறிபாடில்லை.

சிருங்கேரி சங்கராச்சாரியாரின் தலைமையின் கீழ் துவாரகா, பூரி, காஞ்சி சங்கராச்சாரிகள் மற்றும் பிற மடாதிபதிகள் என 12 உறுப்பினர்களைக் கொண்ட ''டிரஸ்டை'' அமைக்கவும், அதனிடத்தில் பாபர் மசூதி வளாகத்தையும் அதை ஒட்டி அமைந்துள்ள 70 ஏக்கர் நிலத்தை ஒப்படைக்கவும் மத்திய அமைச்சர்கள் அஜீத் சிங், அர்ஜுன் சிங், ரெங்கய்யா நாயுடு மற்றும் பிரதமரின் தனிச் செயலாளர் ஜிதேந்திர பிரசாத் ஆகியோர் மும்மரமாக முயன்று வருகின்றனர். ''வி.இ.ப-வில் உள்ள சாமியார்களையும் உள்ளடக்கியதாக இந்த டிரஸ்டு அமையவேண்டும்'' என இந்நான்கு சங்கராச்சாரியார்களும் கருதுவதால், வி.இ.ப. சாமியார்களான சுவாமி வாம தேவ், நிருத்யா கோபால்தாஸ் ஆகியோரிடமும் இரகசியமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது ராவ் அரசு.

பா.ஜ.க. கூட இராமர் கோயில் பிரச்சினையை ஒதுக்கி வைத்துவிட்டு பிற பிரச்சினைகளில் கவனம் செலுத்தி வரும்பொழுது, காங்கிரசு இதனை அரசியல் அரங்கில் முன்னுக்குக் கொண்டு வந்திருப்பதற்கு காரணம் இல்லாமலில்லை. முதலாவதாக தனது ஊழல் நடவடிக்கைகள், மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ள பொருளாதார சீர்திருத்தங்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டியுள்ளது; இரண்டாவதாக இந்த ஆண்டின் இறுதியிலும் '95-ன் தொடக்கத்திலும் கர்நாடகா, ஆந்திரா, பீகார், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டசபை தேர்தல்கள்.

''பிரச்சினைகளற்ற விதத்தில் இராமருக்குக் கோயில் கட்டுவதில் பா.ஜ.க.வை விடத் தனக்குக் கூடுதல் அக்கறையுண்டு'' எனக் காட்டிக் கொள்வதன் மூலம் தனது கட்சியின் தேர்தல் வெற்றியை உத்திரவாதப்படுத்திக் கொள்ள



படிப்பகம்

www.padippakam.com



டெல்லியில் சிருங்கேரி சங்கராச்சாரி: காங்கிரசு அளிக்கும் ராஜ மரியாதை.

முயலுகிறார் ராவ். கோயில் கட்ட ''டிரஸ்ட்டை'' அமைக்க அறிவித்ததன் மூலம், இந்துக்களின் ஒரே பாதுகாவலன் நான் தான்'' என மார்தட்டும் பா.ஜ.க.வைத் தனிமைப்படுத்தலாம். அதோடு, அரசு மற்றும் சங்கராச்சாரிகள் என்ற போர்வையின் கீழ் மறைந்து கொண்டு இதனைச் செய்வதால், மிதவாத இந்துக்களின் ஓட்டுகளையும் பெற்றுவிடலாம் எனக் கணக்குப் போட்டு காரியத்தில் இறங்கியுள்ளது ஆளும் காங்கிரசு கும்பல்.

மறுபுறம் பா.ஜ.க. கடந்த ஆண்டு வட மாநிலங்களில் நடந்த தேர்தல்களில் ''இராமர் கோயில் பிரச்சினையை'' மட்டுமே மையமாக வைத்து சூடு போட்டுக் கொண்டதன் காரணமாக, காங்கிரசுடன் இதில் நேரடியாகப் போட்டியில் இறங்கவில்லை. ஆனால், ''அமையப் போகும் இராமர் கோயிலின் சன்னதி இப்பொழுது தற்காலிகமாக அமைந்திருக்கும் கோயிலுள்ள இடத்தில்தான் அமைய வேண்டும்'' என எச்சரித்திருக்கிறது. அதே சமயம், தான் இளவு காத்த கிளியாக ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காக, தடை செய்யப்பட்ட வி.இ.ப.ன் பினாமி அமைப்பான ''இராமஜென்ம பூமி நியாஸை'' முன்னிறுத்தி காங்கிரசுடன் மோதி வருகிறது. ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள் இரண்டும் ''நியாஸை'' ஆதரிப்பதாக அறிவித்துள்ளன.

காங்கிரசு கடந்த ஆகஸ்டு மாதமே ''டிரஸ்டை'' அமைத்துவிடுவதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்க, நியாஸ் தனது பங்குக்கு நாடு முழுவதும் அரசு எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தது. ''பாபர் மசூதி வளாகத்தில் இராமர் கோயிலை மட்டுமே கட்ட வேண்டும் என பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்; சங்கராச்சாரியார்கள் போன்ற சைவ சாமியார்கள் இராமர் கோயிலைக் கட்டக் கூடாது; பாபர் மசூதி வளாகப் பகுதியினை தனது வசம் ஒப்படைக்க வேண்டும்'' என நாளும் ஒவ்வொரு கோரிக்கைகளை அறிவித்து அரசை எச்சரிக்கத் தொடங்கியது. மேலும் நியாஸின் இக் கோரிக்கைகளை வலியுறுத்தி நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அக்டோபரில் ஊர்வலம் நடத்தவும் திட்டமிடுகின்றனர் இந்து வெறியர்கள். பஜ்ரங்தள் அமைப்பின் தலைவரும் பா.ஜ.க. எம்.பி.யுமான வினய்கத்யார், ''அரசு கட்டும் கோவிலை நாங்கள் கர சேவர்களை அழைத்து வந்து இடித்துத் தள்ளுவோம்'' என நேரிடையாகவே மிரட்டுகிறார்.

## ஹுப்ளி: பா.ஜ.க., கொடியேற்ற முயன்று மதவெறியாட்டம்

இந்துக்களின் ஓட்டுக்களைக் கைப்பற்றி அதன் மூலம் ஆட்சியதிகாரத்தைப் பிடிக்க துடிக்கும் பா.ஜ.க., இதற்குக் கையாளும் ஒரே வழி முஸ்லீம் மக்களின் மீது வெறுப்பைத் தூண்டுவதும் மதக் கலவரத்திற்கு வித்திடுவதும்தான், பா.ஜ.க.வின் இக் கோரமுகம் ''ஹுப்ளி பிரச்சினை'' யின் மூலம் மீண்டும் ஒருமுறை வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது.

கர்நாடக மாநிலம் ஹுப்ளி நகரிலுள்ள ஈத்கா மைதானத்தின் மீது யாருக்கு உரிமையுண்டு என்பது தொடர்பான வழக்கு கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஹுப்ளி நகராட்சிக்கும் ''அஞ்ஜுபன் இஸ்லாம்'' எனும் அமைப்புக்குமிடையே நடந்து வருகிறது. கடந்த '91 - ம் வருட பாராளுமன்ற தேர்தலில் அம் மாநிலத்தில் இரண்டாம் இடத்தை எட்டிப் பிடித்துள்ள பா.ஜ.க., தனது பிடியை மேலும் வலுவாக்க ''ஈத்கா மைதான'' பிரச்சினையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. 92-ம் ஆண்டு ''ஏக்தா யாத்திரையின்'' இறுதியாக காஷ்மீரில் 'குடியரசு' நாளன்று ஜோஷி கொடியேற்றியதை ஒட்டி, மாநில பா.ஜ.க. கிளையும் ''ஈத்கா மைதானத்தில்'' தடையை மீறி கொடியேற்றியது. அப்பொழுது தொடங்கியே கடந்த இரு வருடங்களாக ஒவ்வொரு 'சுதந்திர' மற்றும் 'குடியரசு' நாளன்றும் இம் மைதானத்தில் கொடியேற்றப் போவதை அறிவித்து மாநிலமெங்கும் மதக் கலவரத்திற்கான வித்துக்களை விதைப்பதை வாடிக்கையாக்கிக் கொண்டது. காங்கிரசும் தன் பங்குக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இழுத்தடித்து ஆதாயம் தேட முயலுகிறது.

இம்முறை ஆண்டு இறுதியில் கர்நாடக சட்டசபை தேர்தல் வருவதைக் கணக்கில் கொண்டு தனது வெகுஜன அமைப்புக்குப் பதிலாக, பா.ஜ.க. தானே களத்தில் குதித்தது. அக் கட்சியின் உப தலைவர் சிக்கந்தர் பக்த் மற்றும் எம்.பி. உமா பாரதி இருவரையும் இவ்வெறியாட்டத்திற்கு தலைமையேற்க அனுப்பி வைத்தது பா.ஜ.க தலைமை. ஆகஸ்டு முதல் தேதியில் இருந்தே மாநிலமெங்கும் பொதுக்கூட்டங்கள் நடத்தி மதக் கலவரங்கள் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்த முயன்றனர். ஆகஸ்டு 15 அன்று ஐயாயிரம் பேருக்கும் அதிகமான கும்பலொன்று மைதானத்தை நோக்கி வரும் பொழுது நடந்த துப்பாக்கி சூட்டில் ஐவர் பலியாகினர். இதனிடையே மைதானத்தில் கொடியேற்றி விட்டதாகவும் வதந்தியினைப் பரப்பியது, பா.ஜ.க.

மொய்லி அரசு ஆகஸ்ட் 13 அன்றே உமா பாரதியைக் கைது செய்ததாகக் கூறினாலும், அடுத்த நாளே அவர் பத்திரிகையாளர்களிடம் ''தோட்டாக்களை எதிர்கொள்வோம்'' எனப் பேட்டியளித்ததோடு, ஆகஸ்டு 15 அன்று மைதானத்தை நோக்கி வந்த ஊர்வலத்திற்கு அவரே தலைமையேற்றார். இதோடு மாநிலத்தின் பிற பகுதிகளிலிருந்தும் பா.ஜ.க. குண்டர்கள் ஹுப்ளி நகர் நோக்கி வந்ததை கர்நாடக அரசு தடுக்க முயற்சிக்கவில்லை. இவ்வாறு மத வெறியர்களிடம் ஆரம்பத்தில் நீக்கு போக்காக நடந்து கொண்டு இறுதியில் துப்பாக்கி சூடு நடத்தியது பா.ஜ.க.-வுக்குத் தங்களை தியாக சீலர்களாக நாடெங்கும் தம்பட்டம் அடிக்கவும், வசதியாக ஓட்டுப் பொறுக்குவதற்குமே வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



மதப் பண்டாரங்களைப் பின்னிருந்து இயக்கும் வி.இ.ப.வின் செயலர் அசோக் சிங்கால்.

**கா**ங்கிரசுக்கும் பா.ஜ.க.வுக்கும் இராமர் கோயில் கட்டுவது தொடர்பாக தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினையே, சங்கராச்சாரியர்களையும் உள்ளிட்டு பிற முக்கிய இந்து மத சாமியார்களை எப்படி தங்கள் பக்கம் அணி சேர்ப்பது என்பது தான். காங்கிரசு மசூதி இடிக்கப்பட்டவுடனேயே இதற்கான முயற்சியில் இறங்கத் தொடங்கியது. அயோத்தியில் கையகப் படுத்திக் கொண்ட நிலப்பகுதியை, மைய அரசு தான் விரும்பும் அமைப்பிற்கு மாற்றிக் கொடுக்கும் வண்ணம் ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறை வேற்றியது. முன்னாள் மந்திரி ரெங்கராஜன் குமாரமங்கலம், சேஷன், சுப்பிரமணிய சுவாமி மூவரையும் தனது தூதுவர்களாக சங்கராச்சாரியார்களிடம் அனுப்பி வைத்தது. கடந்த வருடம் ஜூன் மாதம் பூரி, துவாரகா, சிருங்கேரி, காஞ்சி சங்கராச்சாரியார்களைக் கூட்டி, "அரசு கையகப்படுத்திய நிலத்தை மதத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்" என அறிவிக்கச் செய்தது.

காங்கிரசின் நேரடி விசுவாசி துவாரகா சங்கராச்சாரியாருக்கும் சிருங்கேரி சங்கர மடத்துக்குமிடையே அரசின் "டிரஸ்டின்" தலைமையைக் கைப்பற்ற போட்டி நிலவுவதால், பிரதமர் தனது தனிச் செயலாளர் தலைமையில் மூன்று அதிகாரிகளை அவரை இணங்க வைக்க அனுப்பியுள்ளார். ராவ் ஜோதிர் மட சங்கராச்சாரியை அடுத்து சிருங்கேரியையும் தனது பக்கம் இழுத்துக் கொள்ள கடந்த மே மாதம் இரகசியமாக முயன்றது வி.இ.ப.

அம் முயற்சி தோல்வியடைந்த பின்னும் சிருங்கேரி சங்கராச்சாரியார் டெல்லிக்கு வந்த பொழுது காங்கிரசுடன் போட்டி போட்டுக் கொண்டு அவரை வரவேற்க மாநில நிர்வாகத்தை முடக்கி விட்டது, பா.ஜ.க. முதல்வர் குரானா, அத்வானி, ஜோஷி, வாஜ்பேய் என பா.ஜ.க. தலைவர்கள் அனைவரும் நேரிடையாக வந்து அவரை தரிசித்தனர். சிருங்கேரி - காஞ்சி சங்கராச்சாரியார்களிடையே மோதல் நிலவி வருவதால், அசோக் சிங்கால் ஜெயேந்திரரைச் சந்தித்து, "சங்கராச்சாரியார்களைக் கொண்டு அமையும் டிரஸ்டு நியாஸுக்கு ஆலோசனை கூறும் அமைப்பாக உருவாக்கிட" ஆதரவு கேட்டார். மறுபுறம் தென்னகத்து சாமியார்களை ஒருங்கிணைத்துக் கொண்டு, தென்னாங்கூர் மடாதிபதி மூலம் சங்கராச்சாரியார்களுக்கு எதிராக அறிக்கைவிடச் செய்தார்.

இராமருக்காக முட்டி மோதிக் கொள்ளும் அதேசமயம் காங்கிரசு - பா.ஜ.க, சைவ - வைணவ சாமியார்கள் இவர்களுக்குள்ளே பாபர் மசூதி வளாகத்தினுள் இராமர் கோயிலைக் கட்ட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. சாமியார்களும் பா.ஜ.க. கும்பலும் "அயோத்தி பகுதியில் பாபர் மசூதியைத் திரும்ப கட்டக் கூடாது" என வெளிப்படையாகவே சொல்லித் திரிகிறார்கள். காங்கிரசோ நேரிடையாக இதை ஆதரித்தால் தனது 'மதச்சார்பின்மை' முகமூடி மேலும் அம்பலமாகிவிடும் என்பதால் மௌனமாக இருந்து கழுத்தறுக்கப் பார்க்கிறது.

இப்படி உலகின் மிகப் பெரிய 'சனநாயக' நாட்டின் முக்கியமானதொரு பிரச்சினையின் சூத்திரதாரிகளாக இந்து மதப் பண்டாரங்கள் மாறிவிட்டிருக்கிறார்கள். "பாபர் மசூதிப் பகுதியில் இராமர் கோயில் கட்டக் கூடாது; உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வரும் முன்னரே அயோத்தியில் அரசு கையகப்படுத்தியுள்ள நிலப்பகுதியை தன்னிச்சையாக யாருக்கும் கொடுக்கும் உரிமை கிடையாது" என பாபர் மசூதி இயக்க ஒருங்கிணைப்புக் கமிட்டி மத்திய அரசை எச்சரித்திருக்கிறது. பிற ஓட்டுக் கட்சிகளோ இன்னும் இதைப்பற்றி வாயைத் திறக்கவே யில்லை. நாளை தேர்தல் நேரத்தில் இது முக்கிய பிரச்சினையாக மாறுமாயின், அவர்கள் "மசூதியையும் சேர்த்துக் கட்டிக் கொடுங்கள்" என ஓட்டுப் போடும் வேலையைத்தான் செய்வார்கள்; தவிர முஸ்லீம் மக்களின் வரலாற்று உரிமையினைப் பறிக்கும் இந்துமத வெறியர்களை அம்பலப்படுத்தத் துணியமாட்டார்கள். இந்த நயவஞ்சகமும் கையாலாகத்தனமும் நமது நாட்டு முஸ்லீம் மக்களின் மீது மட்டும் விழுந்த அடியல்ல; இந்திய அரசின் இப் போலி மதச் சார்பின்மையை இன்னும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் அனைவரின் மீதும் விழுந்த அடியாகும்.

— ரஹீம்

## வி.இ.ப. தடை செய்யப்பட்ட அமைப்பா?

வி.இ.ப. தடை செய்யப்பட்ட அமைப்பு எனினும் "ஸ்ரீராம ஜென்ம பூமி நியாஸ்" என்ற சாமியார்களின் கூடாரத்தை அதன் தலைவர்கள் வெளிப்படையாகவே மேற்பார்வையிட்டு இயக்கி வருகின்றனர். இதோடு கடந்த ஏப்ரலில் பாபர் மசூதி வளாகத்தைக் கைப்பற்றுவோம் என வி.இ.ப. பெயரிலேயே அறிக்கை விடுத்தார் அதன் செயலர் அசோக் சிங்கால். அரசு அமைக்கும் "டிரஸ்டை" எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டத்தையும் அவ்வமைப்பு நடத்தவுள்ளது. இது தவிர அயோத்தியைத் தூய்மைப்படுத்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் யாகம் ஒன்றினை நடத்தவும், மூலாயம் அரசு மூன்று மசூதிகளைப் புனரமைக்க நிதியுதவி செய்திருப்பதை எதிர்த்தும் போராட்டங்களை அறிவித்துள்ளார் அசோக் சிங்கால். நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சாமியார்களை முன்னிறுத்தி வி.இ.ப. கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் அவர். தடை செய்யப்பட்ட அமைப்பிற்கு ஆதரவாக எழுதுபவர்களை "தடா" வில் கைது செய்யும் அரசு, அசோக் சிங்காலையும் அவரது பரிவாரங்களையும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. "டிரஸ்டு" சம்மந்தமாக கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இரகசிய பேரங்களில் அரசு மூழ்கியிருக்கையில், வி.இ.ப.வோ தான் அமைக்க உத்தேசித்துள்ள இராமர் கோயிலுக்காக தூண்களைக் கட்டத் துவங்கிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## இலங்கையில் ஆட்சி மாற்றம்:

# பிறவி ஊனம்

**பாசிச – பயங்கரவாத யு.என்.பி. அரசுக்கு மாற்றாக வந்துள்ள சந்திரிகாவின் புதிய கூட்டணி அரசால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.**

அண்டை நாடான இலங்கையில், அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் கடந்த 17 ஆண்டுகளாக அந்நாட்டை ஆண்ட பாசிச-பயங்கரவாத சிங்கள இனவெறி பிடித்த ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P.) தோல்வி அடைந்துள்ளது. எதிர்க் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ''மக்கள் கூட்டணி'' ஆட்சியைப் பிடித்துள்ளது. இலங்கையின் முன்னாள் முதல் பெண் பிரதமரான சிரிமாவோ பண்டார நாயகாவின் மகளான சந்திரிகா குமாரதுங்கா அந்நாட்டின் புதிய பிரதமராகியுள்ளார். ஆயினும் 225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில், இக்கூட்டணி 113 இடங்களை மட்டுமே கைப்பற்றி மயிரிழைப் பெரும்பான்மையிலேயே ஆட்சி அமைத்துள்ளது.

இக் கூட்டணியில் சேராமல் தனியே போட்டியிட்ட ஈழத் துரோகிகளான ப்ளாட் (PLOTE) 3 இடங்களையும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) 5 இடங்களையும் கைப்பற்றி புதிய ஆட்சிக்கு வெளியிலிருந்து ஆதரவு தருவதாகக் கூறியுள்ளன. வடக்கே புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ் மக்கள் இத்தேர்தலைப் புறக்கணித்துவிட்ட நிலையில், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தயவில் போட்டியிட்ட ஈழத்துரோகி டக்ளஸ் தேவாவின் ஈ.பி.டி.பி, ஒவ்வொரு தொகுதியிலும் விரல் விட்டு எண்ணக்கூடிய வாக்குகளைப் பெற்று 9 இடங்களில் 'வெற்றி' பெற்றுள்ளது. தெற்கே தொண்டைமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 7 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. இக்கட்சிகள் புதிய ஆட்சிக்கு பிரச்சினை அடிப்படையில் ஆதரவளிப்பதாகக் கூறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் மதச் சிறுபான்மையினரின் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் 7 தொகுதிகளில் வெற்றி பெற்று இலங்கை அரசியலில் புதிய சக்தியாக வளர்ந்துள்ளது. அதே சமயம் இந்தியாவின் விசுவாச எடுபிடிக் கும்பலான ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் டெலோ துரோகிகள் ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை.

குறிப்பாக, கடந்த 17 ஆண்டு காலமாக பாசிசக் கொடுங்கோலாட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தேர்தல் பலத்த அடியைக் கொடுத்துள்ளது. 1977-லிருந்து பற்றிப் பரவி வந்த தமிழீழ உரிமைப் போராட்டத்தை மிருகத்தனமாக நசுக்கியும், பல்வேறு தமிழீழப் போராளிகளையும் அப்பாவி தமிழ் மக்களையும் கொன்று குவித்து வெறியாட்டம் போட்ட கட்சிதான் ஐக்கிய தேசியக் கட்சி. ஈழப் பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை; அதற்கு ராணுவத் தீர்வுதான் ஒரே வழி என்று கொக்கரித்துக் கொண்டு அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது யு.என்.பி. அரசு. தமிழீழ உரிமைப் போர் தீவிரமடைந்ததும், அப்பாவி தமிழ் மக்கள் மீது வான் வழி ''ஷெல்'' தாக்குதல் நடத்தியும், தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டும், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் பொருளாதார முற்றுகையை விதித்தும் இனவெறி பாசிசக் கொடுங்கோன்மை அரசாக அது கொட்டமடித்தது.

தமிழ் மக்கள் மட்டுமின்றி, சிங்கள இனத்திலேயே 'இடதுசாரி' தீவிரவாத இயக்கமாக வளர்ந்து வந்த ஜே.வி.பி. இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களை மிருகத்தனமாக சுட்டுக் கொன்றது. இதற்கென்றே பச்சைப் புலிகள் எனும் அரசு பயங்கரவாதக் கொலைப் படையை முன்னாள் அதிபர் பிரேமதாசா கட்டியமைத்து இளைஞர்களை நர வேட்டையாடினார். இதுதவிர, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்து தமிழீழம் உருவாகிவிடக் கூடாது என்பதற்காகவே கிழக்கே சிறுபான்மை முஸ்லீம்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே யு.என்.பி. அரசு இனவெறியைக் கிளறிவிட்டு நூற்றுக்கணக்கானோரின் உதிரத்தை உறிஞ்சிக் குடித்தது.

இலங்கையின் புதிய பிரதமர் சந்திரிகா



எதிர்க்கட்சிகள், குழுக்களின் முக்கியப் பிரமுகர்களை ரகசியமான முறையில் அழித்தொழிப்பது மட்டுமின்றி, ராணுவம் - போலீசு - அதிகார வர்க்கத்திலும் கூட அதிருப்தியாளர்களையும் பாசிச யு.என்.பி. அரசு ரகசியமாகப் படுகொலை செய்தது. இதுவன்றி ஆளும் ஐக்கியத் தேசியக் கட்சிக்குள்ளேயே அதிகாரப் போட்டியில் குறுக்கே நிற்கும் தலைவர்களைக் கூட அது ரகசியமாக வேட்டையாடியது. மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்தும், கருத்துச் சுதந்திரத்துக்குக் கல்லறை கட்டியும், தொடர்ச்சியாக ஊரடங்கு உத்திரவுகள் போட்டு மக்களை வதைத்தும் இனவெறி பிடித்த பாசிச பயங்கரவாத அரசாகவே அது நீடித்தது.

கடந்த பத்தாண்டுகளாகத் தொடரும் ஈழப் போரின் காரணமாக பூதாகரமாகிவிட்ட இராணுவச் செலவுகள், அன்னிய மூலதனத்துக்கு கதவை அகலத் திறந்து விடும் தாராளமயக் கொள்கையால் பெருகிவரும் வேலையின்மை, விவசாயமும் நல்வாழ்வுத் திட்டங்களும் புறக்கணிக்கப்பட்டு வருவதால் அதிகரித்து வரும் வறுமை ஆகியவை காரணமாகவும், பாசிச - பயங்கராவாத அடக்குமுறையின் காரணமாகவும் இலங்கை மக்கள் யு.என்.பி. அரசு மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டிருந்தனர். இதுதவிர முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனேயின் அரசியல் ஓய்வு, பிரேமதாசாவின் படுகொலை ஆகியவற்றுக்குப் பிறகு ஆளும் யு.என்.பி. கட்சியில் மக்களைக் கவரும் செல்வாக்கு மிக்க தலைவர்களும் இல்லை. கட்சிக்குள்ளேயே ரணில் விக்கிரமசிங்கே ஒரு கோஷ்டியாகவும், காமினி திசநாயக ஒரு கோஷ்டியாகவும் நாய் சண்டையில் ஈடுபட்டனர். இந்நெருக்கடிகளிலிருந்து மீளவும், மக்களைத் திசை திருப்பவும் அவசரத் தேர்தலை அறிவித்தார் அதிபர் விஜயதுங்கே.

இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி இதர எதிர்க்கட்சிகளுடனும் முஸ்லிம் காங்கிரசுடனும் சேர்ந்து ஒரு தேர்தல் கூட்டணியை அமைத்தது. அதற்கு முன் கோஷ்டிப் பூசலாலும், அரசியல் செயலற்ற தன்மையாலும் முடங்கிக் கிடந்த சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியைத் துறந்த சிரிமாவோ பண்டார நாயகா தனது மகள் சந்திரிகாவை அப்பதவியில் அமர்த்தி கட்சிக்குப் புதிய தோற்றம் அளித்தார். வாரிசுச் சண்டையில் இறங்கிய தனது மகன் அனுரா பண்டார நாயகாவை கட்சியிலிருந்து வெளியேற்றினார். ஏற்கனவே மேற்கு மாகாண முதல்வராக இருந்த சந்திரிகாவை முன்னிறுத்தி தேர்தல் பிரச்சாரம் செய்வதும்



படிப்பகம்

www.padippakam.com

சுலபமாகியது. மேலும் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியதற்காக சிங்கள இனவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட குமாரதுங்காவின் மனைவி என்று அனுதாப வாக்குகளும் சந்திரிகாவுக்கு கிடைத்தது. இதுதவிர, இதுநாள் வரை யு.என்.பி. கூட்டணியிலிருந்த கட்சிகள் அதிலிருந்து விலகி எதிர்க் கட்சிகளின் கூட்டணியில் சேர்ந்ததும் தேர்தல் வெற்றிக்கு சாதகமாக அமைந்தது.

எதிர்க்கட்சிகள் பெற்றுள்ள இத்தேர்தல் வெற்றியானது. அக்கட்சிகளின் கொள்கை - லட்சியங்களுக்கு கிடைத்த வெற்றியாகக் கருத முடியாது. ஏனெனில், யு.என்.பி. அரசின் பாசிசக் கொடுங்கோன்மையால் அவதியுற்று வெறுப்பும் ஆத்திரமும் கொண்டிருந்த இலங்கை மக்கள் புதிய ஆட்சிக்காக எதிர்பார்த்துக் காத்திருந்தனர். மக்களது அதிருப்தி வாக்குகளைப் பெற்றே எதிர்க் கட்சிகள் இத்தேர்தல் வெற்றியைச் சாதித்துள்ளன; இன்னும் சொல்லப் போனால், சுதந்திரக் கட்சியே ஆளும் வர்க்கக் கட்சிதான். இலங்கை பெயரளவிலான சுதந்திரமடைந்த பிறகு 16 ஆண்டுகள் நாட்டை ஆண்ட அக்கட்சியால் நாடு எதிர்கொண்ட எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை. போலி இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து சோசலிசத்தின் பெயரால் அது நடத்திய கேலிக்கூத்தான ஆட்சியில் மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கூட கிடைக்காமல் ரேஷன் கடைகளில் அல்லற்பட்டதை இன்னமும் மறந்துவிடவில்லை. சிங்கள இனவெறியர்களுடன் சந்தர்ப்பவாத கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டு தமிழீழ மக்களின் நியாயமான உரிமைகளைப் பறித்ததையும் சிரிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இந்திய வம்சாவழித் தமிழர்களை நாடற்றவர்களாக்கியதையும் மறந்துவிடவில்லை. இருப்பினும் யு.என்.பி.யின் பாசிச ஆட்சிக்கு மாற்றாக, வேறு எந்த புதிய அரசியல் சக்தியும் இல்லாமல் போனதால், சுதந்திரக் கட்சிக் கூட்டணியை வெற்றி பெறச் செய்து யு.என்.பி. ஆட்சியின் மீதான தமது வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

தேர்தலில் தோல்வியடைந்த போதிலும் பாசிச யு.என்.பி. கட்சியின் பலம் இன்னமும் குறைந்து விடவில்லை. 94 இடங்களைக் கைப்பற்றி வலுவான எதிர்க்கட்சியாகவே நீடிக்கிறது. அதே சமயம் ஆட்சிக்கு வந்துள்ள மக்கள் கூட்டணியோ மயிரிழைப் பெரும்பான்மையில் தான் உள்ளது. இக் கூட்டணியிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இப்போதே தனி ஆவர்த்தனம் செய்கிறது. அதன் தலைவர் அஷ்ரப், ''நாங்கள் மக்கள் கூட்டணியில் ஓர் அங்கம் அல்ல; இது மக்கள் கூட்டணி மற்றும் முஸ்லிம் காங்கிரசின் கூட்டணி ஆட்சிதான்'' என்று இப்போதே அச்சுறுத்துகிறார்.



**பாசிச யு.என்.பி. கட்சியைச் சேர்ந்த அதிபர் விஜயதுங்கா; வரம்பற்ற அதிகாரம்**

மேலும் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை அவர் ஏற்கவில்லை. முஸ்லிம்களுக்குத் தனி மாகாண கவுன்சில் வேண்டும் என்று அவர் கோருகிறார். ''நாங்கள் தமிழர்களாயினும் மதச் சிறுபான்மையினர்; இதைப் புலிகளும் தமிழர் கட்சிகளும் அங்கீகரிக்காவிட்டால், எமது உரிமைக்காகப் போராடுவோம்'' என்கிறார். இந்நிலையில் இக் கூட்டணி ஆட்சி நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற நிலைமையில்தான் நீடிக்கும்.

மேலும் இலங்கையின் நாடாளுமன்ற ஆட்சி முறையானது அதிபரின் கரங்களில் வரம்பற்ற அதிகாரங்களைக் குவித்துள்ள ஆட்சி முறையாகும். தற்போதைய அதிபர் விஜயதுங்கா யு.என்.பி. கட்சியைச் சேர்ந்தவர். தற்போதைய அரசியல் சட்டப்படி, நாட்டை ஆளும் நிர்வாக அதிகாரம் அதிபரிடம் தான் உள்ளது; பிரதமரிடம் அல்ல. நாட்டின் முப்படைகளின் மீதான கட்டுப்பாடும், அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரமும், மாநில அரசுகளைக் கலைக்கும் ஏகபோக அதிகாரமும் அதிபரின் கையில்தான் உள்ளது. அதிபரின் வரம்பற்ற அதிகாரங்களைக் குறைத்து இந்தியாவைப் போன்று பிரதமரின் கையில் நிர்வாகப் பொறுப்பை மாற்றியமைக்க வேண்டுமானால் அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும். இதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு ஆதரவு தேவை. ஆனால் ஆட்சிக்கு வந்துள்ள மக்கள் கூட்டணியோ நூலிழைப் பெரும்பான்மையே கொண்டுள்ளது.

**பேச்சு வார்த்தைக்கு முன்வந்துள்ள புலிகள்**



இதுதவிர, கடந்த 17 ஆண்டு கால யு.என்.பி. ஆட்சியின் கீழ் இலங்கையின் அரசு எந்திரமும் இராணுவமும் பாசிச - பயங்கரவாத முறைகளில் பயிற்றுவிக்கப்பட்ட இனவெறிபிடித்த கும்பலாக வளர்ந்து விட்டது. இத்தகைய மிருக வெறி கொண்ட அரசு எந்திரத்தைக் கொண்டு புதிய ஆட்சியாளர்களால் நாட்டில் அமைதியையும் மக்களுக்கு நல்வாழ்வையும் ஒருபோதும் சாதிக்கவே முடியாது.

இந்த லட்சணத்தில் இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் விரைவில் அமைதியான தீர்வு காணப் போவதாக புதிய பிரதமர் சந்திரிகா அறிவித்துள்ளார். சிறுபான்மை இனங்களின் துறையை தன்பொறுப்பில் கொண்டிருப்பதன் மூலம், அதில் அக்கறை உள்ளவராகக் காட்டிக் கொள்கிறார். புலிகளும் அவரது முயற்சியை வரவேற்பதாகவும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்றும் அறிவித்துள்ளனர். இதர ஈழத் துரோக - சந்தர்ப்பவாதக் குழுக்களும் இம் முயற்சியை வரவேற்பதாகவும், கூறியுள்ளன. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தக் கட்சிகளும் குழுக்களும் நேற்று வரை யு.என்.பி. ஆட்சியை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்து வந்தவைதான். ஆனால், ஆட்சி மாறியதும் தாம் ஏதோ நடுநிலை வகிப்பது போல் காட்டிக் கொண்டு, புதிய ஆட்சியின் சமாதான முயற்சிகளை வரவேற்பதாக சந்தர்ப்பவாத நாடகமாடுகின்றன. அதிகாரத்திலுள்ள கட்சியை ஆதரிப்பதே இக் கட்சிகளின் துரோகக் கொள்கை என்பது இப்போது மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

இதே போல, சிறீலங்கா சுதந்திரக் கட்சியானது முன்பு யு.என்.பி. ஆட்சியில் எதிர்க்கட்சியாக இருந்த போது, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்த்து வந்தது. இப்போது ஆட்சிக்கு வந்ததும் பேச்சு வார்த்தை நடத்துவோம் என்கிறது. ஆளும் கட்சியாக இருக்கும் போது பேச்சு வார்த்தையும் அடக்குமுறையும் மேற்கொள்வது; எதிர்க்கட்சியாக இருக்கும் போது அதை எதிர்ப்பது என்பதுதான் யு.என்.பி மற்றும் சுதந்திரக் கட்சிகளின் பித்தலாட்டக் கொள்கையாக உள்ளது. ஆட்சி மாறியதும் இருகட்சி



படிப்பகம்

www.padippakam.com

களும் தமது பாத்திரத்தை மாற்றிக் கொண்டு இப்போது சந்தர்ப்பவாத நாடக மாடுகின்றன.

இந்நிலையில், சந்திரிகா அரசு தமிழீழப் பிரச்சினைக்கு தீர்வு காணும் என நம்புவது அடிமுட்டாள்தனமானது. சந்திரிகாவின் தேர்தல் அறிக்கையிலோ, பிரச்சாரத்திலோ அத்தகைய பருண்மையான திட்டம் எதுவுமில்லை. பத்தாண்டுகளாக போரில் சிக்கி நிலை குலைந்து போன தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே பொருளாதாரத் தடை நீக்கம் போன்ற ஆரம்ப சூரத்தனங்களைக் காட்டி பிரமையூட்டுகிறார். தமிழீழப் பிரச்சினையைப் பொருத்தவரை யு.என்.பி. கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் அடிப்படையில் வேறுபாடு எதுவும் கிடையாது. அவற்றின் அணுகுமுறையில் மட்டுமே வேறுபாடு உள்ளது.

இதன்படி, முந்தைய யு.என்.பி அரசைப் போல பாசிசப் புலிகளுடனும் இதர துரோகக் குழுக்களுடனும் ரகசிய பேச்சு வார்த்தைகள் - ரகசிய பேரங்கள் மூலம் மீண்டும் ஒரு துரோக ஒப்பந்தத்தைத் திணிக்க சந்திரிகா அரசும் முயற்சிக்கலாம். அத்தகைய முயற்சிகளுக்கு தமிழீழ மக்கள் ஒருபோதும் பலியாகி விட முடியாது. துரோகிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, பகிரங்கமான பேச்சு வார்த்தைகளுக்கு நிர்பந்திக்க வேண்டும். அதற்கு முன் நிபந்தனையாக வடக்கு மாகாணத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார - ராணுவ முற்றுகையை விலக்கவும், வான்வழி ''ஷெல்'' தாக்குதலை உடனடியாக நிறுத்தவும் கோரிப் போராட வேண்டும்.

பாகிஸ்தானில் ராணுவ சர்வாதிகாரி ஜியாவின் ஆட்சிக்கு மாற்றாக வந்த பெனாசிரின் ஆட்சியும் வங்கதேசத்தில் சர்வாதிகாரி எர்ஷாத்துக்கு மாற்றாக வந்த கலீதா பேகத்தின் ஆட்சியும் சர்வாதிகார எதிர்ப்பு சவடால் அடித்ததற்கு மேல் வேறொன்றையும் சாதிக்கவில்லை. அதேபோல, பாசிச - பயங்கரவாத யு.என்.பி அரசுக்கு மாற்றாக வந்துள்ள சந்திரிகாவின் கூட்டணி அரசாலும் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. ஏனெனில், இந்த ஆட்சிகள் அனைத்தும் ஆளும் வர்க்கங்களின் ஒரு பிரிவுக்குப் பதில் மற்றொரு பிரிவினரது ஆட்சி தானே தவிர, உழைக்கும் மக்களின் ஆட்சி அல்ல. எனவே, பிறவியிலேயே ஊனமாகிவிட்ட இப்புதிய கூட்டணி ஆட்சி மீது தமிழ் - சிங்கள உழைக்கும் மக்கள் நம்பிக்கை வைக்க முடியாது. தமிழீழ மக்கள் தாம் ஏந்தியுள்ள சுயநிர்ணய உரிமைப் பதாகையைக் கைவிடவும் கூடாது.

● பாலன்.

### ராஜீவ் கொலை 'சதி' வழக்கு:

# வெங்காயத் தோலை உரித்து வீரர்கள் கண்டதென்ன?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொல்லப்பட்டு மூன்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ராஜீவ் கொலைக்குப் பின்னர் உள்ள 'மாபெரும் சதி'யைக் கண்டறிவதற்காக ஆகஸ்ட் 1991-ல் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியான ஜெயின் தலைமையில் ஒரு நபர் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. இக்கமிஷன் நிறுவப்படுவதற்கு முன்னரே, ராஜீவ் கொலைக்குக் காரணம் விடுதலைப் புலிகளும் தி.மு.க.வும்தான் என்று தமிழக காங்கிரசுத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, பாசிச ஜெயலலிதா, சுப்பிரமணியசாமி முதலானோர் பகிரங்கமாகவே குற்றம் சாட்டினர். தங்களது தலைவர் சர்வதேச முக்கியத்துவமுடையவர் என்று காட்டுவதற்காக, புலிகள் - தி.மு.க. - சி.ஐ.ஏ.கூட்டுச் சதிதான் காரணம் என்று காங்கிரசுப் பெருச்சாளிகள் மேலும் அதை விரிவுபடுத்தினார்கள்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் தான், ராஜீவ் கொலைச் சதியைப் பற்றி விசாரிக்க ஜெயின் கமிஷன் அவசரமாக நியமிக்கப்பட்டது. ராஜீவ் கொலை வழக்கோடு நேரடியாக சம்பந்தப்படுத்தாமல், திராவிட இயக்கத்தினர் மற்றும் தமிழினவாதக் குழுக்கள் மீதும் சதிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தவும் அரசியல் பழிவாங்குதலுக்காகவும்தான் இந்தக் கமிஷனை காங்கிரசுப் பெருச்சாளிகள் அமைத்தனர். ஆனால் தாங்கள் விரித்த வலையில் தாங்களே சிக்கிக் கொள்வோமா என்ற பீதியில், இக்கமிஷனுக்கு உரிய ஒத்துழைப்பு

> ராஜீவ் கொலைக்குப் பின்னே 'மாபெரும் சதி' உள்ளதாக பெருங்கூச்சல் போட்ட காங்கிரசுக்காரர்கள் விசாரணையில் தாங்களும் சிக்கிக் கொள்வோமோ என்ற பீதியில் ஜெயின் கமிஷனின் அதிகாரங்களை முடக்கி வைத்துள்ளனர்.

தராமலும், சட்ட பூர்வமாகவே அதன் செயல்பாட்டைக் குறுக்கிச் சுருக்கியும் இக்கமிஷனின் கைகளைக் கட்டிப் போட்டுள்ளனர்.

#### கமிஷனை முடக்க நடந்த முயற்சிகள்

இந்தக் கமிஷன் உருவான சில நாட்களிலேயே, இலங்கையில் இனக் கலவரம் மூண்டு தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்த 1981-ம் ஆண்டிலிருந்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று நீதிபதி ஜெயின் அறிவித்திருந்தார். ராஜீவைக் கொலை செய்வதற்கு பின்னணியாக உள்ள நிகழ்ச்சிகளைப் பற்றி முழுமையாக ஆராயாமல் எந்தவொரு முடிவுக்கும் வர இயலாது என்று கூறியிருந்தார். கமிஷனின் இந்த முடிவைக் கண்டு காங்கிரசுப் பெருச்சாளிகள் பீதியடைந்தனர்.

ஏனெனில், 1981-ம் ஆண்டிலிருந்து விசாரணையைத் துவக்கினால் புலிகளுக்கும், ஈழத்துரோக குழுக்களுக்கும் இந்திய அரசு ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்த விவகாரம் அம்பலமாகும். அன்றைய தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆருக்கும் புலிகளுக்கும் இருந்த உறவுகள் தெரியவரும். இந்திய உளவு நிறுவனங்களான ''ரா''வும் ''ஐ.பி.''யும் ஈழப் போராளிக்குழுக்களுக்கு ஆயுத உதவியளித்து ஒன்றையொன்று மோதவிட்டு ரத்தம் குடித்த துரோகத்தனம் வெளிவரும். அமைதிப்படை என்ற பெயரில் இந்திய ராணுவம் ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டு நடத்திய வெறியாட்டங்கள் அம்பலமாகும்.

விசாரணை இந்த திசையில் போனால், தமது சதிகளும் கொலைகளும் அம்பலமாகும் என்பதால் காங்கிரசுப் பெருச்சாளிகள் ஆரம்பத்திலிருந்தே தேவையான ரகசிய ஆவணங்களைத் தராமல் இழுத்தடித்தனர். 1991 ஆகஸ்டிலிருந்து 9 மாதங்களுக்கு ஊழியர்களைக் கூட இக்கமிஷனுக்கு ஒதுக்காமல் புறக்கணித்தனர்.

1992 ஆகஸ்ட்டில் சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT),குற்றப்பத்திரிகையை விசேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததும், அன்றைய அரசு தலைமை வக்கீலாக இருந்த ஜி.ராமசாமி, புலனாய்வுக் குழு விசாரணை நடத்திய விவகாரங்களில் ஜெயின் கமிஷன் தலையிடக்கூடாது


படிப்பகம்

www.padippakam.com

என்று வாதிட்டு வந்தார். இதேபோல காங்கிரசுக் கட்சியின் வக்கீலான பி. தத்தாவும் கோரி வந்தார். இதுதவிர சிறப்புப் புலனாய்வுக் குழு தனது வழக்குக் குறிப்புகளை (CASE DIARIES) பார்வையிடவோ, பரிசீலிக்கவோ ஜெயின் கமிஷனுக்குத் தர மறுத்துவிட்டது.

1991-லிருந்து '93 வரை அவசியமான சில ஆவணங்களைப் பெறுவதே கமிஷனுக்குப் பெரும் பாடாகியது. இவற்றைக் கூட நீதிபதி ஜெயின் படித்து வழக்கைப் புரிந்து கொள்ளலாம்; ஆனால் அவற்றை ஆதாரமாகக் காட்டி விசாரணை செய்யக்கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

### காங்கிரசு பெருச்சாளிகளின் நீதித்துறை கேலிக்கூத்து

'80-களின் மத்தியில் புலிகள் உள்ளிட்டு அனைத்து ஈழப் போராளிகளுக்கும் இந்திய அரசு ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்தது, யாவரும் அறிந்து உண்மை. புலனாய்வுத்துறை (IB) -யின் அன்றைய இணை இயக்குனரான நரசிம்மன் 1984-ல் புலிகளுக்கு ஆயுத உதவிகள் செய்வதில் இடைத்தரகராகச் செயல்பட்டுள்ளார். தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான ப. நெடுமாறனே இதுபற்றி ஜெயின் கமிஷனிடம் சாட்சியமளித்துள்ளார். ஆனால் நரசிம்மனோ இவற்றை திடலடியாக மறுத்து வருகிறார்.

இதே போல் இந்திய உளவு நிறுவனமான ''ரா''வின் அன்றைய துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலான உன்னி கிருஷ்ணன், தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுத உதவி செய்ததில் முக்கியமானவர். ஆனால், அவர் இலங்கைக்கும் சி.ஐ.ஏ.வுக்கும் ரகசியமாக உளவு வேலை செய்தார் என்று கூறி கைது செய்துள்ள ''ரா'' அவரை வீட்டுக் காவலில் வைத்துள்ளதாகக் கூறுகிறது. அவர் எங்கிருக்கிறார், வாக்குமூலம் பெற வேண்டும் என்று பலமுறை ஜெயின் கமிஷன் கோரியும்கூட இன்றுவரை ''ரா'' வாய் திறக்கவில்லை. இதுதவிர, இந்திய மண்ணில் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கக் காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பு? என்ற கேள்விகளுக்கும் இன்றுவரை ''ரா'' பதிலளிக்கவில்லை.

ராஜீவின் நம்பகமான கூட்டாளியாக இருந்தவர், அன்றைய மத்திய அமைச்சரான ப. சிதம்பரம். ஈழ ஒப்பந்தத்துக்கு முன்பாக, டிசம்பர் 19, 1986-இல் சமரச திட்டத்தைத் தயாரித்தவரும் அவர்தான். அவர் பாதுகாப்புத் துணை அமைச்சராக இருந்தபோதுதான் நவம்பர் 1986-இல் நடந்த ''சார்க்'' மாநாட்டின் போது தமிழகத்திலிருந்த ஈழப் போராளிகள் கைது செய்யப்பட்டு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த விவகாரம் பற்றி கமிஷன் பலமுறை கோரியபோதிலும் ப. சிதம்பரம் இன்றுவரை சாட்சியம் அளிக்கவில்லை.

முன்னாள் வெளியுறவுச் செயலாளரும் ஈழ விவகாரத்தில் முக்கிய பங்கு வகித்தவருமான ஜே.என். தீட்சித், தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார். இதே போல வெளியுறவுக் கொள்கை திட்டக் கமிட்டியின் முன்னாள் தலைவரும், சிறப்புத் தூதுவராக பிரபாகரனைச் சந்தித்தவருமான ஜி. பார்த்தசாரதி, ஆயுதங்களைக் கையளிக்குமாறு அமைதிப் பேச்சு வார்த்தைக்குத் தான் சென்றேன்; வேறொன்றும் எனக்குத் தெரியாது என்கிறார். இதுபற்றிய ஆவணங்கள் வெளியுறவுத் துறை அமைச்சகத்திடம் உள்ளது என்கிறார். ஆனால் வெளியுறவுத்துறையோ அந்த ஆவணங்களைக் கமிஷனுக்கு கொடுக்க மறுக்கிறது.

இதுதவிர, காங்கிரசுப் பெருச்சாளிகள் தமது பினாமியான முஸ்தாக் அகமது



ராஜீவ் கொலை 'கூ' விசாரணை நீதிபதி ஜெயின்

என்ற வக்கீலைக் கொண்டு கடந்த ஆண்டில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்தனர். ''ராஜீவ் கொலையைப் பற்றி சென்னையில் சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும்போது தனியாக ஜெயின் கமிஷன் தேவையில்லை; ஆகவே அதைக் கலைத்துவிட வேண்டும்'' என முஸ்தாக் அகமது கோரினார்.

இந்த வழக்கை விசாரித்த டெல்லி உயர் நீதிமன்றம் கடந்த மே மாதம் ஓர் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது. அதில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட 1987-ஆம் ஆண்டு ஜூலை 29-ந் தேதியிலிருந்துதான் விசாரணையைத் தொடங்க வேண்டும் என்றும் சிறப்பு புலனாய்வுக்குழு (SIT) விசாரிக்காமல் விட்ட நபர்கள், ஏஜென்சிகள் (அமைப்புகள், குழுக்கள்) ஆகியவற்றையே ஜெயின் கமிஷன் விசாரிக்க வேண்டும் என்று கூறியது. இதனால் ஜெயின் கமிஷன் எதை விசாரிப்பது, யாரை விசாரிப்பது என்று புரியாமல் குழம்பிப் போயுள்ளது. சிறப்புப் புலனாய்வுக்குழு தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் 44 பேர் குற்றவாளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதில் 12 பேர் இறந்து விட்டனர். மூவர் தலைமறைவாகி விட்டனர். 1014 பேர் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இதற்கப்பால் விசாரிக்காமல் விட்ட நபர்கள் என்று யாரைச் சேர்க்க முடியும்? எதை விசாரிக்க முடியும்?

ஜெயின் கமிஷனின் வரன்முறை தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் நடந்து வரும் விசாரணை முடியும் வரை, ஜெயின் கமிஷன் தனது விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கூறும் மத்திய அரசின் மனுவை அரசு வக்கீல் பி. தத்தா இருமாதங்களுக்கு முன்பு தாக்கல் செய்துள்ளார். இதே போல தமிழக அரசின் சார்பிலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவையனைத்தும் ஜெயின் கமிஷனின் விசாரணையை முடக்கிவிட காங்கிரசுப் பெருச்சாளிகள் குறியாக இருப்பதையே தெளிவாக்குகின்றன. இந்நிலைமையைக் கண்டு வெறுப்புற்ற நீதிபதி ஜெயின், ''நீங்கள் விசாரணையை நிறுத்திவிட முயற்சிக்கிறீர்களா? எந்த விதத்திலும் நீங்கள் ஒத்துழைப்பு தருவதில்லை. இவ்விசாரணை பற்றி மத்திய அரசின் நிலை என்ன என்பதையாவது தெளிவுபடுத்துங்கள்'' என்று அரசு வழக்கறிஞர்களிடம் அவர் புலம்பியுள்ளார்.

### சோனியா கும்பலின் கலகம்

ஜெயின் கமிஷன் விசாரணை முடக்கப்பட்டுள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்த ராஜீவ் விசுவாசிகளும் சோனியா கும்பலும், மாண்டு போன தமது தலைவரைப் புறக்கணிப்பதாகக் கூறி திரைமறைவில் கலகம் செய்கின்றனர். இக்கும்பலின் ஏற்பாட்டின்படி, உச்ச நீதிமன்ற வழக்கறிஞரான வதோரா, டெல்லி உயர் நீதிமன்றத்தில் அண்மையில் இடைமறி மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். ஜெயின் கமிஷனின் முடக்கப்பட்ட அதிகாரங்களைத் திருப்பித் தர வேண்டும்; ராஜீவ் கொலை பற்றி ஏற்கனவே உளவுத்துறைக்குத் தெரிந்துள்ள போதிலும், கருப்புப் பூனை படை பாதுகாப்பு தர தவறியுள்ளனர். ஆகவே முஸ்தாக் அகம்து தொடுத்துள்ள வழக்கில் தன்னையும் ஒரு பிரதிவாதியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் கோரியிருந்தார். இந்த மனுவை டெல்லி உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதேபோல சோனியா கும்பலைச் சேர்ந்த காங்கிரசு எம்.பிக்களான பிரபு, ஆஸ்கார் பெர்ணான்டஸ், சுரேஷ் பச்சவுரி ஆகியோர் கடந்த ஆகஸ்ட் 19-ந் தேதியன்று புதிய இடைமறி மனுக்களை சமர்ப்பித்துள்ளனர். அதில், ''நாங்கள் ராஜீவுடன் நீண்டகாலம் நெருங்கிப் பழகியவர்கள். எமது தொகுதி மக்களும் ராஜீவ் கொலையில் புதைந்துள்ள உண்



படிப்பகம்

www.padippakam.com

மைகளை அறிய விரும்புகிறார்கள். எனவே கமிஷனின் அதிகாரங்களைக் குறைத்து விசாரணையை முடக்கிவிடக் கூடாது'' என்று கூறியுள்ளனர்.

இதுதவிர, முன்னாள் காங்கிரசு அமைச்சரான கே.கே. திவாரி, முன்னாள் 'குடியரசு'த் தலைவர்களான ஜெயில்சிங், வெங்கட்ராமன் ஆகியோர் ராஜீவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குவது அல்லது மீண்டும் பதவிக்கு வருவதைத் தடுப்பது ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர் என்பதால் அவர்களையும் விசாரிக்க வேண்டுமென ஜெயின் கமிஷனிடம் கோரியுள்ளார். முன்னாள் 'குடியரசு'த் தலைவரான வெங்கட்ராமன் அண்மையில் வெளியிட்டுள்ள தனது நூலில் ராஜீவை விமர்சித்துள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்துள்ள சோனியா கும்பல், அவரைப் பழிவாங்கும் நோக்கத்தோடு கொலைச் சதி விசாரணையில் அவரை மாட்டி விட்டுள்ளது. இதனால் பீதியடைந்த ராவ் கும்பல், சோனியா கும்பலைத் திருப்திபடுத்துவதற்காக, உளவுத் துறையின் சில ரகசிய ஆவணங்களைக் கமிஷன் முன் சமர்ப்பித்துள்ளது. ஆயினும் இவற்றை ஆதாரமாகக் காட்டி விசாரணை செய்யக் கூடாதென கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

**காங்கிரசின் திடீர் பல்டி**

1993-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கமிஷனிடம் அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டி ஒரு மனு சமர்ப்பித்திருந்தது. அதில் (1) 1987-ஆம் ஆண்டு ஜூலை 29-ஆம் தேதி ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தனேவுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம்; அதன் நோக்கம் குறித்த ஆதரவான விஷயம் (2) அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் புலிகளின் பிரதிநிதிகளான நடேசன், காசி ஆனந்தன் ஆகியோருக்குமிடையே நடந்த சந்திப்பு; அதில் மத்திய அரசின் ரகசியங்களை கருணாநிதி அவர்களுக்குத் தெரிவித்தது. (3) அன்றைய பிரதமர் வி.பி. சிங், கருணாநதிக்குப் பிறப்பித்த உத்திரவுகள்; 1989-லிருந்து புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றிய அறிக்கை (4) 1989-லிருந்து தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் பற்றி உளவு நிறுவனங்களின் அறிக்கைகள் - ஆகிய இந்நான்கு விஷயங்கள் குறித்த ஆவணங்களைப் பெற்று பரிசீலிக்குமாறு கோரியிருந்தது.

இதன்படி, இந்த ஆவணங்களைக் சமர்ப்பிக்குமாறு ஜெயின் கமிஷன் பல முறை உத்தரவிட்ட போதிலும், மத்திய அரசு செவி சாய்க்கவே இல்லை.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் 19-ஆம் தேதியன்று, டெல்லி உயர்நீதி மன்றத்தில் முஸ்தாக் அகமது சமர்ப்பித்திருந்த இடைமுறி மனு மீதான விசாரணையின் போது, அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் வக்கீலான ஆர்.என். மித்தல் சில உறுதி மொழிகளைக் கொடுத்தார். ''ஜெயின் கமிஷெனின் வரன்முறை குறித்து டெல்லி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்திரவு பிறப்பித்துள்ள நிலையில், நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் குறித்து இனிமேல் வலியுறுத்த மாட்டோம். ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் மற்றும் அதன் நோக்கம் பற்றிய ஆதரவான விஷயங்கள் ஆகியன ஒப்பந்தம் ஏற்பட்ட 1987 ஜூலை 29-ஆம் தேதிக்கு முந்தையவையாகும். இதைக் கோருவது உயர்நீதிமன்ற உத்திரவுக்கு முரண்பாடாக அமையும் என்பதால் இனி இந்த ஆவணங்கள் மீதான விசாரணையை நாங்கள் கோரமாட்டோம்'' என்று உறுதியளித்துள்ளனர்.

இதே போல, தமிழக அரசும் 1987-க்கு முன்பு புலிகளைப் பற்றி ஜெயின் கமிஷன் விசாரிக்கக் கூடாது என்று கோரியுள்ளது. அண்மையில் தமிழக அரசின் வழக்கறிஞரான வைத்தியநாதன், டெல்லி உயர்நீதி மன்றம் விதித்த இடைக்கால உத்திரவின் படி, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள், அமைப்புகளை ஜெயின் கமிஷன் விசாரிக்கக் கூடாது; இதன்படி பார்த்தால், குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள புலிகளைப் பற்றி ஜெயின் கமிஷன் விசாரிக்கக் கூடாது; அவ்வாறு விசாரித்தால் அது நீதிமன்ற உத்திரவுக்கு எதிரான செயலாகும் என்று ஜெயின் கமிஷனிடம் முறையிட்டுள்ளார்.

இவையனைத்தும் ஜெயின் கமிஷனை முடக்கிவிட காங்கிரசும் அ.தி.மு.க.வும் குறியாக நிற்பதையே நிரூபிக்கின்றன. அதேசமயம் தி.மு.க. மற்றும் தமிழினவாதக் குழுக்களுக்கு ராஜீவ் கொலைச் சதியில் எந்த விதத்திலும் சம்பந்தமில்லை என்று கூறவும் அவை தயாராக இல்லை. தி.மு.க.வின் வழக்கறிஞரான திண்டிவனம் வெங்கட்ராமன், ''1983-லிருந்து தமிழ் போராளிகளுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் ''ரா'' மூலம் ரகசிய முகாம்களில் அளிக்கப்பட்டுள்ளது. 1987-லிருந்து விசாரணை நடத்தினால் இந்த உண்மைகள் வெளிவராது. மேலும் கமிஷனின் அதிகாரங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணை சுதந்திரமான முறையில் நடக்கவும் வாய்ப்பில்லை'' என்று கூறி விசாரணையிலிருந்து தி.மு.க. விலகிக் கொள்வதாக மனுச் செய்தார். ஆனால் ஆகஸ்ட் 9-ந் தேதி நடந்த விசாரணையின் போது, கமிஷன் இம்மனுவை நிராகரித்துவிட்டது.

ராஜீவ் கொலைச் 'சதி'யில் தாங்கள் எந்த வகையிலும் சம்பந்தப்படாமலிருக்கும் பொருட்டு, கமிஷனின் அதிகாரங்களைக் குறைத்து அதை முடக்குவது; அதேசமயம் திராவிடக் கட்சிகள் மீது பூடமாகவும் சந்தேகத்தின் அடிப்படையிலும் பழிசுமத்துவது என்கிற நோக்கத்துடன் தான் காங்கிரசு துரோகிகள் காய்களை நகர்த்துகின்றனர். ஆனால் இதற்காக அவர்கள் செய்துவரும் தகிடுதத்தங்களையும் நீதித்துறை கேலிக்கூத்துக்களையும் கண்டு நீதிபதி ஜெயினே வெளிப்படையாகச் சாடுமளவுக்கு நிலைமை போய் விட்டது. உண்மையில், ராஜீவ் கொலைக்குப் பின்னே சர்வதேச சதியோ, புலிகள் - திராவிடக் கட்சிகளின் கூட்டுச் சதியோ - ஒரு புடலங்காயும் கிடையாது. ராஜீவின் பாசிச - கிரிமினல் குற்றங்களே அவரது கொலைக்குக் காரணமாக இருந்துள்ளன. எதிர்கட்சிகள் மீது பழிசுமத்தவும், தேர்தல் ஆதாயத்திற்காகவும் கிளப்பிவிடப்பட்ட புரளிதான் சதி பற்றிய கூப்பாடு என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. ராஜீவ் சமாதிக்கு அருகே இக்கமிஷனையும் குழிதோண்டிப் புதைக்க வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

● மனோகரன்.

## நத்தை வேகத்தில் நகரும் ராஜீவ் கொலை விசாரணை

ஜெயின் கமிஷன் விசாரணையைப் போலவே நீதிபதி சித்திக் தலைமையில் சென்னை - பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையும் நத்தை வேகத்தில்தான் நகர்ந்து செல்கிறது. இதில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 26 பேர்களின் சார்பில் 10 வக்கீல்கள் ஆஜராகிறார்கள். கைதிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கும் முறையில் தமிழக அரசுதான் இந்த வக்கீல்களுக்குச் சம்பளம் கொடுக்கிறது. ஒருமுறை ஆஜராக இந்த வக்கீல்களுக்கு 50 ரூபாய்தான் தரப்படுகிறது. ஆனால் சி.பி.ஐ. தரப்பில் ஆஜராகும் அரசு வக்கீல்களுக்கு ரூ.5000 தரப்படுகிறது. இந்தப் பாகுபாட்டை எதிர்த்துப் போராடிய வக்கீல்கள், தமிழக அரசிடம் முறையிட்டுப் பலனில்லாததால் நீதிமன்றத்தைப் புறக்கணித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவும் செய்தனர்.

இதனை விசாரித்த உயர்நீதிமன்றம், சி.பி.ஐ. வக்கீல்களுக்கு இணையான சம்பளம் தர இயலாது என்ற போதிலும், கைதிகளின் சார்பில் ஆஜராகும் வக்கீல்களுக்கு குறைந்தபட்சம் ரூ.500 முதல் ரூ.750 வரை ஊதியம் தர வேண்டுமென தீர்ப்பளித்தது. அதன் பின்னரே ஜூலை 4-ந் தேதி முதல் ஆகஸ்ட் 22 வரை முடங்கிக் கிடந்த சிறப்பு நீதிமன்றம் விசாரணையைத் தொடர முடிந்தது.

முடங்கிக் கிடந்த விசாரணை இப்போது மீண்டும் நடந்த போதிலும், புதிய ஊதிய உயர்வினால் திருப்தியடையாத வக்கீல்கள், ஒவ்வொரு சாட்சியையும் கேள்விமேல் கேள்வி கேட்டு நேரத்தை வீணடிப்பார்கள்; இதனால் விசாரணை மந்தமாகவே நகரும் என்று நீதித் துறையினரே புலம்புகின்றனர். நல்ல முன்னேற்றம்தான்!



படிப்பகம்

www.padippakam.com




**மனிதக் கறி தின்னும் இராணுவம்**

● போராளிகளையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் பிற்போக்கு ஆட்சியாளர்கள் நர வேட்டையாடி வருவது தொன்றும் புதிதானதல்ல; ஆனால் கம்போடிய 'சனநாயக' அரசின் இராணுவமோ புரட்சியாளர்களின் வயிற்றைக் கிழித்து குடலையும், கல்லீரலில் சுரக்கும் அமிலத்தையும் வறுத்துத் தின்பதை வாடிக்கையாக்கிக் கொண்டுள்ளது. இக்காட்டு மிராண்டினத்தை விசாரித்து வரும் ஐ.நா. ''இராணுவத்தில் இதற்காகவே "S-91" என்ற பிரிவு இயங்கி வருவதாகவும், அப்பிரிவு கடந்த ஒரு வருடத்துக்குள் மட்டும் 35 போராளிகளை விசாரணையின்றி கொன்றொழித்துள்ளதாகவும்'' குற்றஞ்சாட்டியுள்ளது.

**புரட்சி களத்தில்**
**உறுதிகுன்றா விவசாயிகள்**

● பீகாரின் ஜெகன்னாபாத் குற்றவியல் 'நீதி'மன்றம் ''மாலிபிகா போராட்டத்தில்'' பங்கு கொண்ட ஒரு விவசாயப் போராளிக்கு தூக்கு தண்டனையும் மற்றும் பத்து தோழர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. போராளிகளைக் கொலைகாரர்களாகச் சித்தரிக்கும் தீர்ப்பைக் கண்டித்து இ.பொ.க. (மா-லெ), (கட்சி ஐக்கியம்) குழுவின் முன்னணி அமைப்பான ''லோக் சங்க்ராம் மோர்சா'' அமைப்பு, ஆகஸ்டு 4-ந் தேதியன்று தீ வட்டி போராட்டத்தையும் தீர்ப்பு நாளன்று 'நீதி'மன்றத்தின் முன் ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியது. போராட்ட வீச்சின் காரணமாக தீர்ப்பின் பின் அம் மாவட்டத்திலுள்ள 'நீதி'மன்றங்கள் தொடர்ந்து செயல்பட முடியாமல் உள்ளன. சில மாதங்களுக்கு முன்பு மக்களை அணி திரட்டி கொடிய நிலப்பிரபுக்களைக் கொன்றொழித்த பத்து எம்.சி.சி. போராளிகளுக்கு அவுரங்கபாத் 'நீதி' மன்றம் தூக்கு தண்டனை அளித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**எங்கே மனித உரிமை?**

● தேசிய மனித உரிமைக் கழகம் உரிமை மீறல்களை குறிப்பாக நக்சல்பாரிகளால் 'பாதிக்கப்பட்டவர்களின் வழக்குகளை' விசாரிப்பதற்காக சென்ற ஆகஸ்ட் மாதம் ஆந்திராவில் சுற்றுப்பயணம் செய்தது. நளகொண்டாவில் நடந்த விசாரணையில் ஆந்திரா குடியுரிமை கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் கன்னபிரான் மற்றும் கான் இருவரும் கலந்து கொண்டனர். ஆந்திர போலீசு முன் கூட்டியே திட்டமிட்டு விசாரணையில் இடையூறு செய்வதற்காக கூலி அடியாட்களைக் கொண்டு வந்து அவ்விருவருக்கும் எதிராகக் கோஷமிட்டது. இதனால் அவ்விருவரும் மேடையில் இருந்து இறங்கி வெளியேற முற்பட, அவ்விருவரையும் சூழ்ந்து கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டியும் தாக்கியுமுள்ளனர். அவர்களுடன் பேசியதற்காக பத்திரிகையாளர்களையும் தாக்கியது அக்கும்பல். மாவட்ட அதிகாரிகளின் முன்னிலையிலேயே இந்த அராஜகம் அரங்கேறிய போதும் இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை.

**மாணவர்களுக்கு வலை வீசும் பா.ஜ.க.**

● உ.பி. மற்றும் ம.பி. மாநிலங்களில் தான் ஆண்டபொழுது வரலாறு மற்றும் கணித பாடங்களை தனது இந்து மதவெறிக்குச் சார்பாக திருத்திய பா.ஜ.க., இப்பொழுது டெல்லியில் தனது குண்டர் படையைச் சேர்ந்த உறுப்பினர்களையே பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்க திட்டம் தீட்டியுள்ளது. விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்காக டெல்லி நகர பா.ஜ.க. தலைவர் தலைமையில் கமிட்டி ஒன்றினை அமைத்துள்ளதோடு, இத்திட்டத்திற்காக புதிதாக 120 பள்ளிகளையும் திறக்க உத்தேசித்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். அல்லது அதன் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி-யில் உறுப்பினராக இருந்தால் வேலை நிச்சயமுண்டாம். இதோடு டெல்லி பல்கலைகழகத்தையே கைப்பற்றும் நோக்கத்தோடு கல்லூரிகள் எங்கும் ஏ.பி.வி.பி-ஐக் கட்டுவதில் டெல்லி நிர்வாகமே நேரடியாக பங்கெடுத்துக் கொண்டும் வருகிறது.

**ஆங்கிலத்தை ஆசிர்வதிக்கும் ஜெயா**

● ஓட்டுப் பொறுக்குவதற்காக இந்தி எதிர்ப்பு சவடால் அடிக்கும் திராவிட இன ஓட்டுக் கட்சிகள் என்றும் தங்களின் ஆங்கில மோகத்தை கைவிட்டதில்லை. அவர்களின் வழிவந்த ஜெயா அரசு ''தமிழ் நாட்டிலுள்ள எல்லா கல்விக் கூடங்களிலும் திங்கள் மற்றும் வெள்ளி இரு நாட்களிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆங்கிலத்தில்தான் உரையாட வேண்டும்'' என வழிகாட்டுதல் கொடுத்துள்ளதாக தகவல்கள் வந்துள்ளன. தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அதிகாரியின் உத்தரவின் நகலை இதற்கு ஆதாரமாகக் காட்டிய தலைநகர் தமிழ்ச் சங்க அமைப்பினர், இதை எதிர்த்து ஜெயா வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முயன்று கைதாகினர். ஆனாலும் தமிழக அரசு மந்திரி கண்ணப்பன் மூலம் இதனை மறுத்துள்ளது.

**உதவியா? உபத்திரமா?**

● பாலஸ்தீன விடுதலை இயக்கம் சாதித்து விட்டதாகக் கூறிக் கொள்ளும் சுயாட்சி ஒரு புறம் இஸ்ரேலிய அரசாலும் மறுபுறம் உலக வங்கியாலும் சீரழிந்து வருகிறது. உலக வங்கி தான் கொடுக்கும் உதவித் தொகை ஒவ்வொரு பைசாவுக்கும் ரசீது வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளது; இதோடு வரவு - செலவு கணக்குப் புத்தகங்களையும் தனக்குக் காட்ட வேண்டும் எனும் நிபந்தனையும் உண்டு. தனது ஊழியர்களின் சம்பள உயர்வுக்குக் கூட பி.எல்.ஓ. உலக வங்கியின் ஒப்புதலை பெற வேண்டும். மேலும் தனது ''உதவித் தொகையை ஜெரிகோ - காஜா முனைப் பகுதியில்தான் செலவழிக்க வேண்டும்; பிற பகுதிகளில் அகதிகளாக உள்ள பாலஸ்தீனியர்களின் நலனுக்குச் செலவழிக்கக் கூடாது'' என்றும் நிபந்தனை விதித்துள்ளது.

**ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!**

● கடந்த 1993 ஆண்டில் மட்டும் இந்தியாவில் நுழைந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களின் மூலதனத்தின் மதிப்பு 8860 கோடி ரூபாய். 1478 அந்நிய நிறுவனங்கள் சென்ற ஆண்டில் இந்திய தொழிலதிபர்களுடன் கூட்டு சேர மைய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 273 அமெரிக்க தொழில் நிறுவனங்களும் பிரிட்டனையும் ஜெர்மனியையும் சேர்ந்த 357 தொழில் நிறுவனங்களும் இவற்றுள் அடங்கும். இது தவிர தொழில் நுட்பக் கூட்டு என்ற பெயரில் 140 அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய தொழிற்துறையில் கூட்டு ஒப்பந்தமிட்டுள்ளன.

**ராவின் தாராளம்**

● மின் உற்பத்தித் துறையில் ஒரே வருடத்துக்குள் 35 பன்னாட்டு தொழிற் கழகங்களுக்கு மூலதனமிட அனுமதித்துள்ளது ராவ் அரசு. இவற்றுள் 25 நிறுவனங்கள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவை. முதற்கட்டமாக 18 அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாடும் உள்ளிட்டு 10 மாநிலங்களில் 19 இடங்களில் மின்நிலையங்களை அமைக்க ஒப்பந்தமிட்டுள்ளன. இவை கட்டுப்படுத்தவுள்ள மொத்த மூலதனத்தின் மதிப்பு 34,571 கோடி ரூபாய். இதற்குப் பல்லிளித்து மத்திய அரசு அவர்களின் மூலதனத்திற்குப் பாதுகாப்பும் முன்பே தீர்மானிக்கப்பட்ட விலையில் குறிப்பிட்ட அளவு மின்சாரத்தையும் பெற்றுக் கொள்ளவும் உத்தரவாதம் அளித்துள்ள ராவ், வழக்குகள் ஏதும் எழுமாயின் அவற்றை அந்நிய நாட்டு நீதிமன்றங்களில்தான் முறையிட வேண்டும் என்ற நிபந்தனையையும் வெட்கமின்றி ஒத்துக் கொண்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# நல்வாழ்வுத் திட்டத்திற்கு மூடுவிழா செயலிழந்து கிடக்கும் அரசுகள்

விலையேற்றம், மானிய வெட்டு, தனியார்மயம், வரி உயர்வு என பல வழிகளில் உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் சுமையேற்றிவரும் இக் கேடுகெட்ட ஆட்சியாளர்கள் இன்னொரு பெரிய பாறங்கல்லையும் தூக்கிப் போட இருக்கிறார்கள். தனியார் மருத்துவர்களைப் போல அரசு மருத்துவமனைகளிலும் கட்டணம் வசூலிக்கப் போகிறார்களாம். அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவர்கள் மட்டத்தில் இதற்கான ஆலோசனைகளும் விவதாங்களும் நடந்து வருகின்றன. வறிய உழைக்கும் மக்கள் நோய் நொடி வந்தால் கையில் நாலு காசு இல்லாவிட்டாலும் அரசு மருத்துவமனையின் சீர்கேடுகளுடன் போராடி ஏதோ தமது உயிரை காப்பாற்றிக் கொள்கிறார்கள். இதற்கும் கேடு வந்து விட்டது.

இக்கட்டண முறை மூலம் மருத்துவ துறையின் நிதிப்பற்றாக்குறை குறைந்து அரசு மருத்துவமனைகளின் வசதிகள் பெருகுமாம்; தனியார் மருத்துவர்களின் கொள்ளை ஒழிக்கப்படுமாம்; மக்களை தனியாரிடம் செல்லவிடாமல் அரசே பொறுப்பாக சிகிச்சையளிக்கப்படுமாம். காதில் பூ சுத்துகிறார்கள்; கேழ்வரகில் நெய் வடிகிறதாம்!

அரசு மருத்துவமனைகளில் மாலையில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் இக்கட்டண முறையை அமுல்படுத்த ஆலோசித்து வருகிறார்கள். இது தொடக்கம்; பிறகு முழுநேரமும் கட்டண முறையாக்குவார்கள்; பிறகு காலப்போக்கில் குறிப்பிட்ட நேரத்தை வானொலி, தொலைகாட்சி நேரங்களைப் போல தனியார் மருத்துவர்கள், கம்பெனிகள் "காண்டிராக்ட்" எடுத்து கொள்ளையடிக்க அனுமதிக்கப்படலாம்; இறுதியில் அரசு மருத்துவமனைகள் இழுத்து மூடப்பட்டு மொத்தமும் தனியார் கைக்குப் போகும். ஆருடம் இல்லை, ஆச்சரியமும் இல்லை. பிற துறைகளில் இதுதானே நிகழ்ந்து வருகிறது?! ஏன் தமிழகத்தில் ஜெயா அரசாங்கம் '92-ல் அரசு மருத்துமனைகளில் பார்வையாளர் - நுழைவுக் கட்டணம் கொண்டு வந்து எதிர்ப்புகள் காரணமாக பின் வாங்கிக் கொண்டதே?!

### உலகவங்கி கட்டளையும் செயலற்ற அரசும்

உலக வங்கியின் (WB) கட்டளை தான் இக்கட்டண முறை. மருத்துவம், போக்குவரத்து, மராமத்துப் பணிகளுக்காக மாநில அரசுகள் நேரடியாகவே உலக நிதி நிறுவனங்களிடம் (WB, IMF, ADB) கடன் - உதவி வாங்குகின்றன. அவை போடும் கட்டளைகளுக்கு ஏற்ப மாநில அரசுகள் ஆடத்தானே வேண்டும்?! மருத்துவத் துறையில் புற்றுநோய், காசநோய், எய்ட்ஸ் போன்ற நோய்களுக்கான பிரிவுகள் உலக வங்கிகளின் நிதியுதவி பெற்றே இயங்குகின்றன. மருந்திலிருந்து மருத்துவ உபகரணங்கள் வரை வாங்குவது என்றாலும் மாநில - மத்திய அரசுகள் உலக நிதி நிறுவனங்களின் தயவையே நாடுகின்றன. இப்படி கடன் - உதவி பெற்றாலும் (போதாதற்கு உலக வங்கியும் மருத்துவத்திற்கான நிதியுதவி ஒதுக்கீட்டில் 58 கோடி ரூபாயை வெட்டிவிட்டது) ஆண்டு நிதி ஒதுக்கீட்டிற்குப் போதவில்லை.

மருத்துவத்திற்காக அரசு ஒதுக்கும் நிதியில் 85% அதன் ஊழியர்களின் சம்பளத்திற்கே சரியாகி விடுகிறது. எஞ்சியுள்ள 15% நிதியில்தான் மருந்து, உபகரணங்கள் உட்பட பிற அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. மருந்துக்காக ஒதுக்கும் நிதியில் மருந்து விலையேற்றத்திற்கு ஏற்ப மாற்றமில்லை. ஒரு ஆண்டு ஒதுக்கிய நிதி அடுத்த ஆண்டில் விலையேற்றத்தால் பற்றாக்குறையாகி மருந்து அளவை குறைத்து விடுகிறார்கள், அதிகாரிகள். இதனால்தான் மருந்து தட்டுப்பாடும், ஒரு மருத்துவக் கருவியை பல துறைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய அவலமும் அரசு மருத்துவமனையில் நிலவுவதைப் பார்க்கிறோம். இதுவல்லாமல் அடிப்படை மருந்து உற்பத்தியை அரசு குறைத்துக் கொண்டும் தனியாருக்கு தாரை வார்த்துவிட்டு விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலையையும் உருவாக்கி வருகிறது.

மருந்து உற்பத்தியை மட்டுமல்ல மருத்துவ சேவையேகூட தனியார் உதவி - கூட்டுடன்தான் இன்று அரசால் செய்ய முடிகிறது. உலக மருத்துவ சேவை நிறுவனங்களின் (IPPA, WHO, UNICEF) உதவியுடன்தான் அரசு பல மருத்துவ ஆராய்ச்சிகளையும் முகாம்களையும் நடத்துகிறது. இதுவல்லாமல் உள்ளூரிலுள்ள தன்னார்வக் குழுக்கள், அரிமா சங்கம், மதம் - சாதி அமைப்புகள், ஓட்டுக் கட்சிகள் தனியாகவோ, அரசுடன் கூட்டு சேர்ந்தோ பல்வேறு இலவச முகாம்களை நடத்துகின்றன. "பல் பாது காப்பு முகாம்", "கண்ணொளி வழங்கும் திட்டம்", "தொற்று நோய் தடுப்பு முகாம்" போன்ற பெயர்களில் சிறப்பு முகாம்கள் கிராமங்கள் வரை நடப்பதைப் பார்க்கலாம். இதில் மேற்படி அமைப்புகளின் ஆதாயம், சுயலாபம் ஒருபுறம் இருந்தாலும் அரசு தனது மருத்துவ சேவையை சுயமாக செய்வதற்கு செயலிழந்து விட்டது என்பதையே இவை குறிக்கின்றன.

எண்ணற்ற கிராமங்களில் மருத்துவமனையே இல்லை. பழங்குடி மக்களுக்கோ மருத்துவமனை பற்றிய அறிதலே இல்லை. உ.பி.யில் வாழும் 43.80 லட்சம் பழங்குடி மக்களுக்கு 219 சமூக நல மையமும் 1381 ஆரம்ப சுகாதார மையமும் தேவை. இருப்பதோ ஒரே ஒரு சமூக நல மையமும், 184 ஆரம்ப சுகாதார மையமும்தான். ஏறக்குறைய இதே நிலைதான் ஏனைய மாநிலங்களிலும் உள்ளது.

வருடந்தோறும் நமது நாட்டில் 4 லட்சம் டாக்டர்கள் படித்துவிட்டு வெளிவந்தாலும் இவர்களில் பெரும்பகுதியினர் "அப்போலோ" போன்ற மேட்டுக்குடி மருத்துவமனைகளுக்கோ, நடுத்தர மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மருத்துவமனைகளுக்கோ செல்கிறார்கள். மிகச் சிறுபான்மையினரே அரசு மருத்துவராக முயற்சிக்கின்றனர்; இதிலும் கிராமத்தில் பணிபுரிய மிகச்சிலரே விரும்புகின்றனர். இதனால் கிராம மக்கள் மருத்துவத்திற்காக தொலைதூரம்

அரசு மருத்துவமனையில் நெருக்கடி அவலம்; விரைவில் படுக்கைக்கும் (அது தரையாக இருந்தாலும்) கட்டணம் வசூலிப்பார்கள்!





படிப்பகம்

www.padippakam.com

நடந்து வந்தும் மருத்துவமனையின் இல்லாமையோடும் போராடித்தான் உயிர் காப்பாற்றிக் கொள்கின்றனர். பலர் சித்த வைத்தியம், ஹோமியோபதி, ''பாட்டி வைத்தியம்'' போன்றவற்றை நாடி நோய் தீர்த்துக் கொள்வதால்தான் பிழைத்திருக்கிறார்கள் என்பது மிகையில்லை.

ஆனால் சித்தவைத்தியம் போன்ற நமது பாரம்பரிய சொத்தையும் பறித்து சொந்தம் கொண்டாடி நம்மிடமே காசு பறிக்கத் துடிக்கிறது, காட் - டங்கல் ஒப்பந்தம். ஏற்கனவே மருந்து உற்பத்தியில் - விற்பனையில் ஆதிக்கம் செலுத்தி வருகிற பன்னாட்டு பகாசுர கம்பெனிகள் தமது கொள்ளையை ''டங்கல் ஒப்பந்தம்'' மூலம் மேலும் விரிவாக்கப் போகின்றன. இதனால் மருந்து விலை கூடி தனியார் மருத்துவரைக்கூட நடுத்தர மக்களே நாட முடியாத நிலை உருவாகப் போகிறது.

இப்படி ஒரு மிகப் பெரிய அபாயத்திற்கு வழி வகுத்துவிட்டு தனியார் கொள்ளையை ''கட்டணமுறை'' மூலம் தடுத்து விடப் போவதாக ஏய்க்கிறது, காங்கிரசு கும்பல். மருந்துப் பொருட்களின் தேவை, மருத்துவ ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை போன்ற நெருக்கடிகளைத் தீர்க்க புதுவரியோ, தனிவரியோ போட முடியாது என்பதால்தான் இக்கட்டண முறை கொள்ளையைப் பற்றி யோசித்து வருகிறது, அரசு. இம்முறை அமுலுக்கு வருமானால், ஏற்கனவே மருத்துவமனையிலுள்ள லஞ்ச ஊழல்களுக்கே ஈடுகொடுக்க முடியாமல் தவிக்கும் பாமர மக்கள் அறவே அரசு மருத்துவமனைகளை மறந்து விடுவதுதான் நிகழும்.

### உணவு தானியப் பற்றாக்குறை ஊட்டச்சத்தின்மையால் நோய்கள்

மனிதனுக்கு தேவையான இன்றைய அடிப்படை வசதிகளுள் (உணவு, உடை, இடம், கல்வி, மருத்துவம், மின்சாரம், செய்தி-போக்குவரத்து முதலியவை) உயிராதாரமானது உணவு என்றால் உயிர்பாதுகாப்பானது மருத்துவம். போதிய ஊட்டச்சத்தின்மை, சுகாதாரமின்மையால்தான் சாதாரண மக்களுக்கு நோய் - நொடியே வருகிறது.

உணவுதானிய உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துவிட்டதாக ஆட்சியாளர்கள் கூப்பாடு போட்டாலும் உண்மை என்னவோ வருடந்தோறும் 50 முதல் 52 மில்லியன் டன் வரை பற்றாக்குறை உள்ளது. பல மாநில அரசுகள் மத்திய அரசை எதிர்பார்த்திருக்கின்றன. மத்திய அரசோ, அந்நிய நாடுகளிடம் இறக்குமதி செய்வதை நம்பியுள்ளது. '91ல் அரசு மானியத்தை வெட்டியும் உரவிலையை 30% கூட்டியும் விவசாயத்தை லாபமற்ற தொழிலாக்கியதால் உற்பத்தி கணிசமாகக் குறைந்தது. விவசாயத்திற்கான நீர்ப்பாசனம் மற்றும் பொதுமராமத்துப் பணிகளை அரசு புறக்கணித்து வருவதாலும் விவசாயத்தை நடுத்தர விவசாயிகளும் கைவிடுவது அதிகமாகி உற்பத்தி கணிசமான அளவு குறைந்து விட்டது. இதுவல்லாமல் பணப்பயிர், தோட்டப்பயிர், இறால் பண்ணைகள் மூலமும் தரகு முதலாளிகளும் அந்நிய பகாசுர முதலாளிகளும் இந்திய விவசாயத்தைப் பாழ்படுத்தி வருகிறார்கள். மேலும் பெரும் நாசம் விளைவிக்க, விவசாயத் தொழிலுரிமையைப் பறிக்க காத்திருக்கிறது, காட் - டங்கல் ஒப்பந்தம்.



மகராஷ்டிரா - தோல்ஹரி கிராம ஆதிவாசிகள்; இளம்பெண் பாரதியின் வயிற்றுப் போக்குக்கு மருந்துவத்திற்காக 8 கி.மீ. நடந்தும் பயனின்றி சேர்ந்து கிடக்கிறார்கள்.

இவை உருவாக்கும் விளைவுகள் மிகவும் கோரமானதாகவே இருக்கும். உணவு தானியத்தின் தட்டுப்பாடும் விலையேற்றமும் அதிகரிக்கும். தற்போதே அரிசி விலை 1989-90ம் ஆண்டில் 63 சதவிகிதமும் 1993-94-ம் ஆண்டில் 45 சதவிகிதமும் கூடியுள்ளது. விலையேற்றத்தால் மக்களின் பயன்பாடு குறைந்து போவதுதான் அதாவது மக்கள் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சிக்கனமாக வாழ்வதுதான் நிகழ்கிறது. இதனால் ஊட்டச்சத்து குறைந்து நோஞ்சான்களாக நோய் எதிர்ப்பு சக்திகளற்ற கூடுகளாகிறார்கள், உழைக்கும் மக்கள். இந்தியாவில் தினம் 5000 பேர் குழந்தைகளிலிருந்து முதியவர்கள் வரை ஊட்டச்சத்தின்மையால் இறக்கிறார்கள் என அண்மையில் வெளிவந்துள்ள ''யுனிசெப்'' நிறுவனத்தின் ஆய்வு முடிவு அதிர்ச்சியளிக்கிறது.

> இந்தியாவில் தினம் 5000 பேர் குழந்தைகளிலிருந்து முதியவர்கள் வரை ஊட்டச்சத்தின்மையால் இறக்கிறார்கள் என அண்மையில் வெளிவந்த ''யுனிசெப்'' நிறுவனத்தின் ஆய்வு முடிவு அதிர்ச்சியளிக்கிறது.

### நல்வாழ்வுத் திட்டங்களில் அக்கறையற்ற ஆட்சியாளர்கள்

உயிராதாரமான நீர், காற்று முதல் சுற்றுப்புறம் வரை ஆளும் சுயநலக் கும்பலால் பெரிதும் மாசுபட்டே உள்ளன. ஆற்று நீரில் ஆலைக்கழிவுகள் கலப்பதும், ஆறே சாக்கடையாக மாற்றப்படுவதும், நச்சுக் கழிவு புகைகள் காற்றில் கலப்பதும், உழைப்பவன் சாக்கடையில் குப்பையில் வாழ்வதும் நாம் காணுகிற சாதாரண காட்சி. முக்கியமாக சுத்தமில்லா குடிநீராலும் கழிவுநீர் வெளியேற வசதிகள் இல்லாததாலுமே 70 சதவிகித நோய்கள் சாதாரண மக்களுக்கு உருவாகின்றன. இவை இரண்டிற்குக்கூட வசதி செய்து கொடுத்து மக்களைப் பாதுகாக்க அக்கறை செலுத்துவதில்லை, இவ்வக்கற்ற ஆட்சியாளர்கள்.

1985-ல் நடத்திய ஆய்வுப்படி இந்தியாவில் 1.62 லட்சம் கிராமங்களில் குடிநீர் வசதி சிறிதும் இல்லை என கண்டறியப்பட்டது. 86-ல் ராஜீவ்காந்தி ''தேசிய குடிநீர்த் திட்டப்பணி'' என்ற பெயரில் சில நவீன முறை வசதிகளை நடைமுறைப்படுத்தி 91-க்குள் அனைவருக்கும் குடிநீர் கிடைக்கச் செய்து விடுவதாகத் தம்பட்டமடித்தார். ராவ் ஆட்சியில் இத்திட்டம் ''ராஜீவ்காந்தி தேசிய குடிநீர்த் திட்டப்பணி'' என்று பெயர் மாறி, பல கோடிகளை விழுங்கியதே ஒழிய குடிநீர் வசதி சிறிதும் கிடைக்கவில்லை. ''கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானத்தில வைகுண்டம் காட்டுறேன்னு'' சொன்னது போல் இக்கேடுகெட்ட காங்கி



படிப்பகம்

www.padippakam.com

ரசு கும்பல் 21-ம் நூற்றாண்டில் ஒளிமயமான இந்தியாவை உருவாக்கப் போவதாகக் கூவுகிறது.

இதுபோல்தான் மாநில அரசுகளும் ''பாதாள சாக்கடை திட்டம்'', ''கொசு ஒழிப்புத் திட்டம்'', ''சுகாதார மேம்பாட்டு முகாம்'', ''சுற்றுச்சூழல் பாதுகாப்பு - மாசு தடுப்பு நடவடிக்கை'' என ஏராளமான பெயர்களில் திட்டங்களைப் போட்டு மக்களின் கண்களைக் கட்டி ஏய்க்கின்றன. தமிழகத்தில் கருணாநிதியிலிருந்து ஜெயலலிதா வரை வீராணம் திட்டம் பற்றி வாய்கிழிய பேசினாலும் சென்னைக்கு குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை; அதிகரித்தே உள்ளது. சென்னை மாநகராட்சி, அண்மையில் குடிநீர்க்கான வரியைவேறு உயர்த்தியுள்ளது. இதுவன்றி குடிநீர் குழாய், கழிவுநீர் குழாய்கள் பழுதுபட்டு ஒன்றோடொன்று கலந்து, நோய்களும் பல்வேறு பாதிப்புகளும் உருவாகின்றன. சென்னையில் பல பகுதிகளில் இது அடிக்கடி நிகழ்ந்து, பகுதி மக்கள் முறையீடு போராட்டம் என்று அணுகினாலும் மாநகராட்சியும், குடிநீர்வாரியமும் ஒன்றையொன்று கைகாட்டிக்கொண்டு தட்டிக் கழிக்கின்றன. ''கொசு ஒழிப்பு திட்டம்'' என்றால் கொசுக்களோடு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பெருத்துப் போவதுதான் நிகழ்கிறது. இன்று இதுபோன்ற திட்டங்களை வெட்டியும் குறுக்கிக் கொண்டும் ஒப்பந்தமுறையில் தனியாரிடம் ஒப்படைத்துக் கொள்ளையடிப்பதில் ஆளுங்கும்பல் இறங்கிவிட்டது.

சுருக்கமாகச் சொன்னால் அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் - சேவைப் பணிகள் உயிராதாரமான - உயிர் பாதுகாப்பானவற்றிலும் சுருங்கிப் போய்விட்டன. மத்திய மாநில அரசுகள் மானியங்கள் வெட்டுவதையோ, தனியார்மயமாக்கலையோ, கட்டண முறைகளையோ சேவைத்துறையில் விரைந்து நடைமுறைப்படுத்தாதற்கு இங்குள்ள எதிர்ப்புகளும் கவர்ச்சி - சலுகையில் மக்களை கவர்ந்து ஓட்டுப் பொறுக்குவதற்கு கட்சிகளுக்குள் இருக்கும் போட்டியுமே காரணம். மற்றபடி மெல்லமெல்லவும் கொள்ளைப்புற வழிகளிலும் நடைமுறைப்படுத்தவே ஆட்சியாளர்கள் முனைப்பாக உள்ளனர். இதில் ஓட்டுக் கட்சிகளிடத்தில் பெரிய மாறுபாடு ஒன்றும் இல்லை.

திரைப்பட நடிகர்கள், அரசியல்வாதிகள், தரகு முதலாளிகள், பண்ணையார்களிடம் அவர்கள் செலுத்தாத வரியைக் கூட வசூலிக்காமல் விடுத்து பாமர மக்களிடமிருந்தே மேலும் மேலும் வரி, கட்டணம் என ஆட்சியாளர்கள் வசூலித்துத் துன்புறுத்துகிறார்கள். இந்நிதியை மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு ஒதுக்குவதை விடுத்து ஊழலில் திழைத்தும், உப்புக்கும் உதவாத இலவச - கவர்ச்சித் திட்டங்களில் பணத்தைக் கொட்டியழித்தும், அணு - ஆயுதம் - சோதனைக்கு என ஏராளமான நிதியை வாரி இறைத்தும் நமது உழைப்பை, உயிரை உறிஞ்சி ஏய்த்து வருகிறார்கள். புரட்சியாளர்கள் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயக அரசில் மட்டுமே மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு உரிய அக்கறை செலுத்தப்படும். இந்த அரசு, மருத்துவமனைகளில் கட்டணத்தைப் புகுத்தாது; மருத்துவமனையின் வேலை நேரத்தைக் கூட்டும்; வசதிகளைப் பெருக்கும்; ஏன், தனியார் மருத்துவர்களைக்கூட குறிப்பிட்ட நேரத்திற்கு, பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று இலவச சிகிச்சைளிக்கக் கோரும் - நிர்ப்பந்திக்கும்.

எத்தியோப்பியா, சூடான், சோமாலியா, நாடுகளில் பசி-பஞ்சம், நோய்களினால்தான் கொத்து கொத்தாக லட்சக்கணக்கான மக்கள் மாண்டனர். இந்தியாவும் இந்நிலையை நோக்கித்தான் ஆளுங்கும்பலால் இட்டுச் செல்லப்படுகிறது. பின்தங்கிய உற்பத்தியில் உள்ள நெசவாளர்கள், பழங்குடியினர் போன்றவர்களிடையே இதற்கான அறிகுறியை இப்பொழுதே காண்கிறோம். இவை தடுக்கப்பட வேண்டுமானால் மக்கள் விரோத - துரோக கும்பல்கள் நம்மை ஆள்வது ஒழிக்கப்பட வேண்டும்.

● சுப்பு

## போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி....

★ மதுரை — ஆரப்பாளையம் மஞ்சமேடு பகுதியில் 'சுதந்திர' தினத்தின் முதல் நாள் ஆகஸ்டு 14 அன்று பு.மா.இ.மு. தோழர்களால் தெருமுனைப் பிரச்சாரம் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. தோழர். செந்தில் 'சுதந்திர'த்தின் முகத்திரை கிழித்து உரையாற்ற, இடையிடையே பிற தோழர்கள் ஓட்டுப் பொறுக்கிகளை அம்பலப்படுத்தி பாடினர். பாடல்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. பெண்களும் குழந்தைகளும் — ஏராளமானோர் திரண்டு வந்து தோழர்களின் கருத்துக்களுக்கு உற்சாகமாக ஆதரவளித்தனர்.

மறுநாள் — ஆகஸ்டு 15 அன்று போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி சுவரொட்டிகள் பரவலாக நகரெங்கும் ஒட்டப்பட்டன. அரசு பொது மருத்துவமனையின் சுற்றுச் சுவரில் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த தோழர்கள் மோகன் மற்றும் சௌந்திர பாண்டியன் இருவரையும் காலையிலேயே பிடித்துச் சென்ற போலீசு மாலைதான் வழக்கு பதிவு செய்தது. ''மேலிடத்து உத்தரவுப்படி நடப்பதாக'' தனது செயலுக்கு விளக்கமளித்தது. மறுநாளே போலீசின் இந்த அடவாடிதனத்தை அம்பலப்படுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

★ ஆண்டிப்பட்டியில் 13.8.94 அன்று போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி வி.வி.மு. அமைப்பின் சார்பாக பொதுக்கூட்டம் நடந்தது. ''நியாயமான கோரிக்கைகளுக்காக தொழிலாளர்களும் விவசாயிகளும் போராடினால் சுட்டுக் கொல்லுகிறது அரசு; ஆனால் லஞ்சம் வாங்கும் எம்.பி.க்களையும் எம்.எல்.ஏ.க்களையும் தட்டிக் கேட்கும் அதிகாரம் நமக்கில்லை'' எனத் தோழர்கள் உதாரணங்களை எடுத்துக் கூறி போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தினர். கூட்டத்தின் இறுதியில் ''மந்திரமா, தந்திரமா?'' நிகழ்ச்சி நடத்தப் பட்டது. 500-க்கும் அதிகமான பொது மக்கள் இறுதி வரை இருந்து ஆதரவு தந்தனர். துண்டறிக்கையின் மூலமும் தோழர்கள் மக்கள் மத்தியில் பிரச்சாரத்தை விரிவாக எடுத்துச் சென்றனர்.

★ ஆகஸ்ட் 14 அன்று கருமாத்தூரிலும் 15-ந்தேதி உசிலம்பட்டியிலும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பாக தோழர். குருசாமி தலைமையில் 'சுதந்திர'த்தின் முகவிலாசத்தை அம்பலப்படுத்தி பொதுக்கூட்டமும், கூட்ட முடிவில் ''மந்திரமா, தந்திரமா?'' கலை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன. தோழர். சிவகாமி இரு பொதுக்கூட்டங்களிலும், ம.க.இ.க. - மாநில செயற்குழு உறுப்பினர் தமிழ்மணி உசிலையிலும் சிறப்புரையாற்றினார்கள். உசிலையில் மழை பெய்தும் கூட நூற்றுக்கணக்கானோர் கலைந்து சென்றுவிடாது கருத்துக்களை ஆர்வத்துடன் கேட்டது குறிப்பிடத்தக்கது. சுவரொட்டி, சுவரெழுத்து வாயிலாகவும் பிரச்சார இயக்கம் பகுதியில் விரிவாக எடுத்துச் செல்லப்பட்டது.

★ திருச்சியில் புத்தூர் நான்கு ரோட்டில் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்திற்கு போலீசு அனுமதி மறுத்துவிட்டது. கோவையிலும் வழக்கம் போலவே இதற்கும் போலீசு அனுமதி மறுத்தது. ஆனால் 30.7.94 அன்று இந்து மத வெறியர்களின் தலைவன் அத்வானியின் பொதுக்கூட்டத்திற்கும், 'சுதந்திர' நாளன்று ஷெரோன் பிரபாகரின் ஆபாச நடனத்திற்கும் அனுமதி வழங்கி, தான் எதன் பாதுகாவலன் என்பதை வெளிச்சம் போட்டு காட்டியது கோவை போலீசு.



படிப்பகம்

www.padippakam.com

# உமையாள் மில் முதலாளிகளின் சாதிவெறி, கொலை வெறியாட்டம்.

காமராசர் மாவட்டம், திருவில்லிப் புத்தூர், ராமச்சந்திராபுரம் - உமையாள் ஸ்பின்னிங் மில்லில் 14 வருட காலமாக தொழிலாளர்கள் அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள். தொடக்கத்தில் 100 தொழிலாளர்கள் வேலை செய்த இந்த ஆலை இன்று 400 தொழிலாளர்களைக் கொண்டு இயங்குகிறது. இதில் 275 பேர் தாழ்த்தப்பட்டவர்கள். 60 பேர் பெண்கள். இருந்தும் இங்கு தொழிலாளர்கள், சங்கம் அமைக்கவோ, கோரிக்கைகளுக்காகப் போராடவோ முதலாளி தவசி ஆனந்தம் மற்றும் அவரது வாரிசான கருப்பசாமியால் அனுமதிக்கப்படவில்லை. 1982-இல் தொழிலாளர்கள் சங்கம் அமைக்க முயன்றதை அறிந்து தவசி ஆனந்தம் அதை முறியடித்தார்.

தாழ்த்தப்பட்டவர்கள் தொழிற்சாலைக்குப் புதுச் சட்டை போட்டு வரக் கூடாது; வேட்டியை இறக்கி விட்டிருக்க வேண்டும்; தலை முடியோ, மீசையோ அதிகமாய் இருக்கக் கூடாது; நாயக்கர் சாதியைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட சாதித் தொழிலாளர்களுடன் பழகக் கூடாது என ஆட்டம் போடுகிறார் முதலாளியின் வாரிசு கருப்பசாமி(இவர் சாலியர் சமூகத்தைச் சேர்ந்தவர்). இவற்றைத் தொழிலாளர்கள் மீறினால் ''பறப்பயலே, பள்ளப் பயலே!'' என்று இழிவுபடுத்தி திட்டுவது, பெண் தொழிலாளர்களை ஆண்கள் மத்தியில் ஆபாசமாக திட்டி அவமானப்படுத்துவது, வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்குவது, சம்பளத்தை இழுத்தடித்து தருவது, வேலை நீக்கம் செய்வதாக மிரட்டுவது முதலியவை குட்டி ஜமீன்தார் கருப்பசாமியின் வாடிக்கை.

தொழிலாளர்களுக்கு ஓய்வறை, கழிப்பிடவசதி, சிற்றுண்டியக வசதி, மிதிவண்டி நிறுத்த வசதி, தண்ணீர் வசதி கூட கிடையாது. இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முடிவுகட்ட எண்ணி சுமார் 16 முன்னணி தொழிலாளர்கள் சங்கம் ஒன்று கட்ட எண்ணியுள்ளனர். 'மார்க்சிஸ்டு' கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கத்தை (CITU) அணுகி அதனுடன் தங்களை டிசம்பர் '93-இல் இணைத்துக் கொண்டனர். தொழிற்சங்கத் தலைவர் தண்டபாணியை முதலாளியும் அவரது மகன் கருப்பசாமியும் அழைத்து ''சங்கம் ஆரம்பித்தவன் எங்க தொழிற்சாலைக்கு வேண்டாம். நீ முதலில் மில்லை விட்டு வெளியேறு'' என்று வெளியே விரட்டியதோடு எதிர்த்துக் கேட்ட தண்டபாணியை தாக்கினர். இதனைப் பார்த்த தொழிலாளர்கள் சத்தம் எழுப்ப பிற தொழிலாளர்களுக்கும் செய்திபரவி அனைவரும் எதிர்ப்பு தெரிவித்தபடி ஆலையை விட்டு வெளியேறினர். ஆலை இழுத்து மூடப்பட்டது.

சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தின் மாவட்ட செயலாளர் லெட்சுமணன் பேச்சு வார்த்தை நடத்தியபோது முன்னணியாளர்கள் 16 பேரை வேலையில் சேர்க்க மாட்டேன் என்று முதலாளி மறுத்தார். மேலும், 8 தொழிலாளர்களை முதலாளி புகாரின் பேரில் போலீசு கைது செய்து பிறகு ஜாமீனில் வெளிவந்தனர். இதற்கு கண்டனம் தெரிவித்து மறுநாள் ஊர்வலம் நடத்தப்பட்டது. முதலமைச்சருக்கும் பல்வேறு அதிகாரிகளுக்கும் மனு கொடுக்கப்பட்டது. தாசில்தார், டி.எஸ்.பி. அளவில் இரண்டு கட்ட பேச்சு வார்த்தை நடந்தும் பயனில்லை. வேலைக்குப் போனவர்களைத் தடுத்தார்கள் என்று மீண்டும் தொழிலாளர்கள் மீது 307 பிரிவின் கீழ் வழக்கு தொடுத்தது போலீசு. தொழிலாளர்களில் 120 பேரை மட்டும் பொறுக்கியெடுத்து மீண்டும் '94 மே மாதம் ஆலையைத் திறந்தது முதலாளிக் கும்பல்.

இதற்கு எதிராக தொழிற்சங்க முன்னணியாளர்கள், ஜூன் 20, '94-இல் சாலை மறியல் செய்யத் திட்டமிட்டு செயல்பட்டனர். ஜூன் 16-ந் தேதி மாலை இதற்கான சுவரொட்டியை ஒட்டச் சென்ற கோபாலபுரத்தைச் சேர்ந்த முன்னணியாளர் இன்னாசிமுத்து, முதலாளியின் ஆட்களால் கொலை செய்யப்பட்டு வெங்கட்ராயபுரத்திற்கும் அகத்தாபட்டிக்கும் இடையில் உள்ள ஓடைக்கருகே உள்ள மரத்தில் தூக்கில் தொங்க விடப்பட்டார். பக்கத்தில் இருந்த வயலில் உள்ள பருத்திச் செடிகள் அழிந்திருப்பது, இன்னாசிமுத்துவின் கால்களில் சேறுபடிந்திருப்பது, கால்களில் செருப்பு இல்லாதது போன்றவை கொலை நடந்ததற்கான ஆதாரங்களாக உள்ளன. ஊர் மக்களும் விசாரணை நடத்திய போலீசிடம் கொலைக்கு காரணம் உமையாள் ஸ்பின்னிங் மில் உரிமையாளர்களே என்று வாக்கு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் ஆதாரங்கள் கொடுத்துள்ளனர்.



கொலையாளியை 24 மணி நேரத்திற்குள் பிடித்து வருகிறோம் என போலீசு மக்கள் முன் சபதம் எடுத்தது. ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை. பிரேத பரிசோதனை அறிக்கையை குடும்பத்தாரிடம்கூட தராமல் மறைத்தார்கள். கொதித்தெழுந்த மக்களை ''வன்முறையில் ஈடுபட வேண்டாம்'' என்று சி.ஐ.டி.யு.வினர் உபதேசித்தனர். ஜூன் 18-ந் தேதி கோபாலபுரத்து தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் சாலை மறியலில் ஈடுபட்டனர். உடன் தாசில்தார், ஆர்.டி.ஓ., டி.எஸ்.பி. ஆகியோர் ஓடிவந்து சமாதானம் செய்து குற்றவாளிகளைப் பிடிக்க 2 நாள் அவகாசம் கேட்டனர்.

இடையில் வத்தராயிருப்பில் இருந்த போலீஸ் உதவி ஆய்வாளர் மாற்றப்பட்டு தெய்வ சிகாமணி என்ற உதவி ஆய்வாளர் வந்து அவரும் குற்றவாளிகளைப் பிடிப்பதாக வாக்குறுதி கொடுத்தார். இதுவரை எவ்வித நடவடிக்கையுமில்லை. சி.ஐ.டி.யு. சங்கமும், 'மார்க்சிஸ்டு' கட்சியும் நகரங்களில் தட்டி எழுதி வைத்ததைத் தவிர மேற்கொண்டு சுவரொட்டி, கண்டனக் கூட்டம் என்ற அவர்களது சாதாரண நடவடிக்கையைக்கூட எடுக்கவில்லை. இதனால் கோபாலபுரத்து தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தங்களது சகோதரரையும் தொழிலாளர்கள் மத்தியில் முன்னணி ஊழியரையும் இழந்த சோகமும் விரக்தியுமே எஞ்சியுள்ளது.

முதலாளிகளுடன் பேரம் பேசி சமரசமாவதும், சட்டவாதத்திற்குள் தொழிலாளர்களின் போர்குணத்தை முடக்குவதும், நிர்வாகத்தின் சூழ்ச்சிகள், கொடுமைகளுக்கு எதிராக உரிய தீவிர நடவடிக்கைக்குப் பதில் சவத்தனமான போராட்டங்கள் மூலம் பிரச்சினையை ஆறப்போடுவதும் போலிக் கம்யூனிஸ்டுகளின் வழக்கமான துரோக நடவடிக்கை, பகுதி மக்களும் தொழிலாளர்களும் துரோகத் தொழிற்சங்கத்தைப் புறக்கணித்து புரட்சிகர சங்கத்தைக் கட்டி போர்க்குணமிக்க போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

— தகவல் : செல்வ குமார், லிங்கம், அறிவரசன்; கோபாலபுரம்



படிப்பகம்

www.padippakam.com

# மேமன் கைது விவகாரம்: மோடி மஸ்தான் வித்தை

**பம்பாய் குண்டுவெடிப்பில் ''பாகிஸ்தான் சதி'' என்கிற கூச்சல், மேமன் கைதில் காங்கிரசின் தில்லுமுல்லுகளை, உளவுத் துறையின் சதிகளை மூடிமறைக்கவும் பயன்படுகிறது.**

உள்நாட்டு பிரச்சனைகள் - நெருக்கடிகள் - குழப்பங்களிலிருந்து மக்களைத் திசைதிருப்ப பாகிஸ்தான் எதிர்ப்புக் கூச்சலை இந்திய ஆட்சியாளர்களும், இந்திய எதிர்ப்புக் கூச்சலை பாகிஸ்தான் ஆட்சியாளர்களும் திட்டமிட்டுக் கையிலெடுப்பது வாடிக்கையான ஒன்றே. இந்த வகையில் தற்போது இந்தியாவிற்குக் கிடைத்த ஒரு துருப்புச் சீட்டுதான், மேமன் குடும்பத்தினர் கைது விவகாரம்.

மகாராஷ்டிர முதல்வர் சரத்பவார், தனது மாஃபியா கும்பலுடனான கிரிமினல் கூட்டு தொடர்பான கெய்ர்னாரின் குற்றச்சாட்டுகளைப் பின்னுக்குத் தள்ளுவதற்காக பம்பாய் குண்டுவெடிப்பு வழக்கில் மீண்டும் நடிகர் சஞ்சய் தத்தைக் கைது செய்து பரபரப்பாக்கினார். இதே போல் முன்பு பங்குச்சந்தை ஊழலில் அரசியல்வாதிகள் - அதிகாரிகள் தொடர்பு சந்தி சிரித்த பொழுது அர்சத் மேத்தாவை பலமுறை கைது செய்து பிரச்சினையைத் திசைதிருப்ப முயன்றது காங். கும்பல். இதே வழியில்தான் மேமன் கைது விவகாரத்தையும் ராவ் தலைமையிலான காங். கும்பல் பயன்படுத்துகிறது. நாடாளுமன்றத்தில் காங்கிரசு முன் வைத்த பங்குச் சந்தை ஊழல் விசாரணை முடிவு மீதான நடவடிக்கை அறிக்கைக்கு எதிர்க் கட்சிகள் பல வழிகளில் எதிர்ப்புக் காட்டி நெருக்கடி கொடுத்தன. இதிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே பம்பாய் குண்டு வெடிப்பு குற்றவாளியான மேமன் கைது விவகாரத்தைக் கிளப்பி விட்டது, ராவ்-சவான் தலைமையிலான கும்பல்.

சரத்பவார் மற்றும் பம்பாய் மாஃபியா கும்பல் தலைவனான தாவூத் இப்ராஹிம் இருவருக்குமிடையே உள்ள கள்ளக்கூட்டு, முன்னாள் பம்பாய் நகராட்சி துணை ஆணையாளர் கெய்ர்னார் சந்திக்குக் கொண்டு வந்ததன் மூலமும் நிரூபணமாகியுள்ளது. பவார், தாவூத் இப்ராஹிம் முடன் நெருங்கிய கூட்டாளியாக இருந்தனர், கள்ளச்சந்தை தரகு வியாபாரிகளான மேமன் குடும்பத்தினர். குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு முதல் நாள் இவர்கள் தப்பித்துச் சென்றிருந்தாலும் பவார், தாவூத் உதவியுடன் பம்பாயில் உள்ள தமது சொத்தையும் வியாபாரத்தையும் பார்த்து வந்ததோடு, தலைமறைவாக இந்தியாவிற்குப் பலமுறை வந்து போனதாகவும் கூறப்படுகிறது. மேமன் குடும்பத்தைக் கைது செய்து பிரச்சினையைப் பெரிதாக்குவதன் மூலம் கட்சிக்குள் உள்ள எதிர் தரப்பினரான பவார் கோஷ்டிக்கு நெருக்கடியைக் கொடுத்து பவார் நடவடிக்கைகளை ஓரங்கட்ட முடியும் என்பது ராவ்-சவான் கோஷ்டியின் கணக்கு. மஹாராஷ்டிராவில் தன்னை ஓரங்கட்டி, அரசியல் போட்டியாளராக செல்வாக்குடன் இருக்கும் பவாரை, தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியோடு பழி வாங்க மேமன் விவகாரத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி வருகிறார், சவான். ஆனால் மேமன் கைது மூலம் கிளப்பபடும் பாக். எதிர்ப்புக் கூச்சல், காங். கட்சிக்குள் இருக்கும் இந்த கோஷ்டி மோதல் - பழிவாங்கும் நடவடிக்கைகளை பகிரங்கமாக வெளித் தெரியாவண்ணம் மறைக்கவும் பயன்படுகிறது.

மேமன் குடும்பத்தினர் கைது - விசாரணையில் உள்ள முரண்பட்ட, குழப்பமான தகவல்களைக் கொண்டு காங்கிரசு கும்பல் இந்திய உளவுத் துறையினர் மூலம் திரைமறைவு சதிகள் - தில்லுமுல்லுகள் - அயோக்கியத்தனங்கள் செய்து வருவதை உறுதிப்படுத்தலாம். யாகூப் மேமனை டில்லி புகைவண்டி நிலையத்தில் ஆகஸ்டு 5-ம் தேதி கைது செய்ததாக மத்திய அரசு கூறியது. யாகூப் மேமனோ, தன்னை 15 நாட்களுக்கு முன்பாக நேபாள போலீசார் கைது செய்து



கைதான யாகூப் மேமன்

ஒரு வாரத்திற்கு முன்பாக இந்திய போலீசாரிடம் ஒப்படைத்து விட்டதாக நீதிமன்றத்தில் கூறினான். யாகூப் கைதுக்கு முன்பாக கள்ளச் சந்தைப் பேர்வழி உஸ்மாங்கனி நூர் முகம்மது என்பவனை குஜராத் போலீசு பம்பாயில் கைது செய்ததாகவும், அவன் மூலம் யாகூப்பை வரவழைத்து கைது செய்ததாகவும் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உளவுத் துறை ''ரா'' ஏற்பாட்டின்படி — மேமன் குடும்பத்தினர் (முக்கிய குற்றவாளி டைகர் மேமன் உட்பட) இந்திய அரசிடம் சரணடைந்துவிட்டால் பம்பாயில் உள்ள அவர்களது 50 கோடி ரூபாய் சொத்துக்களை ஒப்படைப்பதோடு டைகரைத் தவிர மற்றவர்களை வழக்கிலிருந்து விடுவித்து விடுவதாகவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி — மேமன் குடும்பத்தினர் சரணடைந்தனர் என்றும் செய்திகள் வருகின்றன.

இதுவல்லாமல் யாகூப் மேமனிடம் கைப்பற்றிய பாகிஸ்தானின் கடவுச்சீட்டு, ஒலி-ஒளிப் பேழை, யாகூப்பின் 'வாக்கு மூலம்' முதலியவற்றைக் காட்டி தாவூத் இப்ராஹிம் மற்றும் மேமன் குடும்பத்தினர் பாகிஸ்தானில்தான் இருந்தனர் என்றும் பாக். உளவு நிறுவனம் ஐ.எஸ்.ஐ.-ன் சதிதான் குண்டுவெடிப்பு என்பது நிரூபணமாகிவிட்டதாகவும் இந்திய அரசு கூறியது. இதற்கு ஒலி-ஒளிப் பேழையில் ''பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. கைக்கூலியான டௌபிக் சித்திக் ஜாலியாவாலா வீட்டுத் திருமணத்தில் தாவூத் கலந்து கொண்ட நிகழ்ச்சி உள்ளது'' என்று ஆதாரம் காட்டியது.

ஜாலியாவாலா, தாவூத்தைப் போலவே பாகிஸ்தானில் ஒரு பெரிய மாஃபியா கும்பல் தலைவன். இவனுக்கு ஐ.எஸ்.ஐ. தொடர்பும் இருக்கலாம்; தொழில்முறை கூட்டாளியாக தாவூத் திருமணத்தில் கலந்து கொண்டும் இருக்கலாம்; பம்பாய் குண்டு வெடிப்பில் தாவூத்தோ, ஐ.எஸ்.ஐ.யோ சதிசெய்ததற்கு இதில் ஆதாரம் எங்கிருக்கிறது? இந்த ஆதாரத்தை வைத்து வழக்கு விசாரணையை தொடங்காமல் ஏன் இன்னும் ஆதாரத்தை தேடிக்கொண்டும் வழக்கை இழுத்தடித்துக் கொண்டும் உள்ளார்கள்? தாவூத், மேமன் குடும்பத்தினர் பாகிஸ்தானில்தான் இருந்தனர் என்பதற்குக்கூட இந்திய உளவுத் துறையினரிடம் சரியான ஆதாரம் இல்லை என்பதுதான் உண்மை. ஆனால் முக்கிய ஆதாரம் சிக்கிவிட்டதாக பாக். எதிர்ப்புக் கூச்சல் போடுவதோடு சர்வதேச உளவுத்துறை போலீசின் உதவியை நாடி, தாவூத்தை லண்டனில் கைது செய்ததாக, ஆஸ்திரேலியாவில் சில குற்றவாளிகளைக் கைது செய்ததாகப் புரளி கிளப்பிவிட்டு தமது வக்கிர புத்தியைக் காட்டுகிறார்கள், இந்திய ஆட்சியாளர்கள். இதன் மூலம் தாம் செய்கிற சதி, தில்லுமுல்லுகளையும் வசதியாக



படிப்பகம்

www.padippakam.com

பின்னுக்குத் தள்ளிவிடுகிறார்கள்.

தாவூத் மற்றும் ஐ.எஸ்.ஐ உடன் முரண்பட்டுக் கொண்டு மேமன் குடும்பத்தினர் பம்பாயில் உள்ள சொத்தை மீட்பதற்காக இந்திய உளவுத் துறையினருடன் உடன்பாடு செய்து கொண்டு சரணடைந்ததாக கூறுகிற செய்தி உண்மையாக இருக்க வாய்ப்புள்ளது. கள்ளச்சந்தை வியாபாரிகள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், மாஃபியா-கிரிமினல் கும்பல்கள் பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை போன்ற பெருநகரங்களில் மலிந்து கிடக்கிறார்கள். இவர்கள் அனைத்து ஓட்டுக்கட்சியினருடனும் உறவு வைத்துக்கொண்டு, ஐ.எஸ்.ஐ., ரா என்றில்லாமல் அனைத்து நாட்டு உளவுத் துறையினருடனும் தொடர்பு வைத்துக் கொண்டு தமது உடனடி - சுயலாபத்திற்காக எதையும் செய்து வருகிறார்கள். இவர்கள் கட்சி மாறியும் அணிமாறியும் அரசியல்வாதிகளைப் பயன்படுத்தி ஆதாயம் - பாதுகாப்பு தேடுபவர்கள். இவர்கள் மூலமே அனைத்து நாடுகளும் ஆயுதம், ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்திலிருந்து அரசியல் - ராணுவ - தொழில்நுட்ப ரகசியங்கள் வரை கடத்துகின்றன.

இக்கிரிமினல் கும்பல்கள் மதம், மொழி, நாடு கடந்தவை என்றாலும் இதில் விரத்தியில் இருக்கும் முஸ்லீம்களை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்வதும், பாதிக்கப்பட்ட இந்துக்களை இந்தியா பயன்படுத்திக் கொள்வதும் சாதாரண நிகழ்வே. பாபர் மசூதி இடிப்பு நிகழ்ச்சிக்குப் பிறகு பம்பாயில் உள்ள மேமன் குடும்பத்தினரின் - தாவூத் கும்பலின் சொத்துக்கள், உடமைகள் ஆர்.எஸ்.எஸ், சிவசேனா இந்து வெறியர்களால் தாக்கப்பட்டன; சூறையாடப்பட்டன. இதனால் தாவூத், மேமன் குடும்பத்தினர் உணர்வு பூர்வமாகவும் பாகிஸ்தானிற்கு உதவியிருக்கலாம். சொந்த நலனிற்காக அன்று பாகிஸ்தானை பயன்படுத்திக் கொண்டதுபோல இன்று இந்தியாவை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் மேமன் குடும்பத்தினர் சரணடைந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

சரணடைந்ததற்கு வாய்ப்புகள் அதிகம் இருந்தாலும் எவ்வித ஆதாரமும் இந்திய உளவுத்துறைக்கு கிடைக்காததும், தாவூத் - ஐ.எஸ்.ஐ உடன் மேமன் குடும்பத்தினர் முரண்பட்டார்களா அல்லது மூவரும் சேர்ந்து நடத்துகிற நாடகமா என்பதும், கோஷ்டிப் பூசலிலும் செல்வாக்கு சரிவிலும் தோல்வி பயம் கண்டுள்ள ராவ்-காங். கும்பல் ஒத்துக் கொண்டதாகக் கூறப்படும் உடன்பாட்டின் படி சொத்துக்களை திருப்பி தருமா, வழக்கிலிருந்து விடுவிக்குமா என்பதும் கேள்விக் குறிகளே. காங்கிரசு, உளவுத்துறையின் இழுப்புகளுக்கிணங்க பத்திரிக்கைகளும் பொய்களை வெளியிட்டு, பாக். எதிர்ப்புக் கூச்சலை, ஐ.எஸ்.ஐ சதிகளை பெரிது படுத்தி வால் பிடித்துச் செல்கின்றனவே ஒழிய போபார்ஸ், பங்குச்சந்தை போன்ற ஊழலில் உண்மையை வெளிக் கொண்டுவந்ததில் காட்டிய அக்கறையைக் கூட காட்டவில்லை.

பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினையில் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களிலும் முஸ்லீம் தீவிரவாத அமைப்புகள், கிரிமினல் - மாஃபியா கும்பல்களையும் அடிப்படையாகக் கொண்டு பாக். உளவுப் பிரிவு ஊடுருவி சதிவேலைகளை அரங்கேற்றுகிறது என்பது உண்மைதான். அதேசமயம் பஞ்சாப்பில் நடந்த ராணுவம், போலீசுக்கு இடையிலான மோதலைப் போன்ற பல்வேறு சம்பவங்களுக்கும், வடகிழக்கு மாநில சுயநிர்ணய உரிமைப் போராளிகள் போன்ற பல்வேறு போராளிகளுக்கும் கூட ''ஐ.எஸ்.ஐ. தொடர்பு'' சாயம் பூசுவது பொய் - அவதூறு. மேலும் ஐ.எஸ்.ஐ செய்கிற அதே சதி வேலைகளை பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணங்களில் உளவுத்துறை ''ரா'' மூலம் இந்திய அரசு செய்து வருகிறது. சிந்து, பலுச்சிஸ்தான், பஞ்சாப் முதலான பாகிஸ்தானின் எல்லை மாகாணப் பகுதிகளில் உள்ள கிரிமினல் கும்பல்கள், இந்துவெறியர்களை அடிப்படையாகக் கொண்டு ஆயுத உதவி, வெடிமருந்து உதவி செய்து பல குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளையும், தாக்குதல்களையும் நடத்துகிறது, ''ரா''. எல்லைப் பாதுகாப்புப் படைகள் மூலம் எல்லை மீறி நுழைந்தும் அப்பாவி முஸ்லீம் மக்களை சுட்டுக் கொன்றும் ஆட்டம் போடும் இந்திய ராணுவம் ''தீவிரவாதிகளுடன் மோதல்'' என கதைகட்டி எளிதாக மூடிமறைத்து விடுகிறது.

மேலும் இந்தியாவில் முஸ்லீம் தீவிரவாதமும், ஐ.எஸ்.ஐ. ஊடுருவலும் பரவியதற்கும் பெருகியதற்கும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் காங்கிரசு கும்பல்கள்தான் மூலகாரணம். ராமஜென்ம பூமி இயக்கத்தின் மூலம் நாடெங்கும் மத வெறியை விதைத்துப் படுகொலைகளையும் தாக்குதல்களையும் நிகழ்த்திய ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., சிவசேனா கும்பல்களுக்குத் துணை போனது காங்கிரசு அரசு. இதன் எதிர் விளைவாகத்தான் முஸ்லீம் தீவிரவாதமும் பம்பாய் போன்ற குண்டு வெடிப்பு சம்பவங்களும் தலையெடுக்கின்றன. எனவே, மூலமாகிய ஆர்.எஸ்.எஸ்., காங்கிரசு கும்பல்கள்தான் முதலில் தண்டிக்கப்படவேண்டும். ●ராசு

## கள்ளச்சாராயத்திற்கு எதிரான இயக்கம்

கள்ளச்சாராயம் தற்போது எங்கும் குடிசைத் தொழில் போல் பரவியுள்ளது. இவை உள்ளூர் பிரமுகர்கள் - போலீசு ஆதரவோடு வீதிகளில் ''ஜோராக'' நடக்கிறது. நெய்வேலியில் கள்ளச் சாராய விற்பனையைக் கண்டித்து ''தொழிலாளர் பிரச்சாரக் குழுவைச்'' சார்ந்த தோழர்கள் பலர் ஏப்ரலில் கண்டனச் சுவரொட்டிகளை நகர் முழுவதும் ஒட்டி எதிர்ப்புத் தெரிவித்தனர். நடவடிக்கை ஏதும் எடுக்காத போலீசு சாராய வியாபாரிகளைத் தூண்டிவிட்டு சுவரொட்டிகளைக் கிழிக்க ஏற்பாடு செய்தனர். பொதுமக்கள் கொடுக்கும் புகார்களின் அடிப்படையில் கண்துடைப்புக்காக ஓரிரு நபர்களைக் கைது செய்வதும், பின் விடுவித்து அவர்களை ஊக்கப்படுத்தி மேலும் சில கடைகளை திறக்கச் செய்வதும் போலீசின் தொடர் நடவடிக்கை. பாட்டாளி மக்கள் கட்சி, தொழிலாளர் பிரச்சாரக் குழு, மக்கள் கல்வி இயக்கம், தலித் பேந்தர் ஆகிய அமைப்புகளின் சார்பாக முடிவெடுத்து 14.06.94 அன்று நெய்வேலியில் உள்ள போலீசு உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் முன்பு ஊர்வலமாகச் சென்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்து அனைத்து இயக்கங்கள் சார்பில் கண்டன சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

உதவி கண்காணிப்பாளர் 15 நாட்களில் நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதியளித்ததன் பேரில் போராட்டத்தை ஒத்தி வைத்தார்கள். ஆனால் மாதங்கள் பல ஆகியும் கள்ளச் சாராய கடைகள் ஒழிக்கப்படவில்லை.

கடந்த 31.07.94 அன்று மந்தாரகுப்பம், வட்டம் - 21-ல் உள்ள பகுதி மக்களும் மேற்படி அமைப்பினரும் 50 பெண்கள் உட்பட 150 பேர் ஒன்று திரண்டு அந்த வட்டத்தில் விற்பனை நடந்து கொண்டிருந்த இடங்களுக்குச் சென்று சாராய கேன்களையும், டியூப்புகளையும் உடைத்து விற்பனை செய்த நபர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று போலீசு உதவி கண்காணிப்பாளர் வசம் ஒப்படைத்தனர். ஆனால் போலீசு, 4 பேர் மீது வழக்கு போட்டு வெளியில் விடுவித்து விட்டது. பிரபல கள்ளச் சாராய வியாபாரிகளான பிலிப், அரும்பா, அவர் மகன் இராஜேந்திரன் ஆகியோர் மீண்டும் விற்பனையைத் தொடங்கியுள்ளதோடு ஆயுதம் தாங்கிய அடியாட்களுடன் மக்களை மிரட்டி வருகின்றனர். தடையாக இருக்கும் போராட்டக் குழுவினரை பழிவாங்கவும் காத்துள்ளனர். எனினும், பகுதி வாழ் கூலித் தொழிலாளர்களின் வாழ்வை சீரழிக்கும் கள்ளச்சாராயத்தை ஒழிக்க இவ்வமைப்பினர் தொடர்ந்து போராட திட்டமிட்டு உள்ளனர்.

தகவல்: தொ.பி.கு., நெய்வேலி.



படிப்பகம்

www.padippakam.com

## குட்டைப் பாவாடை விவகாரம்: அம்மணமானது ''காட்'' உடன்பாடு

ஷிபான், ரயான் துணியிலான ''காக்ரா'' எனப்படும் குட்டைப் பாவாடைகளை இந்தியா அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. ஆண்டொன்றுக்கு ஒரு கோடிக்கும் அதிகமாக அமெரிக்காவில் விற்பனையாகும் இப்பாவாடைகளை அமெரிக்க நுகர் பொருள் கமிஷன், ''எளிதில் தீப்பற்றக் கூடியவை'' எனக் கூறி, சென்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமெரிக்காவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்ய தடைவிதித்துள்ளது. இவற்றை வாங்கியவர்கள் கடைகளில் திரும்பக் கொடுத்துத் தொகையைப் பெற்றுக் கொள்ளுமாறு தொலைக்காட்சியில் பீதியூட்டும் பிரச்சாரம் செய்து 3 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆடைகளைத் திருப்பி அனுப்பிவிட்டது.

ஷிபான், ரயான் துணிகள் எளிதில் தீப்பற்றக் கூடியவை தான். ஆனால் இதே ரக துணிகளை மற்ற நாடுகள் ஏற்றுமதி செய்வதைத் தடுக்காத அமெரிக்கா, இந்தியத் துணிகளை மட்டும் தடுப்பது ஏன்? இத்தனை நாளும் இந்தியத் துணிகள் மீது புகார் வராத நிலையில், இப்போது திடீரெனக் குற்றம் சாட்டுவது ஏன்?

**அணு ஆயுதக் கடத்தில் தடுப்பு நடவடிக்கையில் கயமைத் தனமாக செயல்படுகிறது, அமெரிக்கா.**

அன்னிய ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிடுகிறது ராவ் அரசு. இன்னும் அதிகமாகவும் கட்டுப்பாடுகள் ஏதுமின்றியும் கொள்ளையடிக்க அனுமதிக்க வேண்டும் என்று நிர்பந்தித்து வருகிறது அமெரிக்கா; அதற்கான மிரட்டலுக்கான ஓர் ஆயுதமாகவே குட்டைப் பாவாடைகளைத் தடை செய்துள்ளது. ஏற்கனவே மனித உரிமை, ஏவுகணைத் திட்டம், அணு ஆயுதப் பரவல் தடுப்பு, சூப்பர் 301 வர்த்தகத் தடைச் சட்டம் முதலானவற்றை ஆயுதங்களாகக் கொண்டு மிரட்டிப் பணியவைக்கும்



அமெரிக்கா, இப்போது இன்னும் ஒருபடி முன்னேறி ஏற்றுமதி விவகாரத்திலும் அச்சுறுத்துகிறது. ''காட்'' ஒப்பந்தப்படியும், பல்வகை நூலிழை உடன்பாட்டின் படியும் (MFA) இப்படி திடீரென தடை செய்ய அமெரிக்காவுக்கு உரிமையில்லை. அது பிற நாடுகளை மிரட்ட வகுத்துக் கொண்டுள்ள சூப்பர் 301 வர்த்தகத் தடைச் சட்ட விதிகளின் படியும் இது நியாயமானதல்ல. ஆனாலும் இந்திய ஆட்சியாளர்கள்-எதிர்க்கத் துணிவின்றி எலும்பற்ற புழுவைப் போல சுருண்டு விழுந்து அமெரிக்காவிடம் கெஞ்சி, தரமான குட்டைப் பாவாடைகளை இனி ஏற்றுமதி செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

''காட்'' ஒப்பந்தத்தால் இந்தியாவின் ஏற்றுமதி பெருகி, அந்நியச் செலாவணி குவிந்துவிடும் என்று இங்குள்ள ஏகாதிபத்திய எடுபிடிகள் பெருங்கூச்சல் போட்டார்கள். ஆனால் - அது எவ்வளவு பெரிய மோசடி என்பதை இந்த விவகாரம் நிரூபித்துக் காட்டிவிட்டது.

## அணு ஆயுதக் கடத்தலும் அமெரிக்காவின் ஆதிக்க சூழ்ச்சியும்

கடந்த ஆகஸ்ட் மத்தியில் ஜெர்மன் நாட்டில் கைப்பற்றப்பட்ட ஒரு கப்பல், அணு ஆயுதங்கள் தயாரிக்கத் தேவையான புளுட்டோனியத்தை பாகிஸ்தானுக்குக் கடத்திச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த நான்கு மாதங்களில் ஜெர்மன் அரசு இது போல 4 கப்பல்களைப் பிடித்துள்ளது. ஆனால் அவை எந்த நாட்டுக்கு அணுச் சாதனங்களைக் கடத்திச் செல்ல முயன்றன என்று இன்னும் தெரியவில்லை. இருப்பினும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளிலிருந்து தான் புளுட்டோனியம்-239, லிதியம்-6- முதலான அணுச் சாதனங்கள் கடத்தி வரப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை சர்வதேச கிரிமினல் மாஃபியாக்கள் கடத்திச் செல்ல முயற்சித்திருக்கலாம் என்பதையும் இதனால் ஏற்படப் போகும் கோரமான விளைவுகளையும் எண்ணி உலகமே பீதியில் உறைந்து போயுள்ளது.

இக்கடத்தல் விவகாரத்துக்கும் தமக்கும் எவ்விதத்திலும் தொடர்பில்லை என்று பாக். அரசு கூறுகிறது. ஆனால் பாக். எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான நவாஸ்ஷெரீப், பாகிஸ்தானிடம் அணுகுண்டு உள்ளது என்று தமது அரசியல் ஆதாயங்களுக்காக அம்பலப்படுத்தினார். இதைச் சாதகமாக்கிக் கொண்டு, பாகிஸ்தானின் அணு ஆயுத ஆற்றலைத் தடுத்து அதைப் பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டுமென இந்திய அரசு தனது பாக். எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தி வருகிறது. இந்துவெறி பாரதீய ஜனதாவினர், பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவும் அணுகுண்டு தயாரிக்க வேண்டுமென்கின்றனர்.

இந்நிலையில், கடந்த மாத இறுதியில் நேட்டோ (NATO) கூட்டமைப்பு நாடுகள் அணு ஆயத அபாயம் பெருகியுள்ளதாகக் கூறி, அனைத்து நாடுகளும் கூட்டாக இதைத் தடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது. அதைத் தொடர்ந்து அனைத்துலக அணுசக்தி ஏஜென்சி, ரஷியா மீது புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப் போவதாகக் கூறியுள்ளது. ஆனால் அணு ஆயுதத் தயாரிப்புக்கான இரசாயனப் பொருட்கள் கடத்தப்படுவது இப்போது முதன் முறையாக நடப்பதல்ல. 1978-இல் யுரேனியம்-235 என்ற அணுச்சாதன ரசாயனப் பொருள் அமெரிக்காவிலிருந்து ரஷியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த ஈராக் யுத்தத்தின் போது, புளுட்டோனியத்தைக் கொண்ட குண்டுகளை ஈராக் மீது ஜெர்மன் வீசியுள்ளது. இதுதவிர கடந்த பத்தாண்டுகளில் 400-க்கும் மேற்பட்ட அணுச் சாதன கடத்தல்கள் நடந்துள்ளன. ஆனால் அப்போதெல்லாம் வாய் திறக்காத அணுசக்தி ஏஜென்சியும் அமெரிக்காவும் இப்போது மட்டும் கூப்பாடு போடுவது ஏன்?

ரஷ்ய ஒன்றியச் சிதைவுக்குப் பிறகு, ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தி நிற்கும் ரஷியா மீது மேலாதிக்கம் செலுத்துவது; இதர ஏழைநாடுகள் அணுவாற்றலைப் பெற முடியாமல் தடுப்பது என்ற நோக்கத்


படிப்பகம்

www.padippakam.com



துடன்தான் அமெரிக்கா இப்போது காய்களை நகர்த்து கிறது. கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ரஷியா, தனது ஏவுகணைத் தொழில் நுட்பத்தையும், இரண்டாம் தர ஏவுகணைகள் - ஆயுதங்களையும் இந்தியா போன்ற ஏழைநாடுகளுக்கு விற்பதைத் தடுப்பது; ரஷ்ய அணுவாற்றல் நிலையங்களைப் பாதுகாப்பது - மேற்பார்வையிடுவது என்ற பெயரில் அமெரிக்க நிறுவனங்களை நிர்ப்பந்தமாகத் திணித்து, சேவைக் கட்டணமாக பல கோடிகளைப் பறித்துக் கொள்வது, மொத்தத்தில் ரஷியாவின் அணுவாற்றலை முடக்கி விடுவது என்பதுதான் அதன் நோக்கமாக உள்ளது.

இதுதவிர, தெற்காசியாவில் அணு ஆயதப் பரவலைத் தடுப்பது என்ற பெயரில், இந்தியாவை அணு ஆயதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு நிர்பந்திப்பது; ரஷிய கூட்டோடு துவங்கப்பட்ட அணுசக்தி திட்டங்களையும், அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல் திட்டம், ஏவுகணைத் திட்டங்களையும் முடக்குவது என்பதே அதன் நோக்கமாக உள்ளது. அதே சமயம் ஏகாதிபத்தியங்கள் மட்டுமே அணு ஆயுதங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள ஏகபோக உரிமை பெறுவது என்கிற திட்டத்துடன்தான் அமெரிக்கா இந்த விவகாரத்தைப் பூதாகரமாக்கி வருகிறது. இரகசிய பேரங்கள் - பேச்சுவார்த்தைகள் மூலம் அணு ஆயதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் தற்காலிகமாகத் தப்பித்து வந்த இந்திய ஆட்சியாளர்கள், அமெரிக்காவின் புதிய நிர்பந்தங்களைக் கண்டு விழி பிதுங்கி நிற்கின்றனர்.

## அகதிகள் பெருக்கத்தால் அலறுகிறது அமெரிக்கா

மத்திய அமெரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு நாடான கியூபாவில் தலையிட்டு வரும் அமெரிக்க வல்லரசு, அங்கிருந்து தப்பியோடிவரும் அகதிகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆப்பசைத்த குரங்காக அலறுகிறது. ரஷிய சார்பு போலி சோசலிச கொள்கைகளைக் கொண்ட அதிகாரவர்க்க - இராணுவ ஆட்சி முறையே கியூபாவில் நீடிக்கிறது. கடந்த 23 ஆண்டுகளாக பிடல் காஸ்ட்ரோ அந் நாட்டை ஆண்டு வருகிறார். முன்னாள் ரஷிய ஒன்றியத்தின் எடுபிடி நாடாக இருந்த கியூபா, அமெரிக்காவைத் தொடர்ந்து எதிர்த்து வந்தது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா அச்சின்னஞ்சிறு நாட்டின் மீது கடந்த மூன்று தலைமுறைகளாகப் பொருளாதார - வர்த்தகத் தடைகளை விதித்து வந்தது. காஸ்ட்ரோவைக் கொல்லவும், பதவியிலிருந்து விரட்டவும் தனது உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மூலம் பல சதிகளை அமெரிக்கா செயல்படுத்தியது. உள்நாட்டில் குழப்பங்களைத் தோற்றுவித்து, தமது கைக்கூலிகளைக் கொண்டு காஸ்ட்ரோவுக்கு எதிராக கலகங்களைத் தூண்டிவிட்டது. அதன் பிறகு கியூபாவில் ஜனநாயகம் - மனித உரிமை மதிக்கப்படுவதில்லை என்று கூறி அந்நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கத்தோடு, பெருமளவில் கியூபா மக்களை அகதிகளாக அமெரிக்காவுக்கு ஓடிவரத் தூண்டிவிட்டது. அமெரிக்காவின் கானல் நீரை நம்பி பல்லாயிரக் கணக்கான கியூபா மக்கள் கலகம் செய்யவே, 1980-இல் அதிபர் காஸ்ட்ரோ எல்லையைத் திறந்து விட்டார். அதைத் தொடர்ந்து ஏறத்தாழ ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அமெரிக்காவின் அரக்கன்சாஸ் மாநிலத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

அகதிகள் பெருகி வருவதைக் காட்டி கியூபாவை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தித் தாக்கி விடலாம் என்று அமெரிக்கா கனவு கண்டது. ஆனால் அரக்கன்சாஸ் மாநிலத்தில் கியூபா அகதிகளுக்கும்



கடல்வழியே மிதவைகளில் அமெரிக்காவுக்குத் தப்பிச் செல்லும் கியூபா அகதிகள்.

அமெரிக்க வெள்ளையர்களுக்குமிடையே இனவெறியின் காரணமாக கலவரம் மூண்டது. வெள்ளை இனவெறியைத் தடுக்கவும் முடியாமல், அகதிகளுக்குப் பாதுகாப்பான புகலிடம் அளிக்கவும் முடியாமல் புதிய நெருக்கடிக்குள் அமெரிக்கா சிக்கிக் கொண்டது. ஆனாலும் அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புக் கொள்கைகளைக் கைவிடவில்லை. காஸ்ட்ரோவுக்கு எதிராகக் கலகம் செய்து கியூபாவில் தண்டிக்கப்பட்டவர்களைத் தனது நாட்டில் குடியமர்த்துவதாக ஆசை காட்டியது. ரஷிய - கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களுக்குப் பின்னரும் கூட, இன்னமும் பதவியில் நீடிக்கும் காஸ்ட்ரோவை வீழ்த்துவதே அதன் நோக்கமாக இருந்தது.

இதன் விளைவாக கடந்த இரு மாதங்களாக கியூபாவிலிருந்து ரகசியமாக வெளியேறி பல்லாயிரக் கணக்கான மக்கள் அமெரிக்காவின் புளோரிடா - மியாமி கடற்கரைப் பகுதிகளில் அகதிகளாகக் குவிகின்றனர். அவர்களுக்குப் புகலிடம் அளிக்கவோ நிவாரண உதவிகள் செய்யவோ முடியாமல் அமெரிக்கா தத்தளிக்கிறது. தங்களை நிராதரவாக தவிக்க விட்டுள்ள அமெரிக்காவை எதிர்த்து கடந்த ஆகஸ்ட் இறுதியில் கியூபா அகதிகள் கலவரத்தில் இறங்கினர். இதுதவிர, கியூபாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு தமக்கு "விசா"- கடவுச்சீட்டு கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகின்றனர். அகதிகள் பெருக்கத்தைச் சமாளிக்க முடியாத நிலையில், தென் அமெரிக்க நாடுகளிடம் அகதிகளை ஏற்குமாறு அமெரிக்கா கோரியது. ஆனால் எந்தநாடும் இதை ஏற்கவில்லை. மூன்று தலைமுறைகளாக கியூபாவைத் தனிமைப்படுத்தியதன் எதிர்விளைவுதான் இது; கியூபாவுடன் பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வு கான வேண்டும் என்று லத்தீன் அமெரிக்க நாடுகள் கோருகின்றன.

எல்லா ஏகாதிபத்தியவாதிகளும் கல் ஒன்றைத் தூக்கி காலில் போட்டுக் கொள்ளும் முட்டாள்கள் என்றார் தோழர் மாவோ. அதிலும் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டுக் கொண்டு அமெரிக்க முட்டாள்கள் அலறிக் கொண்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம், வாரீர்!

இந்தத் தொடரை நாம் எழுதிக் கொண்டிருக்கும் போதே வாசகர்களிடம் இருந்து நமக்குக் கடிதங்கள் வரத் துவங்கி விட்டன. சில கடிதங்கள் வீரமணியின் துரோகத்தனங்கள் மீது ஆத்திரம்-வெறுப்பை வெளிப்படுத்தியும் நமது நிலைப்பாடுகளை ஏற்றும், இத்தொடரைத் தனிவெளியீடாகக் கொண்டு வர வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தன. இன்னும் சில கடிதங்கள், பெரியார் மீதான நமது விமர்சனங்கள் ஆதாரபூர்வமாக இருப்பதை ஏற்கும் அதேசமயம். ''பெரியார் கூட இப்படிச் செய்தாரா!'' என்கிற வியப்பையும் அதிர்ச்சியையும் வேதனையையும் வெளிப்படுத்தின. வேறு சில கடிதங்கள் வீரமணியின் மீதான நமது குற்றச்சாட்டுகள் சரியானவை என்று ஏற்கும் அதே சமயம் பெரியார் மீது எவ்விதக் குறையும் கூறக் கூடாது; அவர் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர் என்கிற பகுத்தறிவற்ற உபதேசம் செய்கின்றன.

இவற்றில் குறிஞ்சிவளவன் என்கிற வாசகர் கடிதம் தோழமைபூர்வமாக சில கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளன. அவை: அம்பேத்கர், பெரியார், மார்க்ஸ், ஸ்டாலின் போன்ற புரட்சித் தலைவர்களின் பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் அடிப்படை ஒன்றுதான். அவர்களில் அம்பேத்கரும் பெரியாரும்தான் இந்தியாவில் புரட்சியாளர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களையும் மார்க்சையும் நாட்டிலுள்ள புரட்சிகர இயக்கங்கள் எல்லாம் தம் தலைவர்களாக ஏற்றுக் கொண்டுள்ளன. ஏனெனில் இவர்கள் மூவரும் மூன்று வடிவங்களில் புரட்சி செய்தவர்கள். பெரியாரை ஏற்காத, அவர் கொள்கைகளை ஏற்காத எந்த இயக்கமும் தன்னைப் புரட்சிகர இயக்கம் என்று கூறிக் கொள்ள முடியாது. ராஜாஜியோடு நெருக்கமாக இருந்தாலும், பார்ப்பனர்களுக்கு எதிரான தம் கொள்கையில் பெரியார் தடம் புரண்டது கிடையாது; அப்படிப் பார்ப்பனர்களே குறை கூறியது கிடையாது. அம்பேத்கர் கூட பெரியாரையோ, அவர் கொள்கைகளையோ குறை கூறியது இல்லை; பெரியார் எது செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் எனக் கருதினார். எந்த ஒரு மனிதனும் முழுமையான மனிதன் அல்ல. எப்படிப்பட்ட தலைவர்களாக இருந்தாலும் அவர்களிடமும் ஒரு சில குறை இருக்கும். அது தவிர்க்க முடியாது. எனினும் அப்படிப்பட்ட குறைகளில் சமுதாயத்திற்கு என்ன இழப்பீடு எனக் கருதவேண்டும். அதை விட்டுவிட்டு குறை கூறுவதே தொழிலாகக் கருதக்கூடாது. பெரியாரின் குறைகள் தற்போது (எழுதுவது) நாட்டிற்குத் தேவையானதுதானா? பெரியாரைக் குறை சொல்லிவிட்டு, நீங்கள் யாருடைய கொள்கைகளை ஏற்றுப் புரட்சி செய்யப் போகிறீர்கள்? பெரியாரின் கருத்து முரண்பாடுகள் தற்போது அத்தியாவசிய பிரச்சினையா? நாட்டில் எவ்வளவோ குறைகள், குற்றங்கள் நடக்கின்றன; ஊழல்கள் நடக்கின்றன; அதன் பக்கம் உங்களின் ஆராய்ச்சியைத் திருப்புங்கள்.

இதே வாசகர் சற்று ஆவேசப்பட்டு பின் வருமாறும் எழுதியுள்ளார். தங்கள் அமைப்பில் மட்டும் குறையே கிடையாதா? அதில் உள்ள தோழர்கள் அனைவரும் புடம் போட்ட தங்கங்களா? கொள்கைக் குன்றுகளா? பார்ப்பனர்களை ஒரு போதும் தன் கழகத்தில் சேர்க்காது பெரியார் சாதித்தவைகளைவிட பார்ப்பனர்களை இயக்கத்தில் சேர்த்து நீங்கள் என்ன சாதித்து விடுவீர்கள்? ஒரு சில இயக்கங்களில் கொள்கைகளில் சில முரண்பாடுகள் இருக்கலாம். அதற்காக அனைத்து இயக்கங்களையும் குறை கூறி விட்டு நீங்கள் மட்டும் எப்போது புரட்சி ஏற்படுத்தப் போகின்றீர்? குறை கூறுவது மட்டுமே ஒரு புரட்சிக்காரனின் வேலை அல்ல. நல்லதைப் பாராட்டவும் வேண்டும். மக்களைப் புரிந்து கொள்ளாமல் எதையும் சாதிக்க முடியாது. தமிழகத்து மக்களிடம் கம்யூனிசத் தலைவர்களின் பெயர்களைச் சொல்லி புரட்சியை ஏற்படுத்த முடியாது. பாமர மக்களுக்கு காரல் மார்க்ஸ் என்றால் புரியாது. ஆனால் அம்பேத்கரையும் பெரியாரையும் சொன்னால் கொள்கை தெரியாவிட்டாலும் புரிந்து கொள்வார்கள். எனவே உங்களுடைய விசாலப் பார்வை, விமர்சனம் அந்த அளவிற்கு செல்வது நல்லதல்ல.

இவரும் இன்னும் சில வாசகர்களும், ''பெரியாரை வீரமணியிடம் இருந்து விடுதலை செய்வோம், வாரீர்!'' என்று இத்தொடருக்குத் தலைப்பு கொடுத்துவிட்டு பெரியார் மீதே விமர்சனம் எழுதுவது முரண்பாடாக இருக்கிறது; ஒன்று தலைப்பை மாற்றுங்கள் அல்லது பெரியாரைக் குறை கூறுவதை நிறுத்துங்கள் என்று எழுதியுள்ளனர். இத்தொடரின் தலைப்புக்கான விளக்கமாக வீரமணியிடமிருந்து பெரியாரை விடுதலை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து முடிவுரையாக எழுதுவது என்று நாம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தோம். கூடவே இந்த வாசகர்கள் எழுப்பியுள்ள கேள்விகள், விமர்சனங்களுக்குப் பதில் சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

பெரியாரைக் ''குறை சொல்வது'' — விமர்சிப்பது இந்தத் தொடரின் நோக்கமல்ல என்பதை வாதப் பிரதிவாதத்தை அதன் சாரத்தை யதார்த்த நோக்கில் காணும் எவரும் அறிய முடியும். பிறப்பால் பார்ப்பனர்களான ஒரு சில தோழர்கள் எமது அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதையே சாக்காக வைத்து பார்ப்பனத் தலைமை, என்று அவதூறு செய்து வரும் வீரமணி கும்பல், அதை நியாயப்படுத்துவதற்காக பிறவிக்குணம், சாதிப் புத்தி என்றெல்லாம் பெரியாரை மேற்கோள் காட்டி வாதிட்டு வருகிறது. அதை மறுக்கும்போது, பார்ப்பனர்கள் குறித்து நம்மை எச்சரிக்கை செய்யும் திராவிட இயக்கத்தினரே, குறிப்பாக அதன் நிறுவனரான பெரியாரே, தான் அதுவரை பிரச்சாரம் செய்து வந்த பொருந்தாத் திருமணத்திற்கே பார்ப்பன ராஜாஜியிடம் ஆலோசனை பெற்றதை சான்றாகக் காட்டினோம். அதேபோல பார்ப்பனிய எதிர்ப்பு அமைப்புகளின் தலைமைக்கு இன்ன சாதிப் பிறப்புடையவர் இருக்கக் கூடாது என்கிற வாதத்தை மறுக்கும் போது, தலித் அமைப்புகளின் நிலைப்பாட்டையும், அவை பெரியாரைத் தமது சமூகப் பிரதிநிதியாக ஏற்காததையும், பெரியாரும் தன்னைக் குறிப்பிட்ட சமூகப் பிரதிநிதியாகக் கருதி வந்ததையும் எடுத்துக்காட்டி எழுதியிருந்தோம்.

நமது வாதங்களுக்கு நேர்மையாகப் பதிலளிப்பதற்குப் பதில் பித்தலாட்டங்கள் நிறைந்த பிரதிவாதங்களை மட்டுமே வீரமணி கும்பல் அடுக்கியது. அவற்றை மீண்டும் மறுத்து, பெரியார் சம்மந்தப்பட்ட விவகாரங்களில் மேலும் ஆதாரபூர்வமாக எழுதினோம். அவை பெரியார் மீது குறை கூறுவனவாக, விமர்சனங்களாக இருந்தாலும் (வரலாற்று உண்மைகள்) மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. வீரமணியின் துரோகத்தனங்களை அங்கீகரிக்கும் பெரியாரியவாதிகள் உண்மையில் சுயமரியாதை — பகுத்தறிவுக்காரர்களாக இருந்தால் இன்னொரு உண்மையையும் அங்கீகரித்தாக வேண்டும். பார்ப்பனராகப் பிறந்த அனைவருமே விதிவலக்கின்றி சதி — சூழ்ச்சி — அடுத்துக் கெடுக்கும் நயவஞ்சகர்கள், துரோகிகள் என்று ஒரு புறம் பேசும் வீரமணி கும்பல்தான், மறுபுறம் பார்ப்பன — பாசிச ஜெயலலிதா கும்பலின் பாதந்தாங்கியாக இருந்து, அதிலே பாரதீய ஜனதாவுடன் குலாவுவதையும் காண்கிறோம். இந்த இரண்டு கடைகோடி நிலையையும் பெரியாரைச்சான்று காட்டியே வீரமணி கும்பல் நியாயப்படுத்தி வருகிறது என்றால் அதற்கான அடிப்படை ''பெரியாரிய''த்திலும் அதை உருவாக்கிய பெரியாரிடமுமே இருந்திருக்கிறது. பெரியாரிடத்தில் இருந்த ''குறைபாடு''களை அங்கீகரித்து, நிராகரிக்காத எவரும் வீரமணி கும்ப



படிப்பகம்

www.padippakam.com

லின் துரோகத்தனங்களை முற்றாக அம்பலப்படுத்தவோ, முறியடிக்கவோ முடியாது; அப்படிச் செய்யாதவர் எவரும் தாமும் துரோகத்தனத்துக்குப் பலியாவது தவிர்க்க முடியாது. அப்படிச் செய்வது ''பெரியாரிய''த்துக்கும் பெரியாருக்கும் எதிரானதும் அல்ல.

பெரியார் அடிக்கடி ஒன்றைக் கூறுவார். ''நான் - ஈ.வெ. ராமசாமி சொல்கிறேன் என்பதற்காக நீங்கள் எதையும் ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை. உங்கள் சொந்த புத்தியைக் கொண்டு நன்றாக யோசித்துப் பாருங்கள். உங்கள் சொந்த புத்திக்கு ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே எது ஒன்றையும் ஒப்புக் கொள்ளுங்கள்'' என்பார், பெரியார். காரல் மார்க்சிடம் அந்தப் பண்பு இருந்தது. ''எல்லாவற்றையும் சந்தேகியுங்கள்; விமர்சனப் பார்வையோடு பாருங்கள்'' என்றார்.

ஆனால் பகுத்தறிவுவாதிகள் என்று கூறிக் கொள்ளும் பெரியாரியவாதிகள், அவரை விமர்சன கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்வதைக் கண்டு ஆத்திரமடைகின்றனர். ''யாரிடம் தான் குறைபாடு இல்லை; நீங்கள் மட்டும் யோக்கியமா?'' என்கிற பகுத்தறிவற்ற வாதத்தை முன் வைக்கின்றனர். இந்தப் பகுத்தறிவற்ற போக்கு ஒரு பொது நியதியாக்கப்பட்டு நிறைய வரலாற்றுப் புரட்டு செய்வதோடு நடப்பு அரசியல் மோசடிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. நமது வாழ்நாளிலேயே, நமது கண் முன்னாலேயே மிகப் பெரிய ''சேடிச'' — வக்கிர, பாசிச, பயங்கரவாதியாக வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர். அவரது ஆட்சியின்போது இதைச் சொல்லி பிரச்சாரம் செய்த கருணாநிதி உட்பட வை.கோ. ராமதாஸ் முதல் ஆளும் காங்கிரசு அரசுகள், மக்கள் தொடர்பு சாதனங்கள் ஆகிய ''அனைவருமே'' அவரை இன்று போற்றுதற்குரிய ''புனித''ராக்கி விட்டனர். இப்படித்தான் பிழைப்புவாத — கவர்ச்சிவாத அரசியலின் நிறுவனர் ''பேரறிஞர் அண்ணா'' என்றும், பார்ப்பன வெறியர் ராஜாஜி ''மூதறிஞர்'' என்றும், நிலப்பிரபுத்துவ — சாதி அரசியல்வாதி காமராஜர் ''பெருந்தலைவர்'' என்றும், பார்ப்பன — சனாதன வருணாசிரம ஏகாதிபத்திய தாசன் காந்தி, ''மகாத்மா'' என்றும், பரம்பரை ஆட்சியை நிறுவிய நேருவை ''பாரத — ஆசிய ஜோதி'' என்றும் லஞ்ச ஊழல் — பாசிச இந்திரா ''பாரத மாதா'' என்றும் ''புனிதர்''களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். ராஜீவ் காந்தியை விமர்சித்து விட்டார் என்பதற்காக பார்ப்பன வெங்கடராமன் மீதே பாசிச காங்கிரசு கும்பல் பாய்வதைப் பார்க்கிறோம். ''இறந்தவர்களைக் குறை கூறக் கூடாது'' என்கிற இந்து மத' தர்மம் ஓட்டுப் பொறுக்கிகள் — அவர்களுடைய ஆதரவாளர்களிடையே எழுதப்படாத ஒப்பந்தமாக உள்ளது. இப்படிப் ''புனிதர்''களாக்கப்பட்ட கேடுகெட்ட அரசியல் தலைவர்களில் ஒருவராகவோ, அவர்களுக்கு இணையானவராகவோ நிச்சயமாகப் பெரியாரை நாம் கருதவில்லை. ஆனால் இத்தகைய வரலாற்றுப் புரட்டு பகுத்தறிவுக்கு உகந்ததாக ஏற்க முடியாது.

''கொள்கையில் தடம் புரளாதவர்'' என்று கூறப்படும் பெரியார், ஆட்சியில் இருப்பவர்களை ஆதரிப்பதற்காக எதையும் செய்யக் கூடியவராக இருந்தார். தனக்கு உடன்பாடற்றவைகளை எல்லாம் பார்ப்பன முத்திரை குத்துபவராக இருந்தார் என்பதற்கு இந்தத் தலைமுறையினர் அறியாத இரண்டு சான்றுகளைப் பாருங்கள்!

★ முதல் இந்தி எதிர்ப்புப் போரைத் தலைமை தாங்கி நடத்திய அதே பெரியார்தான் தமிழகத்தைக் குலுக்கிய 1965 இந்தி எதிர்ப்பு எழுச்சிப் போராட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். துரோகி வீரமணி அதற்குத் துணை நின்றார்.



சென்னையில் பா.ஜ.க. 'சமூகநீதி காத்த வீராங்கனைக்கு' பாராட்டு கூட்டம் நடத்தியதிலும் வீரமணி கலந்து கொண்டார்.

★ கருணாநிதிக்கு ''டாக்டர்'' பட்டம் வழங்குவதைக் கடுமையாக எதிர்த்துக் ''கலகம்'' செய்த அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்திக் கொல்லப்பட்ட மாணவர் உதயக்குமார் தன் மகன் அல்ல என்று அவனது தந்தையிடமே எழுதிவாங்கி சட்டமன்றத்தில் படித்தார் கருணாநிதி. திருச்சி — குடமுருட்டி பாலத்தில் மீன் பிடிக்க வைக்கப்பட்ட வெடி குண்டு தன்னைக் கொல்வதற்காக, ''பகலில் ஹிப்பிகளாகவும் இரவில் நக்சல்பாரிகளாகவும் திரியும் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் வைத்தது'' என்று புளுகினார் கருணாநிதி. அதை ஏற்று பெரியார் பின்வருமாறு எழுதினார், ''இன்று நம் நாட்டில் பார்ப்பனர் எங்கு பார்த்தாலும் வன்முறை — பலாத்காரம் ஆகியவைகளை செய்து கொண்டும், தூண்டி விட்டுக் கொண்டும் வருகிறார்களே இதற்கு ஆதாரம் என்ன என்று நம் மக்கள் சிந்திக்கலாம்.

''இன்று பார்ப்பனர் நடந்து கொள்ளும் ஒவ்வொரு காரியமும், அவர்களது சாஸ்திர, புராண, இதிகாசங்களின் படிதானே ஒழிய, அவர்களது தொண்டு அல்ல என்பது ஆதாரபூர்வமான காரியமாகும்.

''வெள்ளைக்காரன் ஆட்சியில் வெடி குண்டெறிந்தும் தண்டவாளத்தைப் பெயர்த்தும் ரயிலைக் கவிழ்த்தும், கட்டிடங்களை நெருப்பிட்டுக் கொளுத்தியும் கலெக்டர்களைச் சுட்டுக் கொன்றதுமான செய்கைகளும் 1948-இல் காந்தியைச் சுட்டுக் கொன்ற செய்கையும் அம்பேத்கரை கொன்ற செய்கையும் முதலிய எல்லா செய்கைகளும் அவர்களது தர்ம சாஸ்திர புராண இதிகாசப்படியான காரியங்கள்தானே ஒழிய புதிய தோற்றங்கள் அல்ல.

''மற்றும், R.S.S. (ஆர்.எஸ்.எஸ்) என்னும் ஸ்தாபனமும், கம்யூனிஸ்ட் இடது — தீவிர ஸ்தாபனங்களும் ''நக்சல்பாரி!'' என்னும் ஸ்தாபனமும் மற்றும், திருச்சி முதலிய இடங்களில் உள்ள இரகசிய ஸ்தாபனங்கள் பலவும் 'உடல் அப்பியாச ஸ்தாபனங்கள்' என்னும் பேரால் உள்ள ஸ்தாபானங்களும் அவர்களது ஆதாரப்படி வைத்து நடத்தப்பட்டு, செயல்பட்டு வருபவை மற்றும் அண்ணாமலை சர்வகலாசாலையில் நடக்கும் 'இனச் சதிகளும்'. இதில் சேர்ந்தவைதான்'' (விடுதலை, பெரியார் 93-வது பிறந்த நாள் மலர் பக்:33). ஆக, புரட்சிகர இயக்கங்களை பார்ப்பன அமைப்புகளோடு சேர்த்து முத்திரை குத்தி அவதூறு செய்வது என்பது பெரியார் காலத்தில் இருந்தே அவராலேயே துவக்கி வைக்கப்பட்டதுதான்.

பெரியார் என்பவர் தனி மனிதர் அல்ல. அவரது வாழ்க்கை 50 ஆண்டு கால திராவிட இயக்கத்துடனும், தமிழக வரலாற்றுடனும் இணைந்திருக்கிறது. ''பெரியாரியம்'' தமிழகத்திலும், இந்தியாவிலும் மட்டுமல்ல, உலகம் முழுவதும் வெற்றி பெற்று விட்டதாகவும், பெரியாரின் பெயரைச் சொல்லாத, திராவிட இயக்க வழிவராத எவரும் ஆட்சியைப் பிடிக்க முடியாததே அதற்குச் சான்று என்றும் கூறிக் கொள்கின்றனர். ஆனால் பார்ப்பன — பாசிச ஜெயா கும்பலின் ஆட்சி நிறுவப்பட்டிருப்பதுதான் பெரியாரியத்தின் வெற்றி என்றால் அவரது உண்மையான ''வாரிசுகள்'' வெட்கப்படத்தான் வேண்டும். ஏனெனில் இது திராவிட இயக்கத்தின் கவர்ச்சிவாத, பிழைப்புவாத பொறுக்கி அரசியலின் வெற்றி



படிப்பகம்

www.padippakam.com

யைத்தான் குறிக்கிறது. திராவிட இயக்கத்தின் சீரழிவுப் போக்குகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு எதிராகப் போராடி மக்களை மீட்காமல் புரட்சிகர இயக்கம் ஒரு போதும் வெற்றி பெறவும் முடியாது. இந்தப் பணி பெரியார் கட்டி எழுப்பிய இயக்கத்தின் மீதான விமர்சனங்களில் இருந்து துவங்குவதும் தவிர்க்க முடியாது.

பெரியர் தனது இயக்கம் ஒரு அரசியல் இயக்கம் அல்ல; சமூகப் புரட்சி இயக்கம் என்றே கூறிவந்தார். ஆனால் உண்மையில் நாடாளுமன்ற — சட்டமன்ற அமைப்புக்கு வெளியே நின்று கொண்டு அதன் மீது செல்வாக்கு செலுத்துவதை முக்கிய நடைமுறையாகக் கொண்டிருந்தார். அதிலே அவர் தனது முன்னோடியான நீதிக் கட்சியின் பிழைப்புவாத காரியவாத, சந்தர்ப்பவாத அரசியலையே தொடர்ந்தார் என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன.

''பார்ப்பானையும், பாம்பையும் கண்டால் முதலில் பார்ப்பானை அடி'' என்று நமக்குச் சொன்ன பெரியார், சட்டமன்ற சந்தர்ப்பவாத அரசியலுக்கேற்ப பார்ப்பனர்களைப் பயன்படுத்த அவர்களோடு கூட்டுச் சேருவதை ஏற்றார். நீதிக் கட்சி தேர்தல்களில் தோல்வியுற்றபோது, சுப்பராயன் தலைமையில் காங்கிரசு — பெரியார் ஆதரவுபெற்ற அமைச்சரவை ஏற்படுத்துவதற்காக அதில் சேதுரத்தின அய்யர் என்ற மணத்தட்டை மிராசுதாரர் சேருவதை பெரியார் ஆதரித்தார். (இந்த பார்ப்பனர் பங்கேற்ற சுயேச்சை அமைச்சரவைதான் இடஒதுக்கீடு சட்டம் போட்டதே தவிர திராவிட இயக்கத்தினர் புளுகி வருவதை போன்று நீதிக்கட்சி அரசு அல்ல.) இந்தப் பார்ப்பன அமைச்சர் முன்னிலையில்தான் பல வருண சாதி, மத, எதிர்ப்பு தீர்மானங்களை நிறைவேற்றிய முதல் சுயமரியாதை மாநாடே நடந்தது. பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி ஏற்றி மாநாடு துவங்கியது!

அடுத்த தேர்தலைச் சந்திப்பதற்காக, ''கட்சியின் கொள்கைகளை ஒப்புக் கொண்ட பிராமண சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்சியின் சட்டமன்றப் பிரிவில் சேர்த்துக் கொள்வது'' என்று நீதிக் கட்சி முடிவு செய்தது; இதை ''அடியேனும் நட்பு கொண்டு சம்மதமும் வாக்குத் தத்தமும் செய்வதாக'' பெரியார் குறிப்பிடுகிறார் (குடிஅரசு 13.10.'29). பார்ப்பனர்களை நீதிக் கட்சியில் சேர்க்கக் கூடாது, கட்சி சார்பாக தேர்தலில் நிறுத்தவோ, ஆதரிக்கவோ கூடாது என்று நிபந்தனை போட்ட பெரியார் பின்வருமாறு எழுதினார்: தமக்குப் பலம் வரும் பொழுது பார்ப்பனர்கள் ஆதரவு தேவை இல்லையென்றும் பலம் இல்லையென்று தெரியும் போது பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவும் அவர்களுக்கு உத்தியோகமும் கொடுக்கவும் சிறிதும் பின் வாங்கக் கூடாதென்றும் சில சமயங்களில் தைரியக் குறைவு ஏற்பட்டால் தாமாகவே பார்ப்பனர்களை நாடிக் கொண்டு போகலாம் என்றும் பெரியார் எழுதினார் (குடிஅரசு 13.10.29). இச்சந்தர்ப்பவாதத்திற்கேற்ப தானே வாதிட்ட நிபந்தனையை மீறி திருச்சி சட்டமன்றத் தேர்தலில் கிருஷ்ணமாச்சாரி என்ற பார்ப்பன மிராசுதாரரை ஆதரித்தார். இதற்கு திருவரங்கம் தி.க. கிளையே எதிர்ப்பு தெரிவித்தது. 1956-இல் இட ஒதுக்கீடுக் கொள்கையை ஏற்கும் நிபந்தனையுடன் காங்கிரசில் இணைவதாக திருநெல்வேலியில் இருந்த இராஜாஜிக்குத் தூது அனுப்பினார். 1960-களில் காங்கிரசு ஆட்சியை ஆதரித்தபோது இளைஞர்கள் அக்கட்சியில் சேர வேண்டும் என்றார். 1970-களில் கருணாநிதி ஆட்சியை ஆதரித்தபோது பெரியார், சிவசைலம் அய்யர் கருணாநிதி கூட்டாக சிம்சன் தொழிலாளர்களை ஒடுக்கியதை ஆதரித்தார்.

பெரியாரியம் என்பது இந்த மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று சிலர் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், ''நெடும்பலம் சாமியப்பா பிள்ளை போன்ற மிராசுதார்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே சமீன்தார் அல்லாதார் மாநாடு நடத்தினார். நாட்டுக் கொட்டை செட்டியார்களின் அருகில் அமர்ந்து கொண்டு லேவாதேவிக்காரர் அல்லாதார் மாநாடு நடத்தினார். நீதிக் கட்சியின் ஆட்சிக்குப் பரிபூரண ஆதரவு தெரிவித்துக் கொண்டே (சிலசமயம்) பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்தார். காந்தியின் வருணாசிரம் தர்மமே சமதர்மத்துக்குத் தடை என்று கூறிக் கொண்டே, வருணாசிரம சுயராச்சிய கட்சித் தலைவரை ஆதரித்தார். இந்த வினோதமான நிலைப்பாட்டை சிங்காரவேலர் போன்றவர்கள் விமர்சித்தனர். சமதர்மத்துக்கு வாயுபச்சாரம் (Lip service) செய்வதைவிடக் கைவிடலே மேல் என்று சிங்காரவேலர் எழுதினார்.

> பெரியாரிடத்தில் இருந்த ''குறைபாடு''களை அங்கீகரித்து, நிராகரிக்காத எவரும் வீரமணி கும்பலின் துரோகத்தனங்களை முற்றாக அம்பலப்படுத்தவோ, முறியடிக்கவோ முடியாது; அப்படிச் செய்யாதவர் எவரும் தாமும் துரோகத்தனத்துக்குப் பலியாவது தவிர்க்க முடியாது.

''இத்தகைய விமர்சனங்கள் எவையும் பெரியாரை இம்மியும் அசைத்து விடவில்லை. பணக்காரர்களின் தயவில் மாநாடுகள் நடத்தியதை / நடத்துவதை / நடத்தப்போவதை மறுக்கவே இல்லை. இயக்கம் தடை செய்யப்படும் என்பதனால் சமதர்ம பிரச்சாரம் நிறுத்தப்பட்டது என்பதையும் வெளிப்படையாக அறிவித்தார். அரசாங்கத்தாரிடம் மன்னிப்பும் கேட்கச் செய்தார். நாத்திகப் பிரச்சாரத்தையும் அரசு தடை செய்தால் அதையும் கைவிடத் தயாராக இருந்தார். 10.3.35-இல் குறிப்பிட்ட சாதி வேறுபாடுகளால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகிய கோரிக்கைகளைக் கூட அரசு தடை செய்தால் அவற்றையும் நிறுத்திவிடுவேன் என்றும் வெளிப்படையாகவே பெரியார் அறிவித்தார்.

''இயக்கம் தொடர்ந்து இருக்க வேண்டுமெனில் கொள்கைகளைக் கைவிடவும் தயார் என்ற நிலை தோன்றிவிட்டது. கொள்கைகளுக்காக இயக்கம் என்ற நிலை தலைகீழாகப் போய் இயக்கத்துக்காக கொள்கை என்ற நிலை ஏற்பட்டது. இது இயக்கம் பிழைத்திருப்பதற்காகச் செய்யப்பட்ட அப்பட்டமான **பிழைப்புவதாப் போக்காகும்.** எனவே சமதர்மப் பிரச்சாரத்தை ஏற்பதற்குக் கவர்ச்சிவாதம் அடிப்படையாக இருந்ததைப் போலவே கைவிடுதலுக்குப் பிழைப்புவாதம் அடிப்படையாக இருந்தது''. (முனைவர் கோ. கேசவன் சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும் பக்: 244 - 47)

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக படித்த இளைஞர்கள் பெருமளவில் சமதர்மக் கருத்தின் பக்கம் ஈர்க்கப்படுவதும் காந்திகூட தன்னைப் பொதுவுடைமைவாதி என்று அறிவிப்பதுமான நிர்பந்தமான சூழல் அன்றிருந்தது. ''இந்தச் சூழலில் அரசு எதிர்ப்பு, முதலாளிய சமீன்தாரிய எதிர்ப்பு, சமதர்ம ஆதரவு ஆகிய கருத்துக்களுக்கு மக்களிடத்தில் ஒருவித கவர்ச்சித்தன்மை இருந்தது. மக்களிடத்தில் எதற்குக் கவர்ச்சியுண்டோ அதைப் பயன்படுத்திக் கொண்டு செயல்படுதலே புத்திசாலித்தனமான அரசியலாகும். இதைக் கையாண்ட பெரியார், சமதர்மக் கருத்துக்களின் அரசியல், பொருளாதார பரிமாணங்களையெல்லாம் புறக்கணித்து விட்டு, இதற்கு முன்னர் தான் சொன்ன கருத்தக்களையே சமதர்மம் என்றார். நீதிக்கட்சியை சமதர்மக் கட்சி என்று வருணித்துள்ளார். நீதிக்கட்சி இறுதியில் ஒப்புக் கொண்ட (14.11.35) தன் திட்டத்தை விட அரிய பெரிய திட்டங்களையுடைய பொதுவுடமைக் கட்சி ஏதாவது உண்டா என்று கேட்கிறார் (குடிஅரசு 9.12.44) சமதர்மத்துக்குரிய கவர்ச்சித் தன்மையைப் பயன்படுத்தினாலும் அதையும் தன் சீர்திருத்தவாத முதலாளிய கண்ணோட்டத்தில் பயன்படுத்தும் தன்மையைக் காண்கிறோம்''.(டி பக்.247)

பெரியார் பின்பற்றிய சுயமரியாதை, பகுத்தறிவு, கடவுள் மறுப்பு ஆகி


படிப்பகம்

www.padippakam.com

யவையும் குறைபாடுகள் நிறைந்தவை தாம். அவை இயக்க இயல், வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையிலான வையும் அல்ல; அல்லது அறிவியல் பூர்வமான அவரது சொந்தத் தத்துவமும் அல்ல. அவரது சுயமரியாதை ஆத்திகம் நாத்திகம் இரண்டையும் ஏற்பதாக இருந்தது. அவரது பகுத்திறிவு பொருள்முதல் வாதம், கருத்துமுதல்வாதம் இரண்டையும் உள்ளடக்கியிருந்தது. இவற்றில் பலரும் நினைப்பதைப் போல பொருள்முதல்வாதப் பகுத்தறிவைவிட கருத்துமுதல்வாதப் பகுத்தறிவே மேலோங்கியிருந்தது; சாதிப்புத்தி, பிறவிக்குணம், கடவுள் புராண இதிகாச எதிர்ப்பு ஆகியவற்றுக்கு அவர் அளித்த விளக்கம் கருத்துமுதல்வாதப் பகுத்தறிவு அடிப்படையிலானதே. "ஒரு முகப்பட்ட சிந்தனை பெரியாரிடம் இல்லாததன் காரணமாகவே கடவுள், சமயம், நாத்திகம், ஆத்திகம் என்பன போன்றவற்றில் பெரியார் தொடர்ச்சியான நிலைப்பாடுகளை மேற்கொள்ளவில்லை" என்கிற முனைவர் கோ. கேசவனுடைய மதிப்பீடு மறுக்க முடியாதது.

இப்படிப் பெரியாரிடம் பல்வேறு குறைபாடுகள் இருந்தபோதிலும் பார்ப்பன சனாதன - வருணாசிரம, சாதி எதிர்ப்பு, சாதி வேறுபாடுகளைக் களைதல், சமய மறுப்பு, பெண்ணுரிமை, தீண்டாமை எதிர்ப்பு போன்ற சமூகச் சீர்திருத்தங்கள், தமிழ்நாட்டில் ஒரு முதலாளிய ஜனநாயகப் புரட்சிக்குரிய பண்பாட்டு துறை ஆகியவற்றில் அவரது பங்களிப்பு மதிக்கவும், போற்றவும் தக்கனவாக இருந்தன. ஒரு தலைவரது வாழ்க்கை மற்றும் இயக்கத்தின் குறைநிறைகளை ஆய்ந்து, யதார்த்த பூர்வமான மதிப்பீடுகளைச் செய்து, அதன் அடிப்படையிலேயே புரட்சிகர இயக்கம் தனது அணுகுமுறைகளை வகுத்துக் கொள்ள முடியும். அவரது குறைபாடுகளை விமர்சித்து நிராகரிக்கும் போதே அவரது நிறைகள் - சரியான பங்களிப்புகளில் இருந்து பாடங்களைக் கற்று வளர்த்தெடுத்து முன்னேறுவதுதான் அத்தலைவருக்குச் செலுத்தும் உரிய மரியாதையாகும். மாறாக அவரது இலட்சியங்கள் - கொள்கைகளுக்கு சமாதி கட்டிவிட்டு, அவரைப் பூசை அறைப் பொம்மையாக்கித் துதி பாடுவது உண்மையில் அவருக்குச் செய்யும் துரோகம் ஆகும். இதைத்தான் இன்று பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் உட்பட எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஆளும் வர்க்கப் பிரச்சார சாதனங்களும் செய்கின்றன. "பெரியாரின் சொத்து"க்களை ஆண்டு அனுபவித்து வரும் வீரமணி கும்பல் தனது பச்சைத் துரோகங்களை மூடிமறைப்பதற்காக அவருக்கு அதீத விசுவாசிகளாக நடிக்கிறார்கள்; "யாரிடம் தான் குறைபாடில்லை எல்லோரையும் குறைசொல்லக் கூடாது நீ மட்டும் யோக்கியமா?" என்ற பகுத்தறிவற்ற எதிர்வாதங்களை வைத்து தனது அணிகளுக்கு பெரியார் மீது வெறும் வெறியேற்றுகின்றனர்.

பெரியாரை நாம் எந்த அளவுக்கு ஏற்கிறோமோ அதை அங்கீகரித்து அதற்கேற்ப தமது அணுகுமுறையை வகுத்துக் கொள்வதுதான் பெரியாரியவாதிகளின் கடமை. அதைவிட்டு பெரியாரை விமர்சனமற்ற முறையில் ஏற்க வேண்டும், இல்லையானால் பார்ப்பன முத்திரை குத்துவோம் என்பது சரியாகாது. பெரியாரியத்தில் இருந்து நாம் அடிப்படையிலேயே மாறுபடுகிறோம். இந்திய சமூகத்தில் பார்ப்பன சனாதன — வருணாசிரம, சாதி ஆதிக்கத்தின் தனிச் சிறப்பான பங்கைச் சரியாகவே வலியுறுத்தினார், பெரியார்; ஆனால் அது மற்ற பிற மேல் சாதி, மேல் வருண ஆதிக்கத்தையும் உள்ளடக்கி இருப்பதை மறுத்து பார்ப்பன வருண, சாதிக்கு மட்டுமே குறுக்கிச் சுருக்கி விட்டார். அந்த ஆதிக்கத்தைக் காண மறுத்து இங்கு வர்க்க ஆதிக்கம், அதிலும் குறிப்பாக பொருளாதார — சுரண்டல் ஆதிக்கம் மட்டுமே நிலவுவதாகக் கூறி போலிக் கம்யூனிஸ்டுகள் செயல்பட்டு வந்தார்கள். ஆனால் நமது நிலைப்பாடு வேறானது. பார்ப்பன சனாதன, வருணாசிரம - சாதி ஆதிக்கம், வர்க்க ஆதிக்கம் இரண்டுமே இங்கே நிலவுகிறது; இவற்றில் ஒன்று ஒழிந்தால் மற்றது ஒழிந்து விடும், அல்லது ஒவ்வொன்றாகத்தான் ஒழிக்க முடியும் என்பதை ஏற்க முடியாது என்கிறோம்.

> திராவிட இயக்கத்தின் சீரழிவுப் போக்குகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு எதிராகப் போராடி மக்களை மீட்காமல் புரட்சிகர இயக்கம் ஒரு போதும் வெற்றி பெறவும் முடியாது. இந்தப் பணி பெரியார் கட்டி எழுப்பிய இயக்கத்தின் மீதான விமர்சனங்களில் இருந்து துவங்குவதும் தவிர்க்க முடியாது.

மேற்கண்ட நமது மதிப்பீடுகளின் அடிப்படையில் பெரியார் ஒரு முதலாளிய சீர்திருத்தவாதிதான் என்கிற முடிவுக்கு நாம் வந்துள்ளோம். ஒரு காலனிய, அரைக்காலனிய, அரைநிலவுடமை அமைப்பில் முதலாளிய சீர்திருத்தவாதியாக நின்று போராடுவதும் முற்போக்கானது; அவரிடம் புதிய ஜனநாயகப் புரட்சி செய்பவர்கள் ஏற்கத்தக்க அம்சங்களும் உண்டு. அதே சமயம் "பெரியாரியம் என்பது மண்ணுக்கேற்ற மார்க்சியம்" "பெரியார், கார்ல் மார்க்ஸ், லெனினைப் போன்று உழைக்கும் மக்களின் புரட்சித் தலைவர், வழிகாட்டி" என்பதை நாம் மட்டுமல்ல, வேறு எந்தப் புரட்சிகர இயக்கமும் ஏற்கவில்லை. அப்படி யாராவது ஏற்பதாகத் தோன்றினால் அவர்கள் தமது அமைப்புக்குள் ஒன்றும் வெளியில் வேறொன்றுமாக பேசி நடந்து கொள்கிறார்கள்.

பெரியாரிடம் நாம் காணும் முதலாளிய சீர்திருத்த நடைமுறை எதுவும் வீரமணி கும்பலிடம் கிடையாது. இயக்கத்தின் சொத்துக்களை சுயநலன்களுக்காகக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் பெரியாரிடம் இல்லை. அதற்காக தனது சொத்து சுகங்களையும் தியாகம் செய்தார். மணியம்மையைப் பொருந்தாத் திருமணம் செய்து கொண்டு சொத்துக்களுக்கு வாரிசாக்கியது சுயநல நோக்கமுடையது அல்ல. ஆனால் வீரமணி கும்பல் தனது சுயநலன்களுக்காக இயக்கத்தின் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டு ஆண்டு அனுபவிக்கிறது. இந்த நிலையைக் காப்பாற்றி விரிவு படுத்திக் கொள்வதற்காக பெரியார் இயக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்து ஆண்டு தோறும் அதற்கு நினைவுநாள் கொண்டாடுகிறது; வீரமணி கும்பலின் துரோகங்களை அம்பலப்படுத்தும் போதெல்லாம் "பெரியார் இயக்க"த்தையே குறை கூறுகிறார்கள் என்று கூறி அவதூறு செய்கிறது. பெரியாரின் பெயரால் சமூக சேவை, கல்விப் பணி என்று கூறிக் கொண்டு சுரண்டல் "கம்பெனிக"ளும் நடத்துகிறது. பெரியாரியவாதிகளுக்கு எதிரான அவதூறுகளுக்கும் பெரியார் சொத்துக்களையே பயன்படுத்துகிறது.

இந்த துரோக வீரமணி கும்பலிடம் இருந்து பெரியாரையும், இயக்கத்தையும் அதன் சொத்துக்களையும் மீட்க வேண்டியது தமிழ்நாட்டு முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளின் கடமையாக உள்ளது. வீரமணி கும்பலுக்கு எதிராக ஒரு பொதுப் புறக்கணிப்பும், பெரியார் மற்றும் அவரது பெயரைப் பயன்படுத்துவதற்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடத்தித் தடுக்க வேண்டும். இயக்கத்தின் சொத்துக்களை வீரமணி கும்பலிடம் இருந்து பறிமுதல் செய்து ஜனநாயக முறைப்படி இயங்கும், தேர்ந்தெடுக்கப் பட்ட "கமிட்டி"யிடம் ஒப்படைக்க வேண்டும். இயக்கத்தின் வரவு, செலவுகளை அக்கமிட்டி ஆண்டுதோறும் மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். பெரியாரின் வரலாறு, கொள்கை, இலட்சியங்களை திறந்த ஆய்வுக்குரிய விவாதமாக்கிப் பிரச்சாரமும், அதன் அடிப்படையிலான இயக்கமும் நடத்த வேண்டும். ஆகவே, பெரியார் மீது உண்மையான பற்றும், மதிப்பு உள்ளவர்கள் அனைவரையும் அழைக்கிறோம்! பெரியாரை வீரமணியிடம் இருந்து விடுதலை செய்வோம் வாரீர்!!

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

# பிஞ்சு மனதில் மதவெறியை திணிக்கும் பண்டாரங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

பாபர் மசூதியை இடித்த இந்து வெறி கயவர்கள், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்திர பிரதேசத்தில் பள்ளி பாடத்திட்டத்தில் இந்து வெறி போதனைகளைத் திணித்தவர்கள் இன்று தமிழகத்தில் ஆட்சியதிகாரம் இல்லாத போதே அத்தகைய வெறியாட்டம் போடத் தொடங்கிவிட்டார்கள். கோவை பெர்க்சு மேல்நிலைப்பள்ளி நிர்வாகம் காஞ்சிமடபன்றி ஒருவனின் கட்டளைப்படி 250 கோடி அச்சிட்ட தாள்களில் ''இராம இராம'' என எழுதுமாறு கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் திணித்துள்ளனர். எழுதப்பட்ட தாள்களை பெர்க்சு பள்ளியின் வளாகத்திற்குள் புதைத்து அதன்மீது இராமன் கோயில் கட்ட திட்டமிட்டுள்ளனர்.

அறிவியலையும், பொது அறிவையும், ஒற்றுமையையும் போதிக்க வேண்டிய கல்வி நிலையங்கள் மதவாதிகளின் கூடாரமாக மாற்றப்படுகிறது. மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் கல்வி நிறுவனங்கள், இந்து மதத்தின் பஜனை மடமாக மாறிவருகிறது. இந்து மதவெறியை பிஞ்சு உள்ளங்களிலேயே விதைக்கும் முகமாக பள்ளி மாணவர்களை ''ராம ராம'' எழுதச் செய்வதை உடனடியாகத் தடைசெய்து மாணவர்களிடம் கொடுக்கப்பட்ட தாள்களைக் கைப்பற்றுமாறு அரசைக் கோரியும், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் 4.8.94 அன்று உடுமலை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., திராவிடர் கழகம், . இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் வா.நா. தன்மானன், கா.கருமலையப்பன், வி.இராசசேகரன், வி.கே.செல்வராசு, கிருட்டிணசாமி, சாமிநாதன், எம்.எம்.வீரப்பன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கோவை மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த தோழர் மணிவண்ணன் அழைப்பின் பேரில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

தகவல்: ம.க.இ.க. கோவை.


''புதிய ஜனநாயகம்''

வளர்ச்சி நிதிக்கான கலைநிகழ்ச்சி

## அடிமைத்தளையறுக்கும் அசுரகானங்கள்

அக்டோபர் 8, 1994 மாலை 6 மணிக்கு

சுவாமி சங்கரதாஸ் கலையரங்கம்,
153, ஹபிபுல்லா ரோடு, சென்னை-17.

நன்கொடை ரூ.100, ரூ.50, ரூ.25

தலைமை : தோழர். **சீனிவாசன்,** மாநிலப் பொருளாளர்,
ம.க.இ.க., தமிழ்நாடு

வாழ்த்துரை : கவிஞர் - பேராசிரியர் **இன்குலாப்**

*இது சுதா ரகுநாதனின் கர்நாடக இசையோ*
*பத்மா சுப்ரமணியத்தின் பரத நாட்டியமோ அல்ல*
*மடோனா - சமந்தா .:.பாக்ஸின் ஆபாச கூத்தல்ல*
*உஷா உதுப்பின் கொஞ்சும் பாடலும் அல்ல*
*மாறாக உணர்ச்சி பொங்கும்*
*உழைக்கும் மக்களின் விடுதலை முழக்கமாகும்.*

இவண்

மக்கள் கலை இலக்கியக் கழகம்
புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி



முற்போக்கு நூல்கள் பத்திரிக்கைகள், ஒலிநாடாகளுக்கு.

## கீழைக்காற்று

வெளியீட்டகம் - விற்பனையகம்
10, ஔலியா சாகிப் தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.

புதிய வரவு

- காந்தியும்-காங்கிரசும் ஒரு துரோக வரலாறு - பு.மா.இ.மு.
- டாக்டர். அம்பேத்கர் எழுதிய நூல்கள் - தொகுதி I, II
- இந்து, இந்தி, இந்தியா - எஸ்.வி.ராஜதுரை
- TOWARDS COMMUNAL HARMONY A Collection
- சமர் (தமிழ் அகதிகள் இலக்கியவட்டம், பிரான்சு)
- FRONTIER-WEEKLY
- A WORLD TO WIN
- அடிமைச்சாஸம் - ம.க.இ.க.
  (காட்-டங்கலுக்கு எதிரான பாடல் தொகுப்பு)


### அறிவிப்பு

''மார்வாடி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள்'' என்று தலைப்பிட்ட புதிய ஜனநாயகத்தின் கட்டுரைக்கு ''தமிழர் கண்ணோட்டம்'' பத்திரிக்கை, 'விமர்சனக்' கட்டுரை ஒன்று எழுதியுள்ளது. இதற்கு நமது பதில் அடுத்த இதழில் இடம் பெறும்.

### பிழை திருத்தம்

கடந்த 1 ஆகஸ்டு 94 புதிய ஜனநாயகம் இதழில் ''கொங்கு வேளாளக் கவுண்டர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களா?'' என்ற கட்டுரையில் சுப்புராயரின் மகன் ரங்கராஜன் குமாரமங்கலம் என்று தவறாக உள்ளது. சுப்புராயரின் மகன் மோகன் குமாரமங்கலம் இவரது மகன் ரங்கராஜன் குமாரமங்கலம் என திருத்திப் படிக்கக் கோருகிறோம்.

கடந்த 1 செப். '94 புதிய ஜனநாயகம் இதழ் கேள்வி பதில் பகுதியில் சௌராஷ்டிரர்கள் மராட்டிய மன்னன் சரபோஜி காலத்தில் தமிழகத்தில் குடியமர்த்தப்பட்டதாக தவறாக உள்ளது. அவர்கள் விஜயநகர மன்னர்களின் படையெடுப்பைத் தொடர்ந்து-நாயக்கர் காலத்தில் - குடியமர்த்தப்பட்டார்கள் என்பதே சரி. எமது கவனக்குறைவால் நிகழ்ந்த மேற்கண்ட தவறுகளுக்கு பெரிதும் வருந்துகிறோம். இனி எச்சரிக்கையுடன் செயல்படுகிறோம்.

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# போலீசின் அத்துமீறலை மறைக்க இனச்சாயம்

இந்திய போலி சுதந்திரத்திற்கு முதல் நாள் (ஆகஸ்ட்-14) தமிழக, கேரள எல்லையில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் தமிழக போலீசும் வனத்துறை அதிகாரிகளும் நடத்திய அத்துமீறிய - காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்கள் அவற்றின் மக்கள் விரோதத் தன்மையை படம் பிடித்துக் காட்டுகின்றன.

குமுளி மலைப்பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மக்களும், கேரள மக்களும் வாழை, ஏலக்காய், மிளகு விவசாயம் செய்து வருகிறார்கள். மரங்கள் இல்லாத திறந்த புல்வெளிகளாக இருந்த மலை உச்சிப் பகுதியை விவசாய நிலங்களாக, மரமும் நிழலும் உள்ள குடியிருப்பு பகுதிகளாக மாற்றினார்கள். இதேபோல் மழையடிவாரத்தில் காடுகளை அழித்து விவசாயம் செய்தும் வந்தனர். மலை உச்சியிலிருந்து கீழ் நோக்கி நிலங்களை ஆக்கிரமித்து முன்னேறியவர்களில் பெரும்பான்மையோர் மலையாளிகள். அதுபோல மலையின் கீழ்பகுதியிலிருந்து மேல் நோக்கி முன்னேறியவர்கள் தமிழர்கள். இருந்தாலும் இன்று பொதுவாகவே மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உள்ள குமுளி, வண்டிப்பெரியார், லோயர்கேம்ப் போன்ற பகுதிகளில் தமிழர்களும் மலையாளிகளும் கலந்தே ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள்.

தமிழக வனத்துறையினர் கடந்த இரண்டு மூன்று வருடங்களாக வெள்ளாமை நேரத்தில் சென்று அழித்து நாசம் செய்வதும் பிறகு, விவசாயம் செய்ய விட்டு விடுவதுமாக ஆட்டம் போட்டு வருகிறார்கள், விவசாயிகள் நிம்மதியின்றியே விவசாயம் செய்து வருகிறார்கள். கடந்த 93-ஆம் ஆண்டு புதிதாக காடு வெட்டி விவசாயம் செய்ய முயன்ற விவசாயிகளுக்கும் வனத்துறையினருக்கும் மோதல் நடந்து, பாலகிருஷ்ணன் என்ற ஒரு 'கார்டு' இறந்து போனார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னாள், மலை உச்சியில் விவசாயிகளின் காடு ஆக்கிரமிப்பை அகற்ற வனத்துறை அதிகாரி (டி.எப்.ஓ.) நாதன் முயற்சி செய்தார். நாதன் மற்றும் போலீசு உயரதிகாரிகள் தலைமையில் ஒரு ஆயுதம் தாங்கிய போலீசு பட்டாளம், மலை உச்சிக்கு ஏற முயன்றது. மேலேயிருந்த விவசாயிகள் பாறைகளை உருட்டி விடவே, ஏறிச் செல்ல முடியாத நிலையில் கேரளாவிற்குள் உள்ள சாலை வழியாக, உள்ளே சென்று வாகனங்கள் மூலமாக செல்ல உத்தேசித்தனர். ஆனால் மக்கள் போராடவே கேரள அரசு யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. கேரள — இடுக்கி மாவட்ட ஆட்சியாளர், தமிழக — மதுரை மாவட்ட ஆட்சியாளர் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினாலும் கேரளாவிற்குள் தமிழக போலீசார் யாரும் அனுமதிக்கப்படவில்லை. கேரள எல்லையில் கேரள அரசால் போலீசு பாதுகாப்பு போடப்பட்டது.

ஆகஸ்டு 14-ந் தேதி நூற்றுக்கணக்கான அதிரடிப் படையினர் நவீன ஆயுதங்களுடன் தமிழகப் பகுதிகள் வழியாக மலை மீதேறி தாக்கத் தொடங்கினர். குமுளியில் ஆக்கிரமிக்கப்பட்டதாக கூறப்படும் 371 ஹெக்டேர் நிலப்பரப்பில் உள்ள குடிசைகளும், கட்டிடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. இதே சமயத்தில் கூடலூரில் முன் எச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் சுமார் 30 பேரை கைது செய்து 4.5 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தது, போலீசு. பூ வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களைகூட விட்டுவைக்கவில்லை. இப்படி வெறியாட்டம் போட்ட போலீசு பட்டாளத்திற்கு ஒரு நாளைக்கு 70,000 ரூபாய் செலவு செய்தார்கள்.

இதனை தமிழ் பத்திரிக்கைகள் (தினமலர், நக்கீரன் போன்றவை) தமிழன், மலையாளி பிரச்சினையாக சித்தரித்து, மலையாளிகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான தமிழனின் யுத்தம் என்று எழுதி இனவாதச்சாயம் பூசின. மலையின் உச்சிப் பகுதியில் கேரளா — குமுளி காங். எம்.எல்.ஏ., பி.ஏ. ஜோசப் என்பவருக்கு அதிகமான நிலங்கள் சொந்தமாக உள்ளன. இவரும் இவரைப் போன்ற சிலரும் சேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ''ஆக்கிரமிப்பை'' அகற்ற தடை வாங்கினார்கள். இந்த உத்தரவை மீறித்தான் போலீசின் தாக்குதல் நடந்தது. எம்.எல்.ஏ. ஜோசப் மக்களைத் திரட்டிக் கொண்டு தமிழக வனத்துறை, போலீசு நடவடிக்கைகளுக்கு எதிராக உண்ணா விரதம், ஊர்வலம் என போராடி வருகிறார். இதைச் சுட்டிக்காட்டிதான் தமிழகப் பத்திரிக்கைகள் மலையாளி, தமிழர் மோதலாக சித்தரிக்கின்றன. மலைப்பகுதி ஆக்கிரமிப்பால் வைகை அணைக்கு தண்ணீர் கிடைப்பதில்லை என்றெல்லாம் கழுதை வாலுக்கும் கன்று குட்டி வாலுக்கும் முடிச்சுப் போட்டு பித்தலாட்டம் செய்கிறார்கள்.



போலீசு குண்டர்களால் உடமை இழந்து கதறி முறையிடும் விவசாயி.

உண்மையில் மலை உச்சிப் பகுதியில் தமிழ் மக்களும் இடம் பிடித்து வைத்துள்ளனர். தமிழ் பள்ளிக் கூடம் போன்ற வசதிகள் குறைவு என்பதால் தமிழர்கள் அதிகம் அங்கு வசிக்கவில்லை. இதே போல் தமிழக மலையடிவாரப் பகுதிகளில் மலையாளிகள் பலர் 100 கணக்கான ஏக்கர் நிலங்களை, வீட்டு மனைகளை வாங்கி உள்ளனர். கேரள பகுதியில் எஸ்டேட்டுகளை வாங்கி பல தமிழர்கள் பண்ணையார்களாகவும் உள்ளனர். மேலும் மக்களிடையே இனப்பகையை என்பது இங்கு துளியும் இல்லை. கலாச்சார உறவுகளில் சில வேறுபாடுகளைத் தவிர அரசியல் - பொருளாதார உறவுகளில் ஒற்றுமையாகவே உள்ளனர்.

ஆனால் அரசும்,. போலீசும் தங்களது காட்டுமிராண்டி நடவடிக்கையை அத்துமீறலை மறைப்பதற்காக பத்திரிக்கைகள் மூலம் பிரச்சினையை இன மோதலாக திசை திருப்பிக் கொண்டிருக்கின்றன. சி.பி.ஐ. கட்சியினர் கூடலூரில் தட்டி பிரச்சாரத்தின் மூலமாக போலீசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். லோயர் கேம்ப் பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணியினர் வனத்துறை, போலீசின் அடாவடித்தனத்தைக் கண்டித்தும் மக்களைப் பிரித்து மோதவிட இனச்சாயம் பூசுவதைக் கண்டித்தும் சுவரொட்டி இயக்கம் எடுத்தனர். பிற ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் மௌனமாகவே இருந்தன. 'மார்க்சிஸ்டு' கட்சியினரோ அரசு செய்வது சரி என்று வக்காலத்து வாங்கிப் பேசவும் செய்கின்றனர். மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று இடம் — நட்ட ஈடு கொடு, நீதி மன்ற உத்திரவை மீறி அத்துமீறிய தாக்குதல் தொடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடு முதலான கோரிக்கைகளை வைத்து வி.வி.மு. தொடர்ந்து இயக்கம் எடுத்து வருகின்றனர்.

தகவல் : வி.வி.மு. லோயர்கேம்ப்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்



# இதுதான் இன்றைய இந்தியா

ஒரே பொய்யைத் திரும்ப திரும்பக் கூறி உண்மையென பிறரை நம்ப வைப்பது ஏமாற்று பேர்வழிகளின் தந்திரங்களுள் ஒன்று. ஆட்சியாளர்களின் அந்த முயற்சிக்கு இன்று வயது நாற்பத்தெட்டு. நாம் அடைந்து விட்டதாகச் சொல்லப்படும் 'சுதந்திரம்' தான் அந்தப் பொய். வழக்கம் போலவே ஆகஸ்ட் 15 காலையில் பாகிஸ்தானை வம்புக்கிழுத்தும் ஏகாதிபத்தியங்களை, பிரிவினைவாத - பயங்கரவாத சக்திகளை எச்சரித்ததும் வீர வசன நாடகமொன்று டில்லி செங்கோட்டையில் அரங்கேறியது. மாலைப் பொழுதிலோ மற்றுமொரு 'சுதந்திர' தினம் இனிமையாகக் கழிந்ததைக் கொண்டாட, பட்டாடைகள் பளபளக்க குடியரசுத் தலைவர் மாளிகையில் குழுமினார்கள் இந்தியாவின் முதல்தர குடிமக்கள், குடும்பத்தோடு கலந்து கொண்டு ஒருவரையொருவர் குசலம் விசாரித்தும், ஆடம்பரமாக உண்டும் - குடித்தும் கும்மாளமடித்ததைத் தவிர, வேறு எதில் அக்கறை கொண்டிருப்பார்கள் இவர்கள்?



இதோ இந்த ஆதிவாசி மக்களிடம், ''ஆகஸ்ட் 15 எப்படி கழிந்தது?'' என்று கேட்டுப் பாருங்கள். போலீசின் இரும்புத் தடி சுதந்திரமாக அவர்கள் மண்டைகளைப் பிளந்ததையும் கைகளை முறித்துப் போட்டதையும் வேதனையோடு கூறுவார்கள். பம்பாய், நில முதலைகளின் நகரமாகிப் போனதால், தாங்கள் வாழ்ந்து வந்த கண்டிவிலிப் பகுதியில் இருந்து துரத்தப்பட்டார்கள் இவர்கள். அதனால் ''தாங்கள் வாழ்ந்த பகுதியிலேயே மீண்டும் தங்களைக் குடியமர்த்த வேண்டும்'' என்ற தங்களின் உரிமையைக் கோரி, 'தேசிய'க் கொடி ஏற்றச் சென்ற இவர்களுக்கு காங்கிரசு அரசு கொடுத்த 'சுதந்திர' தினப்பரிசு இது.

நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைத்துவிட்டு கூத்தும் கும்மாளமும் அடிக்க ஆட்சியாளர்களுக்கு சுதந்திரம். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்காக சனநாயக வழியில் போராடுபவர்களுக்கு அடக்குமுறை. இதுதான் ஆகஸ்டு 15-ன் உண்மை முகம்.

படிப்பகம்